22. தேசாக்ஷரி
23. மாளவி
24. சாவேரி
25. தேசி
26. சாரங்கம்
27. தோடி
28. இராமக்கிரியை
29. வேளாவளி
30. பைரவி
31. குண்டக்கிரியை
32. தன்னியாசி

அபிதான சிந்தாமணி[7] என்ற பொருளகராதி நூலிலும் இந்த 32 தலைமை பெற்ற இராகங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த 32 தலைமைபெற்ற இராகங்களில் 8 இராகங்கள் புருட இராகங்கள் என்றும், 24 இராகங்கள் 'ஸ்திரீ இராகங்கள்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| புருட இராகம் | ஸ்திரீ இராகம் |
|---|---|
| 1. பைரவி | 1. தேவக்கிரியை |
| | 2. மேகவிரஞ்சி |
| | 3. குறிஞ்சி |
| 2. பூபாளம் | 1. வேளாவளி |
| | 2. மலகரி |
| | 3. பௌளி |
| 3. சீராகம் | 1. இந்தோளம் |
| | 2. பல்லதி |
| | 3. சாவேரி |
| 4. படமஞ்சரி | 1. தேசி |
| | 2. இலலிதை |
| | 3. தோடி |
| 5. வசந்தம் | 1. இராமக்கிரியை |
| | 2. வராளி |
| | 3. கைசிகம் |
| 6. மாளவி | 1. குண்டக்கிரியை |
| | 2. நாராயணி |
| | 3. கூர்ச்சரி |

| புருட இராகம் | ஸ்திரீ இராகம் |
| --- | --- |
| 7. பங்காளம் | 1. தன்னியாசி |
| | 2. காம்போதி |
| | 3. கௌளி |
| 8. நாட்டை | 1. தேசாட்சரி |
| | 2. காந்தாரம் |
| | 3. சாரங்கம் |

மேலும் சோக உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு ஆகிரி, கண்டாரவம், நீலாம்பரி, பியாகடை, புன்னாகவராளி, வராளி ஆகிய இராகங்களும், மகிழ்ச்சியைத் தெரிவிக்க காம்போதி, தன்னியாசி, சாவேரி ஆகிய இராகங்களும், வீர உணர்ச்சியைப் பிரதிபலிப்பதற்கு நாட்டை இராகமும் பயன்படுத்தப்பட்டன என்று இந்நூல் ஆசிரியர் கூறியிருக்கிறார். அக்காலத்தில் விடியற்கால நேரத்தில் இந்தோளம், இராமகலி, நாட்டை, பூபாளம் ஆகிய இராகங்களும், மாலை நேரத்தில் கல்யாணி, காபி, கன்னடம், காம்போதி ஆகிய இராகங்களும், நடுமத்தியான நேரத்தில் சாரங்கம், தேசாட்சரி இராகங்களும், நடுநிசி நேரத்தில் ஆகிரி இராகமும் பாடப்பட்டதாகத் தெரிகிறது.

**பூர்வ தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த 32 தாய் இராகங்கள் :**

வேங்கடமகி வாழ்ந்த 17-ம் நூற்றாண்டிற்கு முன்புள்ள காலத்தில் பூர்வ தமிழ் மக்கள் 32 தாய் இராகங்களையே பாடி வந்தனர் என 'பூர்வீக சங்கீத உண்மை'[8] என்ற நூலில் நாகசுர வித்துவான் திரு. எம். கே. எம். பொன்னுச்சாமிபிள்ளை கூறியிருக்கிறார்.

**32 தாய் இராகங்கள் அமைக்கப்பட்ட முறை :**

| | | |
| --- | --- | --- |
| துத்தம் அல்லது ரிஷபம் | — | சுத்த ரிஷபம், சதுச்ருதி ரிஷபம் என இரண்டு வகைப்படும். |
| கைக்கிளை அல்லது காந்தாரம் | — | சாதாரண காந்தாரம், அந்தர காந்தாரம் என இருவகைப்படும் |
| விளரி அல்லது தைவதம் | — | சுத்த தைவதம், சதுச்ருதி தைவதம் என இருவகைப்படும். |
| தாரம் அல்லது நிஷாதம் | — | கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம் என இருவகைப்படும். |

ரிஷபம், காந்தாரம் ஆகிய ஒவ்வொரு சுரத்திலும் இரண்டு பேதங்களாக நான்கு பேதங்கள் இவ்வாறு உண்டாகின்றன.

1. சுத்த ரிஷபமும் சாதாரண காந்தாரமும்.
2. சுத்த ரிஷபமும் அந்தர காந்தாரமும்.
3. சதுச்ருதி ரிஷபமும் சாதாரண காந்தாரமும்.
4. சதுச்ருதி ரிஷபமும் அந்தர காந்தாரமும்.

இதேபோல் பஞ்சமத்திற்கு மேலே உள்ள சுரங்களான தைவதம், நிஷாதம் ஆகிய ஒவ்வொரு சுரத்திலும் இரண்டு பேதங்களாக நான்கு பேதங்கள் உண்டாகின்றன.

1. சுத்த தைவதமும் கைசிகி நிஷாதமும்.
2. சுத்த தைவதமும் காகலி நிஷாதமும்.
3. சதுச்ருதி தைவதமும் கைசிகி நிஷாதமும்.
4. சதுச்ருதி தைவதமும் காகலி நிஷாதமும்.

ரிஷபம், காந்தாரம் ஆகிய சுரங்களின் நான்கு பேதங்கள் ஒவ்வொன்றிற்கும் தைவதம், நிஷாதம் ஆகிய சுரங்களில் நான்கு பேதங்கள் ஏற்படும்பொழுது $4 \times 4 = 16$ பேதங்கள் ஏற்படுகின்றன. சுத்த மத்யமம், பிரதி மத்யமம், என்னும் மத்யமத்தின் இரு பேதங்களால் $16 \times 2 = 32$ இராகங்கள் உண்டாகின்றன.

### பூர்வ தமிழ்நாட்டில் வழங்கிவந்த 32 தாய் இராகங்கள்

| | இராகங்கள் | சுரங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அனுமத்தோடி | ச | ரி$^2$ | க$^4$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^4$ | ச் |
| 2. | தேனுக | ச | ரி$^2$ | க$^4$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^6$ | ச் |
| 3. | நாடகப்ரியை | ச | ரி$^2$ | க$^4$ | ம$^2$ | ப | த$^4$ | நி$^4$ | ச் |
| 4. | கோகிலப்ரியை | ச | ரி$^2$ | க$^4$ | ம$^2$ | ப | த$^4$ | நி$^6$ | ச் |
| 5. | வகுளாபரணம் | ச | ரி$^2$ | க$^6$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^4$ | ச் |
| 6. | மாயாமாளவகௌளை | ச | ரி$^2$ | க$^6$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^6$ | ச் |
| 7. | சக்ரவாகம் | ச | ரி$^2$ | க$^6$ | ம$^2$ | ப | த$^4$ | நி$^4$ | ச் |
| 8. | சூர்யகாந்தம் | ச | ரி$^2$ | க$^6$ | ம$^2$ | ப | த$^4$ | நி$^6$ | ச் |

| இராகங்கள் | | சுரங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | நடபைரவி | ச | ரி$^4$ | க$^4$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^4$ | ச் |
| 10. | கீரவாணி | ச | ரி$^4$ | க$^4$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^6$ | ச் |
| 11. | கரகரப்ரியை | ச | ரி$^4$ | க$^4$ | ம$^2$ | ப | த$^4$ | நி$^4$ | ச் |
| 12. | கௌரீமனோகரி | ச | ரி$^4$ | க$^4$ | ம$^2$ | ப | த$^4$ | நி$^6$ | ச் |
| 13. | சாருகேசி | ச | ரி$^4$ | க$^6$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^4$ | ச் |
| 14. | சரசாங்கி | ச | ரி$^4$ | க$^6$ | ம$^2$ | ப | த$^2$ | நி$^6$ | ச் |
| 15. | அரிகாம்போதி | ச | ரி$^4$ | க$^6$ | ம$^2$ | ப | த$^4$ | நி$^4$ | ச் |
| 16. | தீரசங்கராபரணம் | ச | ரி$^4$ | க$^6$ | ம$^2$ | ப | த$^4$ | நி$^6$ | ச் |
| 17. | பவப்ரியா | ச | ரி$^2$ | க$^1$ | ம$^4$ | ப | த$^2$ | நி$^4$ | ச் |
| 18. | சுபபந்துவராளி | ச | ரி$^2$ | க$^4$ | ம$^4$ | ப | த$^2$ | நி$^6$ | ச் |
| 19. | ஷட்விதமார்கினி | ச | ரி$^2$ | க$^4$ | ம$^4$ | ப | த$^4$ | நி$^4$ | ச் |
| 20. | சுவர்ணாங்கி | ச | ரி$^2$ | க$^4$ | ம$^4$ | ப | த$^4$ | நி$^6$ | ச் |
| 21. | நாயநாராயணி | ச | ரி$^2$ | க$^6$ | ம$^4$ | ப | த$^2$ | நி$^4$ | ச் |
| 22. | காமவர்த்தினி | ச | ரி$^2$ | க$^6$ | ம$^4$ | ப | த$^2$ | நி$^6$ | ச் |
| 23. | ராமப்ரியா | ச | ரி$^2$ | க$^6$ | ம$^4$ | ப | த$^4$ | நி$^4$ | ச் |
| 24. | கமனப்ரியா | ச | ரி$^2$ | க$^6$ | ம$^4$ | ப | த$^1$ | நி$^6$ | ச் |
| 25. | ஷண்முகப்ரியை | ச | ரி$^4$ | க$^4$ | ம$^4$ | ப | த$^2$ | நி$^4$ | ச் |
| 26. | ஸிம்மேந்திர மத்யமம் | ச | ரி$^4$ | க$^4$ | ம$^4$ | ப | த$^2$ | நி$^6$ | ச் |
| 27. | ஹேமவதி | ச | ரி$^4$ | க$^4$ | ம$^4$ | ப | த$^4$ | நி$^4$ | ச் |
| 28. | தர்மவதி | ச | ரி$^4$ | க$^4$ | ம$^4$ | ப | த$^4$ | நி$^6$ | ச் |
| 29. | ரிஷபப்ரியா | ச | ரி$^4$ | க$^5$ | ம$^4$ | ப | த$^2$ | நி$^1$ | ச் |
| 30. | லதாங்கி | ச | ரி$^4$ | க$^6$ | ம$^4$ | ப | த$^2$ | நி$^6$ | ச் |
| 31. | வாசஸ்பதி | ச | ரி$^4$ | க$^6$ | ம$^4$ | ப | த$^4$ | நி$^4$ | ச் |
| 32. | மேசகல்யாணி | ச | ரி$^4$ | க$^6$ | ம$^4$ | ப | த$^4$ | நி$^6$ | ச் |

**72 மேளகர்த்தா இராகங்கள் :**

பதினேழாம் நூற்றாண்டில் தஞ்சையில் அரசாண்ட விஜயராகவ நாயக்கரிடம் (1633—1673) அமைச்சராகப் பணியாற்றிய வேங்கடமகி

என்பவர் 1660-ம் ஆண்டு ''சதுர்த்தண்டிப் பிரகாசிகை'' என்னும் இசை இலக்கண நூலை இயற்றினார். இந்நூல் வீணை, சுருதி, சுரம், மேளம், இராகம், ஆலாபனை, தாயம், கீதம், பிரபந்தம், தாளம் முதலியவற்றை விளக்கும் பத்து அத்தியாயங்கள் கொண்டது. 72 மேளகர்த்தா இராகங்களை முதன்முதலாக அமைத்தவர் இவர்தான்[9]. இவர் பல கீதங்களையும் பிரபந்தங்களையும் இயற்றியிருக்கிறார். திருவாரூர் தியாகராஜப்பெருமான் பேரில் 24 அஷ்டபதிகள் இவர் எழுதியிருக்கிறார். இசை, வடமொழி, சோதிடம் போன்ற பல்வேறு துறைகளில் இவர் புலமை பெற்றிருந்தார்.

வேங்கடமகி அமைத்த 72 மேளகர்த்தா இராகங்களில் 19 கர்த்தா இராகங்களே அக்காலத்தில் பிரசித்தமாக இருந்தன என்று இவர் கூறியிருக்கிறார். மீதமுள்ள 53 மேளகர்த்தா இராகங்கள் பிற்காலத்தில் பிரசித்தியாக வரக்கூடியவை என்று வேங்கடமகி குறிப்பிட்டிருக்கிறார்.

தஞ்சையை ஆண்ட முதலாவது துளஜா மன்னன் (1728—1736) எழுதிய ''சங்கீத சாராம்ருதம்'' என்னும் வடமொழி இசை நூலில் வேங்கடமகியின் 72 மேளகர்த்தா பற்றிக் கூறப்பட்டிருக்கிறதே தவிர 72 மேளகர்த்தா இராகங்களின் பெயர்கள் அதில் காணப்படவில்லை.

பதினெட்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த கோவிந்தாச்சாரியார் இயற்றிய ''சங்க்ரக சூடாமணி'' என்னும் வடமொழி இசை நூலில் தற்பொழுதுள்ள கனகாங்கி, ரத்னாங்கி முதலிய பெயர்கள் கொண்ட 72 மேளகர்த்தாக்களின் பெயர்கள் காணக்கிடக்கின்றன. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் இந்த முறையையே பின்பற்றினார் எனத் தெரிகிறது.

மேளகர்த்தா இராகம், மேள இராகம், கர்த்தா இராகம், சம்பூர்ண இராகம், தாய் இராகம் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. மேளகர்த்தா இராகங்களில் ஏழு சுரங்களும் ஆரோசையிலும், அமரோசையிலும் வரிசைக்கிரமமாக வரும். ஆரோசையியில் எந்த வகையான சுரங்கள் வருகின்றனவோ அதே வகையான சுரங்கள் அமரோசையிலும் வரும்.

**72 மேளகர்த்தா இராகங்கள் அமைக்கப்பட்ட முறை :**

துத்தம் அல்லது ரிஷபம், சுத்த ரிஷபம், சதுச்ருதி ரிஷபம், ஷட்சுருதி ரிஷபம் என மூன்று வகைப்படும்.

கைக்கிளை அல்லது காந்தாரம், சுத்த காந்தாரம், சாதாரண காந்தாரம், அந்தர காந்தாரம் என மூன்று வகைப்படும்.

இதில் சதுச்ருதி ரிஷபமும், சுத்த காந்தாரமும் ஒரே சுரம்தான். பெயர்கள்தான் வேறு. சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களும் ஒரு தாய் இராகத்தில் வரவேண்டும் என்பதற்காக இவ்வாறு பெயர் கொடுக்கப்பட்டு உள்ளது.

இதேபோல் ஷட்சுருதி ரிஷபமும், சாதாரண காந்தாரமும் ஒரே சுரம்தான்.

விளரி அல்லது தைவதம், சுத்த தைவதம், சதுச்ருதி தைவதம், ஷட்சுருதி தைவதம் என மூன்று வகைப்படும்.

தாரம் அல்லது நிஷாதம், சுத்த நிஷாதம், கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம் என மூன்று வகைப்படும்.

இதில் சதுச்ருதி தைவதமும், சுத்த நிஷாதமும் ஒரே சுரத்தைத்தான் குறிக்கின்றன. இதேபோல் ஷட்சுருதி தைவதமும், கைசிகி நிஷாதமும் ஒரே சுரம்தான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | சுத்த ரிஷபமும் சுத்த காந்தாரமும் | (ரி$^{2}$, க$^{2}$) |
| 2. | சுத்த ரிஷபமும் சாதாரண காந்தாரமும் | (ரி$^{2}$, க$^{4}$) |
| 3. | சுத்த ரிஷபமும் அந்தர காந்தாரமும் | (ரி$^{2}$, க$^{6}$] |
| 4. | சதுச்ருதி ரிஷபமும் சாதாரண காந்தாரமும் | (ரி$^{4}$, க$^{4}$) |
| 5. | சதுச்ருதி ரிஷபமும் அந்தர காந்தாரமும் | (ரி$^{4}$, க$^{6}$) |
| 6. | ஷட்சுருதி ரிஷபமும் அந்தர காந்தாரமும் | (ரி$^{6}$, க$^{6}$) |

| | | |
|---|---|---|
| 1. | சுத்த தைவதமும் சுத்த நிஷாதமும் | (த$^{2}$, நி$^{2}$) |
| 2. | சுத்த தைவதமும் கைசிகி நிஷாதமும் | (த$^{2}$, நி$^{4}$) |
| 3. | சுத்த தைவதமும் காகலி நிஷாதமும் | (த$^{2}$, நி$^{6}$) |
| 4. | சதுச்ருதி தைவதமும் கைசிகி நிஷாதமும் | (த$^{4}$, நி$^{4}$) |
| 5. | சதுச்ருதி தைவதமும் காகலி நிஷாதமும் | (த$^{4}$, நி$^{6}$) |
| 6. | ஷட்சுருதி தைவதமும் காகலி நிஷாதமும் | (த$^{6}$, நி$^{6}$) |

ரிஷபம், காந்தாரம் ஆகிய ஒவ்வொரு சுரத்திலும் மூன்று பேதங்களாக மொத்தம் ஆறு பேதங்கள் உண்டாகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் பஞ்சமத்திற்கு மேலே உள்ள சுரங்களான தைவதத்திற்கும் நிஷாதத்திற்கும் ஏற்படும் ஆறு பேதங்கள் உண்டாவதைக் கணக்கிடும்போது $6 \times 6 = 36$ பேதங்கள் அல்லது இராகங்கள் ஏற்படுகின்றன. சுத்த மத்யமம், பிரதி மத்யமம் என்னும் மத்யமத்தின் இருபேதங்களால் $36 \times 2 = 72$ இராகங்கள் உண்டாகின்றன.

**விவாதி மேளங்கள் :**

சுத்த காந்தாரம், ஷட் சுருதி ரிஷபம், சுத்த நிஷாதம், ஷட்சுருதி தைவதம் என்னும், நான்கு சுரங்களும் விவாதி சுரங்கள் என்று அழைக்கப் படுகின்றன. இந்த நான்கு விவாதி சுரங்களில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு சுரங்கள் வரும் மேளத்திற்கு விவாதி மேளம் என்று பெயர். இரண்டு விவாதி சுரங்களுக்கு மேல் ஒரு மேளத்தில் வராது. இரண்டு விவாதி சுரங்கள் வந்தால் அதில் ஒன்று ஓர் இயக்கின் முற்பகுதியிலும் (பூர்வாங்கம்), மற்றொன்று பிற்பகுதியிலும் (உத்தராங்கம்) வரும். விவாதி மேளங்களின் மொத்த எண்ணிக்கை நாற்பது ஆகும். இரண்டு விவாதி சுரங்கள் வரும் மேளங்கள் எட்டு ஆகும். அவைகளின் எண்கள் 1, 6, 31, 36, 37, 42, 67, 72 ஆகும். மீதமுள்ள முப்பத்திரண்டு மேளங்களிலும் விவாதி சுரங்கள் வரா.

**கிளை இராகங்கள் :**

மேளகர்த்தா இராகங்கள் அல்லது தாய் இராகங்களில் பிறந்த இராகங்களைக் கிளை இராகங்கள் அல்லது ஜன்னிய இராகங்கள் என்று அழைக்கிறோம். ஒவ்வொரு மேளகர்த்தா இராகத்திலிருந்தும் பல கிளை இராகங்கள் பிறந்திருக்கின்றன. தாய் இராகத்தில் எந்த வகையான சுரங்கள் வருகின்றனவோ அவையே கிளை இராகங்களிலும் வரும். உதாரணமாக அம்சத்தொனி இராகத்தை எடுத்துக்கொள்வோம். இது 29-வது தாய் இராகமான தீரசங்கராபரணத்தில் பிறந்தது. தீரசங்கராபரணத்தில் வரும் துத்தம் (ரிஷபம்), கைக்கிளை (காந்தாரம்), தாரம் (நிஷாதம்) ஆகிய சுரங்களே அம்சத்தொனி இராகத்திலும் வருகின்றன.

**மூன்றுவகை கிளை இராகங்கள் :**

கிளை இராகங்கள் வர்ஜ இராகங்கள், வக்கிர இராகங்கள், பாஷாங்க இராகங்கள் என மூன்று வகைப்படும்.

**வர்ஜ இராகம்[10] :**

ஓர் இராகத்தின் ஆரோசையிலாவது, அமரோசையிலாவது அல்லது இரண்டிலுமாவது ஒரு சுரம் அல்லது இரண்டு சுரங்கள் விலக்கப்பட்டிருந்தால் அது வர்ஜ இராகம் என்று அழைக்கப்படுகிறது. ஆறு சுரங்களையுடைய ஆரோசை அல்லது அமரோசைக்கு பண்ணியல்[11] அல்லது ஷாடவம் என்று பெயர். ஐந்து சுரங்களையுடைய ஆரோசை அல்லது அமரோசைக்கு திறம் அல்லது ஔடவம் என்று பெயர். மூன்று சுரங்கள் விலக்கப்பட்ட கிளை இராகங்களுக்குத் திறத்திறம் அல்லது சுராந்தரம் என்று பெயர். மூன்று சுரங்கள் விலக்கப்பட்ட கிளை இராகங்கள் மிகவும் சொற்பமானவை.

உதாரணம் : 28 வது மேளமாகிய அரிக்காம்போதியில் பிறந்த நவரசக் கன்னடா இராகம்.

ஆரோசை — ச க ம ப ச்
அமரோசை — ச் நி த ம க ரி ச

ஓர் இராகத்தின் ஆரோசையிலாவது அல்லது அமரோசையிலாவது ஏழு சுரங்கள் வந்தால் அதைப் 'பண்' அல்லது 'சம்பூரணம்' என்று கூறுகிறோம்.

**வர்ஜ இராகங்களின் வகைகள் :**

வர்ஜ இராகங்கள் எட்டு வகைப்படும். அவையாவன:

1. பண்ணியல்—பண் (ஷாடவ—சம்பூரணம்)
ஆரோசையில் ஆறு சுரங்களும், அமரோசையில் ஏழு சுரங்களும் வரும்.

உதாரணம் : 28-வது தாய் இராகமான அரிகாம்போதியில் பிறந்த காம்போதி இராகம்.

ஆ. ச ரி க ம ப த ச்
அ. ச் நி த ப ம க ரி ச

2. பண்—பண்ணியல் (சம்பூரண—ஷாடவம்)
ஆரோசையில் ஏழு சுரங்களும் அமரோசையில் ஆறு சுரங்களும் வரும்.

உதாரணம் : 17-வது மேளகர்த்தாவான சூரியகாந்தம் இராகத்தில் பிறந்த பைரவம் இராகம்.

ஆ. ச ரி க ம ப த நி ச்
அ. ச் தா ப ம க ரி ச

3. திறம்—பண் (ஔடவ—சம்பூரணம்)
ஆரோசையில் ஐந்து சுரங்களும், அமரோசையில் ஏழு சுரங்களும் வரும்.

உதாரணம்[12] : 29-வது மேளமான தீர சங்கராபரணத்தில் பிறந்த பிலகரி இராகம்.

ஆ, ச ரி க ப த ச்
அ. ச் நி த ப ம க ரி ச

4. பண்—திறம் (சம்பூரண—ஔடவம்)
ஆரோசையில் ஏழு சுரங்களும், அமரோசையில் ஐந்து சுரங்களும் கொண்ட இராகம்.

உதாரணம்: 20-வது தாய் இராகமான நடபைரவியில் பிறந்த சாரமதி இராகம்.
ஆ. ச ரி க ம ப த நி ச்
அ. ச் நி த ம க ச

5. பண்ணியல்—பண்ணியல் (ஷாடவ—ஷாடவம்) ஆரோசையிலும் அமரோசையிலும் ஆறு சுரங்கள் வரும்.

உதாரணம்: 22-வது கர்த்தா இராகமான கரகரப்ரியாவில் பிறந்த ஸ்ரீரஞ்சனி இராகம்.
ஆ. ச ரி க ம த நி ச்
அ. ச் நி த ம க ரி ச

6. பண்ணியல்—திறம் (ஷாடவ ஔடவம்)
ஆரோசை ஆறு சுரங்கள் கொண்டது.
அமரோசை ஐந்து சுரங்கள் கொண்டது.

உதாரணம்: 28-வது மேளகர்த்தாவான அரிகாம்போதியில் பிறந்த நாட குறிஞ்சி இராகம்.
ஆ. ச ரி க ம த நி ச்
அ. ச் நி த ம க ச

7. திறம்—திறம் (ஔடவ—ஔடவம்)
ஆரோசையிலும், அமரோசையிலும் ஐந்து சுரங்கள் வரும்.
உதாரணம்: 28வது தாய் இராகமான அரிகாம்போதியில் பிறந்த மோகன இராகம்.
ஆ. ச ரி க ப த ச்
அ. ச் த ப க ரி ச

8. திறம்—பண்ணியல் (ஔடவ—ஷாடவம்)
ஆரோசையில் ஐந்து சுரங்களும், அமரோசையில் ஆறு சுரங்களும்
உதாரணம்: 15வது மேளகர்த்தாவான மாயாமாளவகௌளை இராகத்தில் பிறந்த மலகரி இராகம்.
ஆ. ச ரி ம ப த ச்
அ. ச் த ப ம க ரி ச

**வக்கிர இராகம் :**

ஓர் இராகத்தின் ஆரோசையிலாவது, அமரோசையிலாவது அல்லது இரண்டிலுமாவது சுரங்கள் நேராய் வராமல், திரிந்து வரும் இராகங்கள் வக்கிர இராகங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

வக்கிர இராகங்களைப் ''பிறழ்ச்சிப் பண்கள்[13]'' என்றும் அழைக்கலாம். வக்கிர இராகங்கள் மூன்று வகைப்படும்.

1) ஆரோசையில் மட்டும் வக்கிரம் வருவது.

உதாரணம்[14] : 20-வது மேளகர்த்தாவான நடபைரவி இராகத்தில் பிறந்த ஆனந்த பைரவி இராகம்.

ஆ. ச க ரி க ம ப த ப ச்
அ. ச் நி த ப ம க ரி ச

2. அமரோசையில் மட்டும் வக்கிரம் வருவது.

உதாரணம் : 65வது தாய் இராகமான மேசகல்யாணியில் பிறந்த சாரங்க இராகம்.

ஆ. ச ரி க ம ப த நி ச்
அ. ச் நி த ப ம ரி க ம ரி ச

3. ஆரோசை, அமரோசை ஆகிய இரண்டிலும் வக்கிரம் வருவது.

உதாரணம்: 28வது மேளமான அரிகாம்போதியில் பிறந்த சஹானா இராகம்.

ஆ. ச ரி க ம ப ம தா நி ச்
அ. ச் நி த ப ம கா ம ரீ க ரி ச

**பாஷாங்க இராகங்கள் :**

சில கிளை இராகங்களில், அவைகளின் தாய் இராகங்களில் வராத சுரங்கள் இன்சுவையின் (ரஞ்சகம்) பொருட்டு வருகின்றன. இவ்வகையான கிளை இராகங்கள் பாஷாங்க இராகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை ''இடைப்பிறவரல் பண்கள்''[15] என்றும் அழைக்கப்படுகின்றன.

உதாரணம் : 65வது மேளகர்த்தாவான மேசகல்யாணி இராகத்தில் பிறந்த சாரங்க இராகம்.

ஆ. ச ரி க ம ப த நி ச்
அ. ச் நி த ப ம ரி க ம ரி ச

இந்த இராகத்தில் ரி க ம ரி ச என்ற வழக்கில் (பிரயோகம்) அன்னிய சுரமாகிய சுத்த மத்யமம் வருகிறது. ஆகவே சாரங்க இராகம் ஒரு பாஷாங்க இராகமாகிறது.

பைரவி, பிலகரி, சாரங்க, காம்போதி, நீலாம்பரி போன்ற இராகங்களை பாஷாங்க இராகத்தின் உதாரணங்களாகக்கொள்ளலாம்.

தாய் இராகத்தின் சுரங்களையே கொண்டுவரும் கிளை இராகங்களுக்கு உபாங்க இராகங்கள் என்று பெயர்.

**பாஷாங்க இராகங்களின் வகைகள் :**

பாஷாங்க இராகங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. ஏகான்ய சுர பாஷாங்க இராகம்—ஓர் அன்னிய சுரத்தை உடைய பாஷாங்க இராகம்.

   உதாரணம்: பைரவி, முகாரி, சாரங்க

2. துவி அன்னிய சுர பாஷாங்க இராகம்—இரண்டு அன்னிய சுரங்களை உடைய பாஷாங்க இராகம்.

   உதாரணம்: இந்துஸ்தான் பேஹாக்.

3. திரி அன்னிய சுர பாஷாங்க இராகம்—மூன்று அன்னிய சுரங்களை உடைய பாஷாங்க இராகம்.

   உதாரணம்: இந்துஸ்தான் காபி.

பாஷாங்க இராகங்கள் மற்றொரு முறையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

1. ஆரோசை, அமரோசையிலேயே அன்னிய சுரத்தை உடைய பாஷாங்க இராகங்கள்.

   உதாரணம்: பைரவி. முகாரி, சாரங்க

2. ஆரோசை, அமரோசை சுரங்களைப் பாடும்போது அன்னிய சுரம் ஒலிக்காமல் இராகத்தின் போக்குகளில் (சஞ்சாரம்) மட்டும் அன்னிய சுரம் ஒலிக்கும் பாஷாங்க இராகம்.

   உதாரணம்: காம்போதி, பிலகரி, நீலாம்பரி.

காம்போதி இராகத்தில் ச்ா நி ப த ச்ா என்னும் வழக்கில் (பிரயோகம்) மட்டும் அன்னிய சுரமான காகலி நிஷாதம் வருகிறது.

**கிளை இராகங்களின் எண்ணிக்கை :**

ஒரு மேளகர்த்தா அல்லது தாய் இராகத்தில் வர்ஜ, வக்கிர பேதங்கள் மூலம் எண்ணற்ற கிளை இராகங்கள் பிறக்கின்றன. வர்ஜ பேதங்கள் மூலம் உண்டாகும் கிளை இராகங்களைக் காண்போம்.

முதலாவதாக பண்ணியல்—பண் (ஷாடவ—சம்பூரணம்) இராகங்களை எடுத்துக்கொள்வோம். பண்ணியல்—பண் முறையில் ஆறு கிளை இராகங்கள் இவ்வாறு பிறக்கின்றன.

| | ஆரோசை | அமரோசை |
|---|---|---|
| 1. | ச ரி க ம ப த ச் | ச் நி த ப ம க ரி ச |
| 2. | ச ரி க ம ப நி ச் | ,, ,, |
| 3. | ச ரி க ம த நி ச் | ,, ,, |
| 4. | ச ரி க ப த நி ச் | ,, ,, |
| 5. | ச ரி ம ப த நி ச் | ,, ,, |
| 6. | ச க ம ப த நி ச் | ,, ,, |

இதேபோல் பண்—பண்ணியல் முறையிலும் (சம்பூரண—ஷாடவம்) ஆறு கிளை இராகங்கள் பிறக்கின்றன.

திறம்—பண் (ஔடவ—சம்பூரண) முறையில் இவ்வாறு 15 கிளை இராகங்கள் பிறக்கின்றன.

| | ஆரோசை | அமரோசை |
|---|---|---|
| 1. | ச ரி க ம ப ச் | ச் நி த ப ம க ரி ச |
| 2. | ச ரி க ம த ச் | ,, ,, |
| 3. | ச ரி க ம நி ச் | ,, ,, |
| 4. | ச ரி க ப த ச் | ,, ,, |
| 5. | ச ரி க ப நி ச் | ,, ,, |
| 6. | ச ரி க த நி ச் | ,, ,, |
| 7. | ச ரி ம ப த ச் | ,, ,, |
| 8. | ச ரி ம ப நி ச் | ,, ,, |
| 9. | ச ரி ம த நி ச் | ,, ,, |
| 10. | ச ரி ப த நி ச் | ,, ,, |

| | ஆரோசை | அமரோசை |
|---|---|---|
| 11. | ச க ம ப த ச் | ச் நி த ப ம க ரி ச |
| 12. | ச க ம ப நி ச் | ,, ,, |
| 13. | ச க ம த நி ச் | ,, ,, |
| 14. | ச க ப த நி ச் | ,, ,, |
| 15. | ச ம ப த நி ச் | ,, ,, |

இதேபோல் பண்—திறம் (சம்பூரண—ஔடவம்) முறையில் 15 கிளை இராகங்கள் கிடைக்கின்றன.

பண்ணியல்—பண்ணியல் (ஷாடவ—ஷாடவம்) இராகங்கள் இவ்வாறு பிறக்கின்றன.

| | ஆரோசை | அமரோசை |
|---|---|---|
| 1. | ச ரி க ம ப த ச் | ச் த ப ம க ரி ச |
| 2. | ச ரி க ம ப நி ச் | ச் நி ப ம க ரி ச |
| 3. | ச ரி க ம த நி ச் | ச் நி த ம க ரி ச |
| 4. | ச ரி க ப த நி ச் | ச் நி த ப க ரி ச |
| 5. | ச ரி ம ப த நி ச் | ச் நி த ப ம ரி ச |
| 6. | ச க ம ப த நி ச் | ச் நி த ப ம க ச |

ஆரோசையில் வரும் ஒவ்வொரு சுரத்தொடருடன்கூட அமரோசையில் உள்ள ஆறு சுரத்தொடர்களும் வரலாம். ஆகவே $6 \times 6 = 36$. பண்ணியல்—பண்ணியல் (ஷாடவ—ஷாடவம்) இராகங்கள் பிறக்கின்றன.

திறம்—திறம் (ஔடவ—ஔடவம்) இராகங்கள் இவ்வாறு உண்டாகின்றன.

| | ஆரோசை | அமரோசை |
|---|---|---|
| 1. | ச ரி க ம ப ச் | ச் ப ம க ரி ச |
| 2. | ச ரி க ம த ச் | ச் த ப க ரி ச |
| 3. | ச ரி க ம நி ச் | ச் நி ம க ரி ச |
| 4. | ச ரி க ப த ச் | ச் த ப க ரி ச |
| 5. | ச ரி க ப நி ச் | ச் நி ப க ரி ச |
| 6. | ச ரி க த நி ச் | ச் நி த க ரி ச |

| ஆரோசை | அமரோசை |
|---|---|
| 7. ச ரி ம ப த ச் | ச் த ப ம ரி ச |
| 8. ச ரி ம ப நி ச் | ச் நி ப ம ரி ச |
| 9. ச ரி ம த நி ச் | ச் நி த ம ரி ச |
| 10. ச ரி ப த நி ச் | ச் நி த ப ரி ச |
| 11. ச க ம ப த ச் | ச் த ப ம க ச |
| 12. ச க ம ப நி ச் | ச் நி ப ம க ச |
| 13. ச க ம த நி ச் | ச் நி த ம க ச |
| 14. ச க ப த நி ச் | ச் நி த ப க ச |
| 15. ச ம ப த நி ச் | ச் நி த ப ம ச |

ஆரோசையில் வரும் ஒவ்வொரு சுரத்தொடருடன் கூட அமரோசையில் உள்ள 15 சுரத்தொடர்களும் வரலாம். ஆகவே $15 \times 15 = 225$ திறம்—திறம் கிளை இராகங்கள் பிறக்கின்றன.

திறம்—பண்ணியல் (ஒளடவ—ஷாடவம்) இராகங்கள் $15 \times 6 = 90$ கிளை இராகங்கள் கிடைக்கின்றன.

இதேபோல் பண்ணியல்—திறம் (ஷாடவ—ஒளடவம்) இராகங்கள் $6 \times 15 = 90$ கிளை இராகங்கள் உண்டாகின்றன.

**ஒரு தாய் இராகத்தில் பிறக்கும் வர்ஜ இராகங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | பண்ணியல்—பண் (ஷாடவ—சம்பூரணம்) இராகங்கள் — | 6 |
| 2. | பண்—பண்ணியல் (சம்பூரண—ஷாடவம்) இராகங்கள் — | 6 |
| 3. | திறம்—பண் (ஒளடவ—சம்பூரணம்) இராகங்கள் — | 15 |
| 4. | பண்—திறம் (சம்பூரண—ஒளடவம்) இராகங்கள் — | 15 |
| 5. | பண்ணியல்—பண்ணியல் (ஷாடவ—ஷாடவம்) இராகங்கள் — | 36 |
| 6. | திறம்—திறம் (ஒளடவ—ஒளடவம்) இராகங்கள் — | 225 |
| 7. | திறம்—பண்ணியல் (ஒளடவ—ஷாடவம்) இராகங்கள் — | 90 |
| 8. | பண்ணியல்—திறம் (ஷாடவ—ஒளடவம்) இராகங்கள் — | 90 |
| | வர்ஜ இராகங்கள் மொத்தம் | 483 |

வர்ஜ பேதங்கள் மூலம் கிடைக்கும் மொத்த கிளை இராகங்கள் 483 ஆகும். இதில் ஆரோசையிலோ அமரோசையிலோ நான்கு சுரங்கள் வரும் சுராந்தர இராகங்கள் சேர்க்கப்படவில்லை.

**வக்கிர பேதங்கள் மூலம் கிடைக்கும் கிளை இராகங்கள் :**[16]

*சம்பூரண இராகத்தில் 38 வக்கிர பேதமுள்ள இராகங்கள் கிடைக்கின்றன. பண்ணியல்—பண்ணியல் (ஷாடவ—ஷாடவம்) இராகங்களில் வக்கிர பேதங்களினால் 144 கிளை இராகங்கள் பிறக்கின்றன. இதேபோல் திறம்—திறம் (ஔடவ—ஔடவம்) இராகங்களில் வக்கிர பேதங்களினால் 210 கிளை இராகங்கள் உண்டாகின்றன.*

**வர்ஜ—வக்கிர பேதங்கள் மூலம் கிடைக்கும் கிளை இராகங்கள் :**

*முன்பு குறிப்பிட்ட வக்கிர பேதங்கள் பல்வேறு வர்ஜ பேதங்களோடு சேர்ந்து வரும் போது 1, 71, 395 கிளை இராகங்கள் ஒரு மேளகர்த்தா இராகத்தில் பிறக்கின்றன. (பின்வரும் அட்டவணையைப் பார்க்கவும்.)*

*72 மேளகர்த்தா இராகங்களில் 72×1, 71, 395=1, 23, 40, 440 கிளை இராகங்கள் பிறக்கின்றன. இதனோடு 72 மேளகர்த்தா இராகங்களையும் சேர்க்கும்போது மொத்த இராகங்களின் எண்ணிக்கை 1, 23, 40, 512 ஆகிறது. இதில் சுராந்தர இராகங்களும், பாஷாங்க இராகங்களும் சேர்க்கப் படவில்லை. அவைகளையும் சேர்த்தால் பலகோடி கிளை இராகங்கள் பிறக்கும்.*

**சம்பூரண, வர்ஜ (ஷாடவ, ஔடவ) வக்கிர இராகங்களின் மொத்த எண்ணிக்கை :**[17]

| எண். | இராக வகைகள் | எண்ணிக்கை | ஷாடவ ஷாடவம் | ஔடவ ஔடவம் | வக்கிர சம்பூர்ணம் | வக்கிர ஷாடவம் | வக்கிர ஔடவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சம்பூரணம் | 1 | 6 | 15 | 38 | 144 | 210 | 414 |
| 2. | ஷாடவ ஷாடவம் | 6 | 36 | 90 | 228 | 864 | 1,260 | 2,484 |
| 3. | ஔடவ ஔடவம் | 15 | 90 | 225 | 570 | 2,160 | 3,150 | 6,210 |
| 4. | வக்கிர சம்பூர்ணம் | 38 | 228 | 570 | 1,444 | 5,472 | 7,980 | 15,732 |
| 5. | வக்கிர ஷாடவம் | 144 | 864 | 2,160 | 5,472 | 20,736 | 30,240 | 59,616 |
| 6. | வக்கிர ஔடவம் | 210 | 1,260 | 3,150 | 7,980 | 30 240 | 44,100 | 86,940 |
| | மொத்தம் | 414 | 2,484 | 6,210 | 15,732 | 59,616 | 86,940 | 1,71 396 |

1. ஆதாரம் : பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி எழுதிய "South Indian Music" Book—VI (பக்கம் 141—178)

2. ஆதாரம் : "History of South Indian Music" by R. Rangaramanuja Iyyengar (Page 60)

3. ஒரே வகையான சுரங்கள் உள்ள இராகங்களுக்கு மேளம் அல்லது தொகுதி என்று பெயர் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு தொகுதிக்கும் அதில் பிரசித்மாக இருக்கும் இராகத்தின் பெயர் கொடுக்கப்பட்டது.
ஆதாரம் : சாஸ்திரீய சங்கீதம்—முதல் பாகம்—திரு. கே. வாசுதேவ சாஸ்திரி இயற்றியது.

4. ஆதாரம் : கருணாமிர்த சாகரம்—முதல் புத்தகம்—(பக்கம் 623).

5. ஆதாரம் : ஆர். ரங்கராமானுஜ ஐயங்கார் இயற்றிய "History of South Indian Music" பக்கம் 168.

6. ஆதாரம் : கருணாமிர்த சாகரம் முதல் நூல் (பக்கம் 632 முதல் 635 வரை).

7. அபிதான சிந்தாமணி என்னும் பொருளகராதி நூல் (கலைக்களஞ்சியம்) ஆ. சிங்காரவேலு முதலியாரால் 1910-ம் ஆண்டு வெளியிடப்பெற்றது. ஆயிரம் பக்கங்களுக்கு மேல்கொண்ட இந்நூலில் பரதம் என்ற சொல்லின் தலைப்பின் கீழ் பூர்வ காலத்தில் வழக்கில் இருந்த 32 தலைமைபெற்ற இராகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இராகங்கள் பற்றிய வேறு பல விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

8. "பூர்வீக சங்கீத உண்மை" என்ற நூல் மைசூர் சமஸ்தான வித்துவான் மதுரை நாகசுரம் எம். கே. எம். பொன்னுச்சாமிபிள்ளையால் 1930-ம் ஆண்டு வெளியிடப்பெற்றது. கருணாமிர்த சாகரம் இரண்டாவது நூல் 96-ம் பக்கத்தில் பழந்தமிழ் நாட்டில் வழக்கிலிருந்த 32 தாய் இராகங்கள் கொண்ட அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

9. வேங்கடமகி அமைத்துள்ள 72 மேளகர்த்தா இராகங்களைப் பற்றிய விவரங்களை சென்னைப்பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். சீதா எழுதிய "Tanjore as a Seat of Music" என்ற ஆய்வு நூலிலும் (பக்கம் 408—426) இசைப்பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி இயற்றிய "The History of Indian Music" (பக்கம் 40—45) என்ற நூலிலும் காணலாம்.

10. வர்ஜ இராகத்தை "ஒருஉப்பண்" என அழைக்கலாம் என டாக்டர் வீ. ப. கா. சுந்தரம் இயற்றிய "இசைத்துறைத் தமிழ்ச்சொற்கள்" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்கம் 22).

11. பண் நால்வகைப்படும் : பண், பண்ணியம், திறம், திறத்திறமென. சிலப்பதிகாரம் புறஞ்சேரியிறுத்தகாதை. செய்யுள். அடி 106. சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை, செய்யுள் அடி 46 — விளக்கவுரை அடியார்க்கு நல்லார்.

12. பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி இயற்றிய "கர்நாடக சங்கீத புத்தகம்" இரண்டாம் பாகம் பக்கம் 3-ல் வேறு பல உதாரணங்களையும் காணலாம்.

6A

13. ஆதாரம்: டாக்டர் வீ. ப. கா. சுந்தரம் இயற்றிய ''இசைத்துறைத் தமிழ்ச்சொற்கள்'' என்னும் நூல்—பக்கம் 24.

14. வேறுபல உதாரணங்கள் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி இயற்றிய ''கர்நாடக சங்கீத புத்தகம்'' இரண்டாவது பாகம் 5வது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

15. ஆதாரம்: ''இசைத்துறைத் தமிழ்ச்சொற்கள்''—நூல்—பக்கம்—27.

16. வக்கிர பேதங்கள் மூலம் கிடைக்கும் இராகங்கள் பற்றிய விவரங்களை கருணாமிர்த சாகரம் இரண்டாவது நூலில் காணலாம் (பக்கம் 17–36).

17. ஆதாரம்: கருணாமிர்த சாகரம்—இரண்டாவது புத்தகம்—பக்கம் 36.

# 8

# இராக ஆலாபனம்

இயலும், இசையும் கலந்து பாடலாகப் பாடுவதை எல்லா நாடுகளின் இசையிலும் நாம் காணலாம். சுரங்களையோ, பாடல்களையோ பாடாமல் இராகத்தை மட்டும் தனியாகப் பாடும் மரபு நம் பாரத நாட்டில் மட்டும் உண்டு. இவ்வாறு இராகத்தை மட்டும் பாடுவதை நாம் இராக ஆலாபனம்[1] என்று சொல்லுகிறோம். இராக்த்தை ஆலாபனம் செய்வது நம் நாட்டு இசையின் தனிச்சிறப்பாகும்.

**குருகுலப்பயிற்சி :**

முன்னாளில் இராகங்களை ஆலாபனம் செய்வதற்கு இசை மாணவர்கள் குருகுல முறையில் பல ஆண்டுகள் பயின்றனர். குரு எவ்வாறு இராகங்களை விரிவாக, கற்பனைத் திறனுடன் ஆலாபனம் செய்கிறார் என்பதை மாணவர்கள் தங்கள் குரு நிகழ்த்தும் இசை நிகழ்ச்சிகளில் கேட்டுக்கேட்டுத் தெரிந்துகொண்டனர். இவ்வாறுதான் இராக ஆலாபனம் செய்யவேண்டும் என்று குரு அக்காலத்தில் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதில்லை.

இராக ஆலாபனம் என்பது காதால் கேட்டுக்கேட்டுக் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. இராகங்களின் போக்கு (சஞ்சாரம்), சுரத்தொடர்கள், சாயல்கள் (மூர்ச்சனைகள்), நுட்பமான பிடிகள், நுட்பசுருதிகள் கொண்ட வளைவு குழைவுகள், பிர்க்காக்கள் — இவைகள் எல்லாம் சீடர்களுக்குச் செவியின் மூலம் கேட்டுக் கேட்டுக் கிடைக்கும் செவிச் செல்வமாகும்.

**நிறுவனங்களில் இராகப்பயிற்சி :**

இப்போது பல்கலைக்கழகங்கள், இசைக் கல்லூரிகள் போன்ற கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்கள் நேரடியாக மாணவர்களுக்கு இசை கற்றுத் தருகிறார்கள். இசைத்துறைக்கென பாடதிட்டங்கள் வகுக்கப்பட்டு, மாணவர்களுக்கு இசை கற்பிக்கப்படுகிறது. இராகங்களை ஆலாபனம் செய்வதற்கு மாணவர்கள் ஆசிரியர்களிடம் பயிற்சி பெறுவதோடுகூட, பிரபல இசை விற்பன்னர்கள் பாடியுள்ள இராக ஆலாபனங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்கள். இசைத்தட்டுகள் முதலியவைகளைக் கேட்டும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

**சீவசுரம்—இராகத்தின் உயிர்நாடி :**

ஓர் இராகத்தை ஆலாபனம் செய்யும்போது அந்த இராகத்தில் வரும் சுரங்கள், அந்த இராகத்தின் ஆரோசை, அமரோசை (ஆரோகணம், அவரோகணம்) முதலியவைகளை அறிந்திருக்கவேண்டும். இதோடுகூட அந்த இராகத்தின் உயிர்நாடியாக விளங்கும் சீவசுரம், அடுத்தபடி முக்கிய சுரமான அமுதவைப்பு, இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் முதலியவைகளை அறிந்து ஆலாபனம் செய்தால் அது மிகவும் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**ஆளத்தி :**

பழந்தமிழ் மக்கள் ''ஆளத்தி'' என்னும் சொல்லைப் பயன்படுத்தி வந்தனர். அக்காலத்தில் ஆளத்தி என்னும் சொல் வெறும் இராகத்தை மட்டும் குறிக்காமல் இராகம், தானம், நிரவல், பாடல் முதலியவற்றையும் குறிப்பிட்டது என்று நாம் அறிகிறோம்.

**ஆளத்தியின் மூன்று வகைகள் :**

ஆளத்தியின் மூன்று வகைகளைப்பற்றி அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டு உள்ளார். காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தி என்பவை இம்மூன்று வகை ஆளத்தியாகும். காட்டாளத்தி அச்சுடன் நிகழும். அதாவது அகரமாக தாளத்துடன் நிகழ்வதாகும். தானம், பல்லவி, நிரவல் முதலியவை காட்டாளத்தியைச் சார்ந்தவையாகும்[2].

நிறவாளத்தி என்பது நிறங்குலையாமல் பாரணையுடன் நிகழ்வது. பாரணையாவது நெடிலாய் அகண்டமான ஓசையுடன் கூத்துடன் நிகழ்வதாம். இது வெறும் இராகத்தை மட்டும் ஆலாபனம் செய்வதைக் குறிக்கும்.

பண்ணாளத்தி பண்ணையே கருதி வைக்கப்படுவதாகும். இது பாவோடு பொருந்தினதாய் வருவது. உதாரணமாக கீதம், கீர்த்தனை, பதம் முதலியவை பண்ணாளத்தியைச் சேர்ந்தவையாகும். அக்காலத்தில் பாடலின் பொருளை அறிந்து அதற்கேற்ற முறையில் பண்ணைத் தேர்ந்தெடுத்து, பண் அமைத்தது மிகவும் சிறப்பானதொன்றாகும்.

**ஆலாபனம் செய்யவேண்டிய முறை:**

ஓர் இராகத்தை ஆலாபனம் செய்யும்போது ''ம்'' என்று சுருதியில் ஆரம்பித்து, தென்னா, தெனா, தென்னா தெனா என்று ஆலாபனம் செய்ய வேண்டும் என்று சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் சொல்லப் பட்டிருக்கிறது.

*''மகரத்தின் ஒன்றால் சுருதி விரவும்*
*பகரும் குறில் நெடில் பார்த்து—நிகரிலாத்*
*தென்னா தெனாவென்று பாடுவரேல் ஆளத்தி*
*மன்னாவிச் சொல் வகை''*

*— (சிலப்பதிகாரம்—அரங்கேற்று காதை அடி 26-36— அடியார்க்கு நல்லார் உரை)*

**ஆலாபனத்திற்குப் பயன்படும் எழுத்துக்கள்:**

ஆலாபனத்திற்குப் பயன்படும் எழுத்துக்கள் எவை என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார்.

*''குன்றாக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும்*
*நின்றார்ந்த மந்நகரந் தவ்வொடு—நன்றாக*
*நீளத்தால் ஏழும் நிதானத்தான் நின்றியங்க*
*ஆளத்தியாமென்றறி''*

*— (அரங்கேற்று காதை வரி 26-36—அடியார்க்கு நல்லார் உரை)*

ஆலாபனம் செய்யும்போது அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து குற்றெழுத்துக்களும், ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஐந்து நெட்டெழுத்துக் களும், மெய்யெழுத்து பதினெட்டினுள்ளும் மவ்வும், நவ்வும், தவ்வும் என்பவை தவிர, மற்ற எழுத்துக்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இசை வல்லுநர்களில் சிலர் இந்தக்

காலத்தில் இராக ஆலாபனம் செய்யுபோது தரனனா என்றும், தொரனனா என்றும், ததரிலா என்றும் உச்சரித்துப் பாடுகிறார்கள். இவை நம் மரபிற்கு உகந்ததல்ல எனத்தெரிகின்றது.

இராக ஆலாபனம் பாடிய பின்பு தானம் பாடும் போழுது த — — ன — — ம். தா — ஆ ஆ --- — ன — — அ — — அ — — அம்ம் — — என்று பாடுகிறோம். மவ்வும், நவ்வும், தவ்வும் தான் தானத்தில் உச்சரிக்கப்படுகின்றன என்பதை நாம் அறிவோம்.

---

1. ''தென்னிந்திய இசையில் இராக ஆலாபனம்'' எனனும் தலைப்பில் டாக்டர். டி. விஸ்வநாதன் எழுதியுள்ள ஆய்வு நூலில் இராக ஆலாபனம் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுப் பணியின் ஒரு பகுதியாக பைரவி, கல்யாணி, காம்போதி, சங்கராபரணம், சாவேரி, தோடி ஆகிய ஆறு இராகங்கள் திருமதி டி. பிருந்தா காலம்சென்ற ராமநாதபுரம் வி. கிருஷ்ணன், திரு. சே. வி. நாராயணசாமி, திரு. டி. எம் தியாகராஜன், திருமதி. எம். எல். வசந்தகுமாரி ஆகியோரால் ஆலாபனம் செய்யப்பட்டு, ஒலிநாடாக்களில் அளிக்கப்பட்டுள்ளன.

2. ஆதாரம்: கருணாமிர்த சாகரம் இரண்டாம் புத்தகம் (பக்கம் 281—282).

# 9

# தாளம்

பழந்தமிழ் மக்கள் இசைத் தமிழில் கையாண்ட தாள வகைகளைப் போல் வேறு எந்த நாட்டிலும் கையாளப்பெறவில்லை என்று கூறலாம். நுட்பமான சுருதிகளைக் கொண்ட பல பண்களை அவர்கள் பாடி வந்ததுபோல பல நுட்பமான தாளங்களையும் அவர்கள் பயன்படுத்தி வந்தனர்.

இசைப்பாடலுக்கும் ஆடலுக்கும் தாளம்[1] அடித்தளமாய் இருப்பதால் அதற்குத் தாளம் என்னும் பெயர் உண்டாயிற்று. தாளம் கையினால் கொட்டப்படுவதால் அதற்குப் பாணி என்றும், கொட்டு என்றும் பெயர் உண்டு. தாளம் என்ற சொல் வழக்கில் வரவே கொட்டு என்னும் சொல்லும், பாணி என்னும் சொல்லும் வழக்கொழிந்தன. தாளம் இசையை ஓர் அளவுக்குள் நிறுத்தி, அது என்றும் மாறாதபடி நிலைபெற்று விளக்கச் செய்கிறது. இசையும், ஆடலும் வரம்பு கடந்து செல்லும் ஆறுகள் என்றால், தாளம் அவற்றை ஒரு வரம்புக்குள் கட்டுப்படுத்தும் கரையாகும்.

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுகாதையில் வரும் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியில் தாளத்தைப்பற்றி பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

''கொட்டுமசையுந் தூக்குமளவும்
ஒட்டப்புணர்ப்பது பாணியாகும்''

''ககரம் கொட்டே எகரம் அசையே
உகரம் தாக்கே அளவே ஆய்தம்''

இதில் கொட்டு, அசை முதலியவற்றின் கால அளவும், அதன் வடிவும் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் கூறப்பெறும் ககரம் முதலியவை அளவின் குறியீடுகளாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொட்டு | — | அரை மாத்திரை | — | வடிவம் | க |
| அசை | — | ஒரு மாத்திரை | — | வடிவம் | எ |
| தாக்கு | — | இரண்டு மாத்திரை | — | வடிவம் | உ |
| அளவு | — | மூன்று மாத்திரை | — | வடிவம் | ஃ |

**தாளங்களின் ஆறு அங்கங்கள் :**

அனுத்ருதம், த்ருதம், லகு, குரு, புலுதம், காகபதம் என்பன தாளங்களின் ஆறு அங்கங்களாகும்.

1. அனுத்ருதம்—குறி U — மறு பெயர்கள்—துடி, விந்து, புள்ளி, விராமம்—
கால் மாத்திரை—எண் ஒன்று.

2. த்ருதம்—குறி O — மறுபெயர்கள்—விழி, கொம்பு, விட்டம், மதி, கண்
என்பன அரைமாத்திரை—எண் இரண்டு

3. லகு—குறி । — மறுபெயர்கள்—கோல், சரம், பாணம் (அம்பு)
ஒரு மாத்திரை—எண் நான்கு.

4. குரு—குறி 8 — மறுபெயர்கள்—தனு, வில், சிலை என்பன
இரண்டு மாத்திரைகள்—எண் எட்டு.

5. புலுதம்—குறி 1 — மறுபெயர்கள்—மீன், மணி, புயங்கம்
8 மூன்று மாத்திரைகள்—எண் பன்னிரண்டு.

6. காகபதம்—குறி + மறுபெயர்—புள்ளடி—நான்கு மாத்திரைகள்.
எண் பதினாறு.

**108 தாளங்கள் :**

பழந்தமிழ் மக்கள் பயன்படுத்திய நூற்றெட்டுத் தாளங்களின் இலக்கணங்களை பஞ்சமரபு, சச்சபுட வெண்பா போன்ற நூற்களுள் காணலாம். தாளத்தின் ஆறு அங்கங்களும் அக்காலத்தில் வழக்கில் இருந்தன.

**பஞ்சமரபு :**

அடியார்க்கு நல்லார் தாம் எழுதிய சிலப்பதிகார உரைப்பகுதியில், தாம் உரையெழுதுவதற்கு உதவியாக இருந்த இசை நூற்களைக் குறிப்பிடும் போது, அறிவனார் இயற்றிய பஞ்சமரபு பற்றிக் கூறியிருக்கிறார். அறிவனார், கூடல்மாநகர் என்று வழங்கப்பட்ட மதுரையில், கடைச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த முடத்திருமாறன் என்னும் பாண்டிய மன்னன் காலத்தைச் சேர்ந்தவர் எனத்தெரிகிறது இந்த நூல் இசை மரபு, வாச்சிய மரபு (முழவு), நிருத்த மரபு, அவிநய மரபு, தாள மரபு என்னும் ஐந்து மரபுகளைப்பற்றிக் கூறுவதால் பஞ்சமரபு என்று அழைக்கப்பட்டது. இதில் தாள மரபு என்னும் பகுதியில் பூர்வ தமிழ் மக்கள் பயன்படுத்திவந்த தாளங் களின் அங்கங்கள், மாத்திரைகள், எண்கள் முதலியவை கொடுக்கப்பட்டு உள்ளன. தாள நூற்பா மரபில் 108 தாளங்களின் பெயர்களும், அவற்றின் இலக்கணங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த 108 தாளத்தில் முதல் தாளத்தின் பெயர் சச்சபுடம். கடைசித் தாளத்தின் பெயர் பெத்தாபரணம்.

சிலப்பதிகாரத்தின் உரைப்பகுதியிலே முப்பது வகை தாளக் கருவிகளின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தண்ணுமை ஆசிரியன் எவ்வாறு பல்வேறு தாளங்களில் தேர்ச்சி பெற்றிருந்தான் என்று அதனுள் பார்க்கிறோம்.

**சச்சபுட வெண்பா :**

108 தாளங்களுடன் ஐந்து தாளங்களையும் சேர்த்து 113 தாளங்களின் அங்க விவரங்கள், மாத்திரா காலம், வரிசை எண் ஆகிய இலக்கணங்களைக் கூறும் வெண்பா வடிவிலே அமைந்துள்ள தாள இலக்கண நூல் சச்சபுட வெண்பாவாகும். ஒவ்வொரு தாளத்திற்கும் ஒவ்வொரு வெண்பா உள்ளது. அவ்வெண்பாவில் அத்தாளத்தின் பெயர், அத்தாளத்தின் அங்க விவரங்கள், மாத்திரா காலம், எத்தனையாவது தாளம் என்பவை போன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் முதல் நூல் அகத்திய சூத்திரம் என்றும், வரதுங்க ராமபாண்டிய மன்னரின் மகனார் வரகுண பாண்டியன் என்பவரால் இந்த நூல் இயற்றப்பட்டதென்றும் ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது. இவரது காலம் கி. பி. 1613-க்குப் பிற்பட்டதாகத் தெரிகிறது.

**முதல் மூன்று அங்கங்கள் :**

தாளத்தில் முதல் மூன்று அங்கங்களையே நாம் இப்பொழுது பயன்படுத்தி வருகிறோம்.

1) அனுத்ருதம்—ஒரு தட்டு—அட்சர காலம்—ஒன்று—இதன் குறி—U

2) த்ருதம்—ஒரு தட்டும் ஒரு வீச்சும்—அட்சர காலம்—இரண்டு—இதன் குறி—O

அனுதிருதத்திற்கும் திருதத்திற்கும் ஜாதி பேதம் கிடையாது.

3) லகு—ஒரு தட்டும் விரலெண்ணிக்கைகளும்—இதன் குறி—1
விரல் எண்ணிக்கை என்பது அட்சர நிரலைக் குறிக்கும்.

ஜாதி பேதங்களினுல் லகுவின் மொத்த அட்சர காலம் முறையே மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பதாக வரும்.

| லகுவின் வகை | தட்டும், விரல் எண்ணிக்கையும் | அட்சர காலம் | குறி |
|---|---|---|---|
| 1) திஸ்ர லகு | ஒரு தட்டு<br>இரண்டு விரல் எண்ணிக்கை | 3 | \|3 |
| 2) சதுரச்ர லகு | ஒரு தட்டு<br>மூன்று விரல் எண்ணிக்கை | 4 | \|4 |
| 3) கண்ட லகு | ஒரு தட்டு<br>நான்கு விரல் எண்ணிக்கை | 5 | \|5 |
| 4) மிச்ர லகு | ஒரு தட்டு<br>ஆறு விரல் எண்ணிக்கை | 7 | \|7 |
| 5) சங்கீர்ண லகு | ஒரு தட்டு<br>எட்டு விரல் எண்ணிக்கை | 9 | \|9 |

**ஏழு முக்கியமான தாளங்கள் :**

தற்கால இசையில் ஏழு முக்கியமான தாளங்கள் உள்ளன.

அவையாவன:

1. துருவ தாளம்
2. மட்டிய தாளம்
3. ரூபக தாளம்
4. ஜம்பை தாளம்
5. திரிபுடை தாளம்
6. அட தாளம்
7. ஏக தாளம்

1. துருவ தாளத்தின் அங்கங்கள் — | 0 | |
2. மட்டிய தாளத்தின் அங்கங்கள் — | 0 |
3. ரூபக தாளத்தின் அங்கங்கள் — 0 |
4. ஜம்பை தாளத்தின் அங்கங்கள் — | ᑌ 0
5. திரிபுடை தாளத்தின் அங்கங்கள் — | 0 0
6. அட தாளத்தின் அங்கங்கள் — | | 0 0
7. ஏக தாளத்தின் அங்கங்கள் — |

இந்த ஏழு தாளங்களும் லகுவின் ஐந்து ஜாதி பேதங்களினால் $7 \times 5 = 35$ தாளங்களாகின்றன.

## 35 தாளங்கள்

| தாளம் | ஜாதி | அங்கம் | மொத்த அட்சர காலம் |
|---|---|---|---|
| துருவ தாளம் | 1. திச்ரம் | \|3 0 \|3 \|3 | 3+2+3+3=11 |
| | 2. சதுரச்ரம் | \|4 0 \|4 \|4 | 4+2+4+4=14 |
| | 3. கண்டம் | \|5 0 \|5 \|5 | 5+2+5+5=17 |
| | 4 மிச்ரம் | \|7 0 \|7 \|7 | 7+2+7+7=23 |
| | 5. சங்கீர்ணம் | \|9 0 \|9 \|9 | 9+2+9+9=29 |
| மட்டிய தாளம் | 1. திச்ரம் | \|3 0 \|3 | 3+2+3= 8 |
| | 2. சதுரச்ரம் | \|4 0 \|4 | 4+2+4=10 |
| | 3. கண்டம் | \|5 0 \|5 | 5+2+5=12 |
| | 4. மிச்ரம் | \|7 0 \|7 | 7+2+7=16 |
| | 5. சங்கீர்ணம் | \|9 0 \|9 | 9+2+9=20 |
| ரூபக தாளம் | 1. திச்ரம் | 0 \|3 | 2+3= 5 |
| | 2. சதுரச்ரம் | 0 \|4 | 2+4= 6 |
| | 3. கண்டம் | 0 \|5 | 2+5= 7 |
| | 4. மிச்ரம் | 0 \|7 | 2+7= 9 |
| | 5. சங்கீர்ணம் | 0 \|9 | 2+9=11 |
| ஜம்பை தாளம் | 1. திச்ரம் | \|3 ᑌ 0 | 3+1+2= 6 |
| | 2. சதுரச்ரம் | \|4 ᑌ 0 | 4+1+2= 7 |
| | 3. கண்டம் | \|5 ᑌ 0 | 5+1+2= 8 |
| | 4. மிச்ரம் | \|7 ᑌ 0 | 7+1+2=10 |
| | 5. சங்கீர்ணம் | \|9 ᑌ 0 | 9+1+2=12 |

| தாளம் | | ஜாதி | அங்கம் | மொத்த அட்சர காலம் |
|---|---|---|---|---|
| திரிபுடை தாளம் | 1. | திச்ரம் | \|300 | 3+2+2= 7 |
| | 2. | சதுரச்ரம் | \|400 | 4+2+2= 8 |
| | 3. | கண்டம் | \|500 | 5+2+2= 9 |
| | 4. | மிச்ரம் | \|700 | 7+2+2=11 |
| | 5. | சங்கீர்ணம் | \|900 | 9+2+2=13 |
| அடதாளம் | 1. | திச்ரம் | \|3 \|300 | 3+3+2+2=10 |
| | 2. | சதுரச்ரம் | \|4 \|400 | 4+4+2+2=12 |
| | 3. | கண்டம் | \|5 \|500 | 5+5+2+2=14 |
| | 4. | மிச்ரம் | \|7 \|700 | 7+7+2+2=18 |
| | 5. | சங்கீர்ணம் | \|9 \|900 | 9+9+2+2=22 |
| ஏக தாளம் | 1. | திச்ரம் | \|3 | 3 |
| | 2. | சதுரச்ரம் | \|4 | 4 |
| | 3. | கண்டம் | \|5 | 5 |
| | 4. | மிச்ரம் | \|7 | 7 |
| | 5. | சங்கீர்ணம் | \|9 | 9 |

**175 தாளங்கள் :**

35 தாளங்கள் ஒவ்வொன்றும் திச்ர கதி, சதுரச்ர கதி, கண்ட கதி, மிச்ர கதி, சங்கீர்ண கதி என்னும் ஐந்து கதி பேதங்களினால் மீண்டும் $35 \times 5 = 175$ தாளங்களாகின்றன.

ஏழு தாளங்களில் ஒவ்வொன்றும், ஐந்து ஜாதி பேதங்களினாலும், 5 கதி பேதங்களினாலும் 25 பேதங்களை அடைகின்றன. ஜாதி பேதம் லகுவிற்குத்தான் ஏற்படும். ஆனால் கதிபேதமானது ஒவ்வொரு அங்கத்திற்கும் உண்டு.

**எடுப்பு :**

ஒரு பாட்டு, தாளத்தில் எந்த இடத்தில் ஆரம்பிக்கிறதோ அந்த இடத்திற்கு எடுப்பு என்று பெயர். எடுப்பு மூன்று வகைப்படும்.

1) சம எடுப்பு — தாளமும் பாட்டும் ஒரே சமயத்தில் ஆரம்பமாகும்.
2) அனாகத எடுப்பு — தாளத்திற்குப் பின் பாட்டு ஆரம்பமாகும்.
3) அதீத எடுப்பு — தாளத்திற்கு முன் பாட்டு ஆரம்பமாகும்.

சமமற்ற எடுப்பை **விஷம**[2] எடுப்பு என்று குறிப்பிடுகிறார்கள்.

**காலம் :**

தாளத்தின் வேகம் அல்லது போக்கைக் குறிப்பிட நாம் முதற் காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம், நான்காம் காலம் என்று அழைக்கிறோம். வடமொழியில் இதை விளம்ப காலம், மத்திம காலம், துரித காலம், அதிதுரித காலம் என்று குறிப்பிட்டார்கள். பூர்வ தமிழ் மக்கள் தாளத்தின் காலத்தைப் பாணி அல்லது இயக்கு என்று அழைத்தார்கள். நால்வகைக் காலத்தை அவர்கள் முதல் நடை, வாரம், கூடை, திரள் என்று அழைத்தார்கள்.

| நெ. | தமிழ்ப் பெயர் | வடமொழிப் பெயர் | கால வரிசை |
|---|---|---|---|
| 1. | முதல் நடை | விளம்ப காலம் | முதற் காலம் |
| 2. | வாரம் | மத்திம காலம் | இரண்டாம் காலம் |
| 3. | கூடை | துரித காலம் | மூன்றாம் காலம் |
| 4. | திரள் | அதிதுரித காலம் | நான்காம் காலம் |

முதல் நடை என்று அழைக்கப்பட்ட விளம்ப காலம் மிகவும் காலச் செலவினையுடைய தாமதமான மந்த நடையாகும். திரள் என்று கூறப்படும் அதிதுரித காலம் மிகக்குறைந்த காலச்செலவினையுடைய அதிக முடுகலான நடையாகும். பொதுவாக, பெரும்பாலும் பாடல்கள் அதிகமாக மத்திம காலம், துரித காலம் என்று அழைக்கப்படும் வார நடையிலும், கூடை நடையிலுமே அமைந்திருக்கின்றன. இவ்விரண்டு நடைகளும் அதிக மந்தமாயுமில்லாமல், அதிக முடுகிய நடையுமல்லாமல் இவ்விரண்டிற்கும் நடுப்பட்ட நடைகளாக இருக்கின்றன. பாட்டின் பொருட்சுவையும் இந்த நடைகளில் குன்றாமல் இருக்கிறது.

**நாம் தற்சமயம் பயன்படுத்தும் தாளங்கள் :**

நாம் தற்சமயம் பெரும்பாலும் ஆதி தாளம், ரூபக தாளம், சாபு தாளம், ஜம்பை தாளம், ஏக தாளம் முதலிய தாளங்களையே பயன்படுத்துகிறோம். சில வர்ணங்கள் பாடும்பொழுது மட்டும் கண்ட ஜாதி அட தாளத்தைப் பயன்படுத்துகிறோம்.

ஆதி தாளம் — சதுரச்ர ஜாதி திரிபுடைதாளமாகும்.
அட்சர காலம்—4 + 2 + 2 = 8

ரூபக தாளம் — சதுரச்ர ஜாதி ரூபகதாளமாகும்.
அட்சர காலம்—2 + 4 = 6

சாபு (திரிபுடை) தாளம் — திச்ரஜாதி திரிபுடை தாளமாகும்,
அட்சர காலம்—$3+2+2=7$

அடதாளம் — கண்ட ஜாதி அட தாளமாகும்.
— அட்சர காலம்—$5+5+2+2=14$

**சுரத்தின் கால அளவு :**

சுரத்தின் கால அளவை நாம் இவ்வாறு குறிப்பிடுகிறோம்.

| | | |
|---|---|---|
| ச (கீழ்க்கோடு) | — | அரை அட்சரம் |
| ச | — | ஓர் அட்சரம் |
| சா | — | இரண்டு அட்சரம் |
| ; | — | இரண்டு அட்சரம் |
| , | — | ஓர் அட்சரம் |
| சா; | — | நான்கு அட்சரம் |
| சா;, | — | ஐந்து அட்சரம் |
| சா;; | — | ஆறு அட்சரம் |

ஒரு சுரத்தின் கீழ் கிடைகோடு போட்டிருந்தால் அதன் அட்சர காலம் பாதியாகும்.

---

1. கூத்தாகிய நடனம் தாளை அடிப்படையாகக் கொண்டமையின், தாள்களின் அமைப்பொலியே தாளம் எனலாயிற்று.

2. ஸமத்திற்கு வேறுபட்டது வ்ஸமம். இச்சொல் வழக்கில் விஷமம் என்றே ஆளப்பட்டு வருகிறது.

# 10

# 72 மேளகர்த்தா இராகங்களும் அவைகளில் பிறந்த கிளை இராகங்களும்

தொகுத்து எழுதப்பெற்ற மொத்த இராகங்கள் 3512

*தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய ''கருணாமிர்த சாகரம்—இரண்டாவது நூல்'', ஆர். ரெங்கராமானுஜ ஐயங்கார் இயற்றிய* **''History of South Indian Carnatic Music''**, *சுந்தரராஜ சுவாமிகள் இயற்றிய ''பரத சங்கீத ஸ்வயபோதினி'', டி. ஏ. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார் இயற்றிய ''இராகமாலை அல்லது இராகப்பிரஸ்தாரங்கள்'' ஆகிய நூற்களிலிருந்து தொகுத்து எழுதப்பெற்றவை. இந்த நூற்களின் ஆசிரியர்களுக்கும் உரிமையாளர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.*

துஆ. தனபாண்டியன்

## 72 மேளகர்த்தாக்களில் சுத்த மத்யம சக்கரம் 6-ம் அவைகளில்வரும் 36 தாய் இராகங்களும்

| | இராகங்கள் | சுரங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கனகாங்கி | ச | ரி$^{2}$ | க$^{2}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{2}$ | ச் |
| 2. | ரத்னாங்கி | ச | ரி$^{2}$ | க$^{2}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{4}$ | ச் |
| 3. | கானமூர்த்தி | ச | ரி$^{2}$ | க$^{2}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{6}$ | ச் |
| 4. | வனஸ்பதி | ச | ரி$^{2}$ | க$^{2}$ | ம$^{2}$ | ப | த$^{4}$ | நி$^{4}$ | ச் |
| 5. | மானவதி | ச | ரி$^{2}$ | க$^{2}$ | ம$^{2}$ | ப | த$^{4}$ | நி$^{6}$ | ச் |
| 6. | தானரூபி | ச | ரி$^{2}$ | க$^{2}$ | ம$^{2}$ | ப | த$^{6}$ | நி$^{6}$ | ச் |
| 7. | சேனாவதி | ச | ரி$^{2}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{2}$ | ச் |
| 8. | ஹனுமத்தோடி | ச | ரி$^{2}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{4}$ | ச் |
| 9. | தேனுக | ச | ரி$^{2}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{6}$ | ச் |
| 10. | நாடகப்ரியா | ச | ரி$^{2}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{4}$ | நி$^{4}$ | ச் |
| 11. | கோகிலப்ரியா | ச | ரி$^{2}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{4}$ | நி$^{6}$ | ச் |
| 12. | ரூபாவதி | ச | ரி$^{2}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{6}$ | நி$^{6}$ | ச் |
| 13. | காயகப்ரியா | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{2}$ | ச் |
| 14. | வகுளாபரணம் | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{4}$ | ச் |
| 15. | மாயாமாளவகௌளை | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{6}$ | ச் |
| 16. | சக்ரவாகம் | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{2}$ | ப | த$^{4}$ | நி$^{4}$ | ச் |
| 17. | சூர்யகாந்தம் | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{2}$ | ப | த$^{4}$ | நி$^{6}$ | ச் |
| 18. | ஹாடகாம்பரி | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{2}$ | ப | த$^{6}$ | நி$^{6}$ | ச் |
| 19. | ஜங்காரத்வனி | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{2}$ | ச் |
| 20. | நடபைரவி | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{4}$ | ச் |
| 21. | கீரவாணி | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{2}$ | நி$^{6}$ | ச் |
| 22. | கரஹரப்ரியா | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{4}$ | நி$^{4}$ | ச் |
| 23. | கௌரிமனோஹரி | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{4}$ | நி$^{6}$ | ச் |
| 24. | வருணப்ரியா | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{2}$ | ப | த$^{6}$ | நி$^{6}$ | ச் |

| இராகங்கள் | | சுரங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25. | மாரரஞ்சனி | ச | ரி4 | க6 | ம2 | ப | த2 | நி2 | ச் |
| 26. | சாருகேசி | ச | ரி4 | க6 | ம2 | ப | த2 | நி4 | ச் |
| 27. | சரசாங்கி | ச | ரி4 | க6 | ம2 | ப | த2 | நி6 | ச் |
| 28. | ஹரிகாம்போதி | ச | ரி4 | க6 | ம2 | ப | த4 | நி4 | ச் |
| 29. | தீரசங்கராபரணம் | ச | ரி4 | க6 | ம2 | ப | த4 | நி6 | ச் |
| 30. | நாகானந்தி | ச | ரி4 | க6 | ம2 | ப | த6 | நி6 | ச் |
| 31. | யாகப்ரியா | ச | ரி6 | க6 | ம2 | ப | த2 | நி2 | ச் |
| 32. | இராகவர்த்தினி | ச | ரி6 | க6 | ம2 | ப | த2 | நி4 | ச் |
| 33. | காங்கேயபூஷணி | ச | ரி6 | க6 | ம2 | ப | த2 | நி6 | ச் |
| 34. | வாகதீஸ்வரி | ச | ரி6 | க6 | ம2 | ப | த4 | நி4 | ச் |
| 35. | சூலினி | ச | ரி6 | க6 | ம2 | ப | த4 | நி6 | ச் |
| 36. | சலநாட | ச | ரி6 | க6 | ம2 | ப | த6 | நி6 | ச் |

## 72 மேளகர்த்தாக்களில் பிரதி மத்திம சக்கரம் 6-ம் அவைகளில் வரும் 36 தாய் இராகங்களும்

| இராகங்கள் | | சுரங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 37. | சாலக | ச | ரி2 | க2 | ம4 | ப | த2 | நி2 | ச் |
| 38. | ஜலார்ணவம் | ச | ரி2 | க2 | ம4 | ப | த2 | நி4 | ச் |
| 39. | ஜாலவராளி | ச | ரி2 | க2 | ம4 | ப | த2 | நி6 | ச் |
| 40. | நவநீதம் | ச | ரி2 | க2 | ம4 | ப | த4 | நி4 | ச் |
| 41. | பாவனி | ச | ரி2 | க2 | ம4 | ப | த4 | நி6 | ச் |
| 42. | ரகுப்ரியா | ச | ரி2 | க2 | ம4 | ப | த6 | நி6 | ச் |
| 43. | கவாம்போதி | ச | ரி2 | க4 | ம4 | ப | த2 | நி2 | ச் |
| 44. | பவப்ரியா | ச | ரி2 | க4 | ம4 | ப | த2 | நி4 | ச் |
| 45. | சுபபந்துவராளி | ச | ரி2 | க4 | ம4 | ப | த2 | நி6 | ச் |
| 46. | ஷட்விதமார்கினி | ச | ரி2 | க4 | ம4 | ப | த4 | நி4 | ச் |
| 47. | சுவர்ணாங்கி | ச | ரி2 | க4 | ம4 | ப | த4 | நி6 | ச் |
| 48. | திவ்யமணி | ச | ரி2 | க4 | ம4 | ப | த6 | நி6 | ச் |

| இராகங்கள் | | சுரங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 49. | தவளாம்பரி | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{2}$ | ச் |
| 50. | நாமநாராயணி | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{4}$ | ச் |
| 51. | காமவர்த்தினி | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{6}$ | ச் |
| 52. | ராமப்ரியா | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{4}$ | நி$^{1}$ | ச் |
| 53. | கமனப்ரியா | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{4}$ | நி$^{6}$ | ச் |
| 54. | விஸ்வம்பரி | ச | ரி$^{2}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{6}$ | நி$^{6}$ | ச் |
| 55. | சியாமளாங்கி | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{2}$ | ச் |
| 56. | ஷண்முகப்ரியா | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{4}$ | ச் |
| 57. | சிம்மேந்திரமத்திமம் | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{6}$ | ச் |
| 58. | ஹேமவதி | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{4}$ | ப | த$^{4}$ | நி$^{4}$ | ச் |
| 59. | தர்மவதி | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{4}$ | ப | த$^{4}$ | நி$^{6}$ | ச் |
| 60. | நீதிமதி | ச | ரி$^{4}$ | க$^{4}$ | ம$^{4}$ | ப | த$^{6}$ | நி$^{6}$ | ச் |
| 61. | காந்தாமணி | ச | ரி$^{4}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{2}$ | ச் |
| 62. | ரிஷபப்ரியா | ச | ரி$^{4}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{4}$ | ச் |
| 63. | லதாங்கி | ச | ரி$^{4}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{6}$ | ச் |
| 64. | வாசஸ்பதி | ச | ரி$^{4}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{4}$ | நி$^{4}$ | ச் |
| 65. | மேசகல்யாணி | ச | ரி$^{4}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{4}$ | நி$^{6}$ | ச் |
| 66. | சித்ராம்பரி | ச | ரி$^{4}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{6}$ | நி$^{6}$ | ச் |
| 67. | சுசரித்ரா | ச | ரி$^{6}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{2}$ | ச் |
| 68. | ஜோதிஸ்வரூபிணி | ச | ரி$^{6}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{4}$ | ச் |
| 69. | தாதுவர்த்தனி | ச | ரி$^{6}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{2}$ | நி$^{6}$ | ச் |
| 70. | நாசிகாபூஷணி | ச | ரி$^{6}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{4}$ | நி$^{4}$ | ச் |
| 71. | கோசலம் | ச | ரி$^{6}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{4}$ | நி$^{6}$ | ச் |
| 72. | ரசிகப்ரியா | ச | ரி$^{6}$ | க$^{6}$ | ம$^{4}$ | ப | த$^{6}$ | நி$^{6}$ | ச் |

## 72 மேளகர்த்தா இராகங்களின் சக்கரம்[1]

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1, 37 | 2, 38 | 3, 39 | 4, 40 | 5, 41 | 6, 42 | ரி$^{2}$ | க$^{2}$ |
| 7, 43 | 8, 44 | 9, 45 | 10, 46 | 11, 47 | 12, 48 | ரி$^{2}$ | க$^{4}$ |
| 13, 49 | 14, 50 | 15, 51 | 16, 52 | 17, 53 | 18, 54 | ரி$^{2}$ | க$^{6}$ |
| 19, 55 | 20, 56 | 21, 57 | 22, 58 | 23, 59 | 24, 60 | ரி$^{4}$ | க$^{4}$ |
| 25, 61 | 26, 62 | 27, 63 | 28, 64 | 29, 65 | 30, 66 | ரி$^{4}$ | க$^{6}$ |
| 31, 67 | 32, 68 | 33, 69 | 34, 70 | 35, 71 | 36, 72 | ரி$^{6}$ | க$^{6}$ |
| த$^{2}$ | த$^{2}$ | த$^{2}$ | த$^{4}$ | த$^{4}$ | த$^{6}$ | | |
| நி$^{2}$ | நி$^{4}$ | நி$^{6}$ | நி$^{4}$ | நி$^{6}$ | நி$^{6}$ | | |

குறிப்பு: ஒன்று முதல் முப்பத்து ஆறு வரையும் சுத்த மத்யம இராகங்கள்.

ரி$^{2}$ — சுத்த ரிஷபம் — (குறை துத்தம்)
ரி$^{4}$ — சதுர்சுருதி ரிஷபம் — (நிறை துத்தம்)
ரி$^{6}$ — சட்சுருதி ரிஷபம் — (குறை கைக்கிளை)
க$^{2}$ — சுத்த காந்தாரம் — (நிறை துத்தம்)
க$^{4}$ — சாதாரண காந்தாரம் — (குறை கைக்கிளை)
க$^{6}$ — அந்தர காந்தாரம் — (நிறை கைக்கிளை)
த$^{2}$ — சுத்த தைவதம் — (குறை விளரி)
த$^{4}$ — சதுர் சுருதி தைவதம் — (நிறை விளரி)
த$^{6}$ — சட்சுருதி தைவதம் — (குறை தாரம்)
நி$^{2}$ — சுத்த நிஷாதம் — (நிறை விளரி)
நி$^{4}$ — கைசிகி நிஷாதம் — (குறை தாரம்)
நி$^{6}$ — காகலி நிஷாதம் — (நிறை தாரம்)

1. ஆதாரம் :— டி. சி. ஆர். ஜொகானஸ் என்ற சுந்தரராஜம் இயற்றிய ''பரத சங்கீத சுயபோதினி''—பக்கம் 39.

## 1. கனகாங்கி

ச ரி² க² ம² ப த² நி² ச்

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 1. கனகாங்கி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. கனகாம்பரி | சரிகமபதநிதச் | ச்நிதபமகரிகரிச |
| 3. கிர்த்திப்பிரியை | சரிமபதச் | ச்நிதபமகரிச |
| 4. வாகீஸ்வரி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 5. முக்தாம்பரி | சரிகமபநிச் | ச்நிதமகரிச |
| 6. போக சிந்தாமணி | சரிபமபதநிச் | ச்தபமகரிகரிச |
| 7. மோகன மல்லாரு | சரிகமதநிதச் | ச்தநிதபமகரிச |
| 8. கட்கப்பிரியா | சரிகமபநிச் | ச்தமகரிச |
| 9. தபோல்லாசனி | சரிகமபதநிச் | ச்தபகரிச |
| 10. இந்திரப்ரியா | சகமதநிச் | ச்நிதமகச |
| 11. ஓஷதீசப்ரியா | சரிகதநிச் | ச்நிதகரிச |
| 12. ஔர்வசிரேயப்ரியா | சரிபதநிச் | ச்நிதபரிச |
| 13. கமலினி | சரிகமபநிச் | ச்நிபமகரிச |
| 14. காந்தாரகபாணி | சகமபநிச் | ச்நிபமகச |
| 15. கூலாங்கஷா | சரிமதநிச் | ச்நிதமரிச |
| 16. கௌதமி | சரிகபதநிச் | ச்நிதபகரிச |
| 17. தோகா | சகபதநிச் | ச்நிதபகச |
| 18. தௌலிகா | சரிகமபதநிச் | ச்நிதமகரிச |
| 19. பானுப்ரியா | சரிகமபச் | ச்பமகரிச |
| 20. மந்தாகினி | சரிகமநிச் | ச்நிமகரிச |
| 21. மன்யா | சகமபதநிச் | ச்நிதபமகச |
| 22. ரங்கநாயகி | சரிகபதச் | ச்தபகரிச |
| 23. ரசகுசீசம் | சரிகபநிச் | ச்நிபகரிச |
| 24. லதாந்தப்ரியா | சரிமபதச் | ச்தபமரிச் |
| 25. வாமலோசனா | சரிமபநிச் | ச்நிபமரிச் |
| 26. சுத்தமுகாரி | சரிகரிமபதநிதச் | ச்நிதமபமகரிச |
| 27. சுத்தசத்துவ | சரிகமதச் | ச்தமகரிச |
| 28. ஹேமாங்கி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 29. ஷானப்பிரபா | சகமபதச் | ச்தபமகச |

## 2. ரத்னாங்கி

ச ரி$^{2}$ க$^{2}$ ம$^{2}$ ப த$^{2}$ நி$^{4}$ ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | ரத்னாங்கி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | பேனத்யுதி | சரிமபதநிச் | ச்நிதமகரிச |
| 3. | ரிஷபாங்கி | சரிமபதநிச் | ச்நிதபமகரிச |
| 4. | ஜெயசிந்து | சரிகமபச் | ச்(ப)நிதமகரிச |
| 5. | ஸ்ரீமணி | சரிகபதச் | ச்நிதபகரிச |
| 6. | வசந்தமனோகரி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 7. | ஜீவரஞ்சனி | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 8. | காண்டாரவம் | சகமபநிச் | ச்நிதபமகரிச |
| 9. | பூபாலசிந்தாமணி | சரிகமபதநி(த)ச் | ச்நிதபமரிச |
| 10. | ஆனந்தநடனி | சரிகமபநிச் | ச்நிபமகரிச |
| 11. | காமினி | சரிகபதநிச் | ச்நிதபகரிச |
| 12. | கும்பினி | சரிகதநிச் | ச்நிதகரிச |
| 13. | கௌரிகாந்தாரி | சமரிகமபதநிதச் | ச்நிதபமகரிச |
| 14. | நிகராதரி | சகபதநிச் | ச்நிதபகச |
| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 31. வாலகில்லியர் | சரிகமபதநிச் | ச்நிபகரிச |
| 32. வாலசரம் | சரிகமபதநிச் | ச்நிபமகச |
| 33. வாலுங்கி | சரிகமபதநிச் | ச்தபமகச |
| 34. வைதாணி | சரிகமபதநிச் | ச்நிபகச |
| 35. வேலாவலயம் | சரிகமபதநிச் | ச்தபகச |
| 36. வாதரக்காச்சி | சரிகமபநிச் | ச்நிதபமகரிச |
| 37. வாரஞ்சி | சரிமபதநிச் | ச்நிதபமகரிச |
| 38. வானேறு | சரிகபதச் | ச்நிதபமகரிச |
| 39. விகசிதம் | சரிகபநிச் | ச்நிதபமகரிச |
| 40. வீபணி | சரிகபதச் | ச்நிதபமகரிச |
| 41. வீபற்சு | சகமபநிச் | ச்நிதபமகரிச |
| 42. வீப்பகழி | சரிகமதச் | ச்நிதபமகரிச |
| 43. வேயுள் | சகபதச் | ச்நிதபமகரிச |
| 44. வேலனாடல் | சகபநிச் | ச்நிதபமகரிச |
| 45. வெண்பலி | சரிகமபதச் | ச்நிபகரிச |
| 46. வெளவம் | சரிகமபநிச் | ச்தபகரிச |
| 47. வைபாடிகன் | சகமபதநிச் | ச்பமகரிச |
| 48. வைகுல்லியம் | சகமபதச் | ச்நிபமகரிச |
| 49. வைகல் | சகமபநிச் | ச்தபமகரிச |
| 50. திருஞானலோலா | சரிகமபச் | ச்நிதமகரிச |
| 51. மாபுனிதன் | சரிகபதச் | ச்நிபமகச |
| 52. மாபுனிதவதி | சரிகபநிச் | ச்தபமகச |
| 53. குலவுரி | சரிகமபதச் | ச்நிபகச |
| 54. கூகாகம் | சரிகமபநிச் | ச்தபகச |
| 55. சிவக்கோபுரம் | சகபதச் | ச்நிபமகரிச |
| 56. கோளன் | சகபநிச் | ச்தபமகரிச |
| 57. சங்காதிதி | சரிகமதச் | ச்நிபகச |
| 58. சடைநாதம் | சரிமபநிச் | ச்தபகச |
| 59. சலோர்ச்சம் | சகபதச் | ச்நிபமரிச |
| 60. சிகிரியந்தம் | சகபநிச் | ச்தபமரிச |
| 61. சிமயம் | சரிமதச் | ச்நிபகச |
| 62. சியிறுதம் | சகபநிச் | ச்தபமரிச |

# 59. தர்மவதி

ச ரி$^{1}$ க$^{4}$ ம$^{4}$ ப த$^{4}$ நி$^{6}$ ச்

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 1. தர்மவதி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. தீராகாரி | சரிகமபதநிச் | ச்தநிபமகரிச |
| 3. விஜயனாகரி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 4. லலிதசிம்காரவம் | சரிகமபச் | ச்நிபமகரிச |
| 5. தௌம்யராகம் | சரிகமபதச் | ச்நிதபமகரிச |
| 6. வசந்தகீர்வாணி | சரிகமபநிதச் | ச்நிதநிபமரிச |
| 7. சுத்தநவனீதம் | சரிகமதநிச் | ச்நிபமகரிச |
| 8. ரஞ்சனி | சரிகமதச் | ச்நிதமகசரிச |
| 9. விஜயஸ்ரீகண்டி | சகமபச் | ச்நிதமகரிச |
| 10. தீரகுந்தலி | சமபதநிச் | ச்நிதபமகரிச |
| 11. அசதி | சகமதநிச் | ச்நிதமகச |
| 12. கார்முகவதி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 13. கருடவராளி | சரிகபநிச் | ச்நிபமகரிச |
| 14. சிந்தாமணி | சரிமதநிச் | ச்நிபமகரிச |
| 15. பாலகம்பீர்ய | சகரிகமதபதநிச் | ச்நிதபமகரிச |
| 16. பூஷாவளி | சரிகரிமபநிச் | ச்நிதபமகரிச |
| 17. மோகனக்குறிஞ்சி | சரிகபதநிபநிச் | ச்நிதபமகரிச |
| 18. ரவிசத்ய | சரிகமபதநிச் | ச்தபமரிகரிச |
| 19. ருத்ரமணி | சரிமபதநிச் | ச்நிதமகரிச |
| 20. வரத | சரிமபநிச் | ச்நிபமரிச |
| 21. ஷைலாவதி | சரிமபநிதநிச் | ச்தபமகரிச |
| 22. சூரியநாயகம் | சரிமநிச் | ச்தபமகச |
| 23. சுவர்ணமுகாரி | சகமபதநிச் | ச்நிதமகரிச |
| 24. புதன் | சரிமபதச் | ச்நிதபமகரிச |
| 25. ஸ்ரீகண்ணன் | சரிகமதச் | ச்நிபமகரிச |
| 26. தயாளன் | சரிமபச் | ச்நிதமகச |
| 27. நாகப்ரியோன் | சரிமபச் | ச்நிதபமகச |
| 28. தளி | சரிகமபதநிச் | ச்நிபமகரிச |
| 29. தளுப்பு | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 30. திராமரம் | சரிகமபதநிச் | ச்நிதபமகச |

## தர்மவதி — தொடர்ச்சி

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 31. நியக்குரோதம் | சரிகமபதநிச் | ச்நிபகரிச |
| 32. நிமளை | சரிகமபதநிச் | ச்தபகரிச |
| 33. நாளிகம் | சரிகபதச் | ச்நிதபமகரிச |
| 34. தீரகுந்தன் | சமபதநிச் | ச்நிதபமகரிச |
| 35. புதன் | சரிமபதச் | ச்நிதபமகரிச |
| 36. புதன்மணி | சகமபதச் | ச்நிதபமகரிச |
| 37. ஸ்ரீகுந்தம் | சரிகபதநிச் | ச்நிபமகரிச |
| 38. அருள்நாயகன் | சகபதச் | ச்நிதபகரிச |
| 39. மருவும்நாயகி | சகபநிச் | ச்நிதபமகரிச |
| 40. அண்ணல் | சரிமபச் | ச்நிதபமகரிச |
| 41. அண்ணடர்க்கதிபதி | சரிகமபதநிச் | ச்நிபகச |
| 42. இமையகிரி | சரிகபதநிச் | ச்தபகச |
| 43. குமிலம் | சரிகமபதச் | ச்நிபகரிச |
| 44. கூனல் | சரிகமபநிச் | ச்தபகரிச |
| 45. கேகயம் | சகமபதநிச் | ச்தமகரிச |
| 46. ஸ்ரீசிவக்கேயூரம் | சரிகபநிச் | ச்தபமகரிச |
| 47. சாணன் | சகமபதச் | ச்நிபகரிச |
| 48. சாளை | சகமபநிச் | ச்தபகரிச |
| 49. சிகரிநிம்பம் | சரிகபதச் | ச்நிபமகச |
| 50. சேரக்குறிஞ்சி | சரிகமபதச் | ச்நிபகச |
| 51. கோழக்குறிஞ்சி | சரிகமபநிச் | ச்தபகச |
| 52. விண்ணவர்திலகம் | சகபதச் | ச்நிபமகரிச |
| 53. ஆரணப்ரியன் | சகபநிச் | ச்தபமகரிச |
| 54. காரணப்ரியோன் | சரிமபச் | ச்நிதபமகச |
| 55. ஆய்மதியாள் | சரிகபதச் | ச்நிதமச |
| 56. அறுகுணன்நாயகி | சரிகபநிச் | ச்தமகச |
| 57. தீங்குழல் | சரிமதநிச் | ச்நிபகச |
| 58. ஜீவன் | சகபநிச் | ச்தபமரிச |
| 59. வசந்தநாதன் | சரிமதச் | ச்நிபகரிச |
| 60. வடிவேலன் | சரிமதச் | ச்நிபகச |
| 61. வடிவழகி | சகபநிச் | ச்நிபரிச |

## 60. நீதிமதி

ஸ ரி4 க4 ம4 ப த6 நி6 ச்

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 1. நீதிமதி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. நுதனசந்திரிகா | சரிகமபதநிச் | ச்நிபதநிபமகச |
| 3. விஜயரத்னாகரி | சரிமபதநிச் | ச்நிபமகச |
| 4. நிஷாதம் | சகரிமபச் | ச்நிதமபநிபமகரிச |
| 5. கனகஸ்ரீகண்டி | சரிகமபச் | ச்நிதநிபமரிச |
| 6. ஹம்சநாதம் | சரிமபதநிச் | ச்நிதநிபமரிச |
| 7. சுத்தகௌரிக்ரியா | சகமபநிதநிச் | ச்நிதமகச |
| 8. குந்தலரஞ்சனி | சமகமபதநிச் | ச்நிபதநிபமகச |
| 9. தேசியகானவாரிதி | சரிகமபதநிபச் | ச்நிசபமகரிச |
| 10. தேவகுசுமாவளி | சமகமபச் | ச்நிபமகரிச |
| 11. கவுரிக்ரியா | சகமபதநிச் | ச்நிதநிபமகச |
| 12. கைகவசி (ஸ்ரீகைகவசி) | சரிகமபதநிச் | ச்நிபமகரிச |
| 13. கம்பத்வஜ | சரிகமபநிதச் | ச்தபமகரிச |
| 14. கமலா | சகமதநிச் | ச்நிதமகச |
| 15. காந்திமதி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 16. கேதாரமஞ்சரி | சகமபநிச் | ச்நிதபமகரிச |
| 17. நயமதி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 18. நீதிமஞ்சரி | சரிகமபதச் | ச்நிதமபநிபமகரிச |
| 19. பாலசரித்திரா | சரிகரிமபதநிதச் | ச்நிதநிபமகரிச |
| 20. ஹேமலதா | சரிகமதச் | ச்தமகரிச |

## 61 காந்தாமணி

ச ரி[4] க[6] ம[4] ப த[2] நி[2] ச்

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 1. காந்தாமணி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. கீர்த்திவிஜய | சரிகமபநிதச் | ச்நிதபமகரிச |
| 3. கனககுசுமாவளி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 4. கர்னாடக தரங்கிணி | சரிகமபநிச் | ச்பமகரிச |
| 5. குந்தலராகம் | சரிகமபதநிதச் | ச்நிதபமகமரிச |
| 6. விஜயதீபகம் | சரிகமபநிதச் | ச்தநிபமகரிச |
| 7. சுத்தஜோதிஸ்மதி | சகமபச் | ச்நிதபமகரிச |
| 8. சுருதிநிரஞ்சனி | சரிகமபதநி | நிதபமகசரிச |
| 9. ராமகுசுமாவளி | சகமபநிதபநிச் | ச்நிதபமகரிச |
| 10. கனகசிம்காரவம் | சகமபநிச் | ச்நிதபமரிச |
| 11. ஓம்காரஸ்வரூபிணி | சரிகமபநிச் | ச்நிபமகரிச |
| 12. காந்தரத்னா | சரிமபநிதச் | ச்நிதபமகரிச |
| 13. கைவேணி | சரிமபதச் | ச்தநிதமபதபமகரிச |
| 14. குருஜோதி | சரிகமதச் | ச்தமகரிச |
| 15. சம்பொாலனி | சரிமகமதநிபச் | ச்நிதகரிச |
| 16. ஜோதிரஞ்சனி | சரிகமபதநிச் | ச்நிதபமகமரிச |
| 17. தரங்கலீலா | சரிகரிமபதநிதமநிச் | ச்நிமகரிச |
| 18. திவ்யதோராணி | சரிகபதச் | ச்நிதமகரிச |
| 19. தீபாவதி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 20. பிரயாசி | சகமபதநிச் | ச்நிதபமகச |
| 21. பாமாமணி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 22. ராகவினோதினி | சரிகமநிச் | ச்நிமகரிச |
| 23. விஷங்கினி | சரிகமபதநிச் | ச்நிதநிபதமகரிகரிசா |
| 24. சரசம் | சரிகமபச் | ச்பமகரிச |
| 25. ஸ்புதாலாபினி | சகமபநிச் | ச்நிபமகச |

## 62. ரிஷபப்ரியா

ச ரி4 க6 ம4 ப த2 நி4 ச்

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 1. ரிஷபப்ரியா | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. ருசிரமணி | சகமபதநிதச் | ச்தபமகரிச |
| 3. ரத்னபானு | சரிமகரிமபநிதநிச் | ச்நிதபமகரிச |
| 4. பத்மகாந்தி | சரிகமபதநிச் | ச்நிபமகரிச |
| 5. சோமமஞ்சரி | சரிமபதநிதச் | ச்நிபமரிகரிச |
| 6. பிருந்தாவனதேசாக்ஷி | சரிகமபமதச் | ச்தபமகரிச |
| 7. கனகநாகாமணி | சரிகரிமபதநிச் | ச்நிதபமகரிச |
| 8. சுத்தசாரங்கம் | சகமபநிச் | ச்தபமகரிச |
| 9. விஜயகோத்ராரி | சரிகமப(த)நிச் | ச்நிதபமகரிச |
| 10. சுத்தவுத்திரி | சநிசரிகமபத | தபமகரிசநிச |
| 11. அப்ரதேசி | சகமபதநிதச் | ச்நிதபமகரிகச |
| 12. கத்யயாணி | சரிகமபநிச் | ச்நிபமகரிச |
| 13. கோகுலமூர்த்தி | சரிகபதச் | ச்நிதபமகரிச |
| 14. கோப்ரியா | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 15. தேஜோவதி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 16. பூர்ணசுப்புர | சரிகமபநிச் | ச்நிபதபமரிச |
| 17. பிருங்கத்துவனி | சகமபதநிச் | ச்நிதபமகச |
| 18. முக்தாவளி | சரிகமபநிதச் | ச்நிதபமகரிச |
| 19. சிவநாயகி | சரிமபதநிச் | ச்தபமகரிச |
| 20. ஸ்ரீஜௌடகாந்தாரி | சரிகமபதச் | ச்நிதபமகரிச |
| 21. ஜோதிஸ்பதி | சரிகமபச் | ச்நிதபமகரிச |
| 22. மங்கையர்க்கரசி | சரிகமபநிச் | ச்தபமகரிச |
| 23. பர்வதம் | சரிமபநிச் | ச்தபமகச |
| 24. அங்கயற்கண்ணி | சரிமபச் | ச்தபமகரிச |
| 25. கங்கைப்பிரியன் | சரிகமபதச் | ச்நிபமரிச |

## ரிஷபப்ரியா — தொடர்ச்சி

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 26. வரதன் | சரிமபதநிச் | ச்நிதபமகச |
| 27. விண்ணவததிபதி | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 28. வேதநாயகப்ரியா | சரிகமபதநிச் | ச்நிதபமகச |
| 29. அயனம் | சரிகமபதநிச் | ச்நிபகரிச |
| 30. அயிரை | சரிகமபதநிச் | ச்தபகரிச |
| 31. அயினி | சரிகமபதநிச் | ச்நிபமகச |
| 32. வடிவழகன் | சரிகமபதநிச் | ச்தபகச |
| 33. நெல்லையப்பன் | சரிகமபதநிச் | ச்நிபகச |
| 34. நம்மாழ்வார் | சரிகபநிச் | ச்நிதபமகரிச |
| 35. நெல்லைநாயகி | சகபதச் | ச்நிதபமகரிச |
| 36. சிக்கல்நாதன் | சகபநிச் | ச்நிதபமகரிச |
| 37. நெடியோன் | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 38. வீணாமிர்தம் | சரிகமபதச் | ச்நிபமகரிச |
| 39. வீணாசுகம் | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 40. மாஉகா | சகமபதநிச் | ச்நிபகரிச |
| 41. அகுடுரி | சரிகபதச் | ச்நிபமகரிச |
| 42. அகமருடணம் | சரிகபநிச் | ச்தபமகரிச |
| 43. வரன் | சரிகமநிச் | ச்தமகரிச |
| 44. அங்கரங்கா | சரிகபதச் | ச்நிபமகச |
| 45. நமோகரி | சரிகமபதச் | ச்நிபகச |
| 46. சிவாலய மனோகரி | சரிகமபநிச் | ச்தபகச |
| 47. இன்னிசைக்கடல் | சகபதச் | ச்நிபமகரிச |
| 48. ஸ்ரீவேதகிரி | சகபநிச் | ச்தபமகரிச |
| 49. மாமகாலிங்கம் | சரிமபதச் | ச்நிபகச |
| 50. மகுதூரன் | சரிமபநிச் | ச்தபகச |
| 51. யதாக்ஷி | சரிகபதச் | ச்நிதமச |
| 52. பிராதா | சகபதச் | ச்நிபமரிச |
| 53. பிராசேதசன் | சகபநிச் | ச்தபமரிச |
| 54. புசங்கம் | சரிமதச் | ச்நிபகச |
| 55. புடவி | சகபநிச் | ச்தமரிச |

## 63. லதாங்கி

ச ரி$^4$ க$^6$ ம$^4$ ப த$^2$ நி$^6$ ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | லதாங்கி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | லீலாவினோதினி | சரிகமபதநிதச் | ச்நிதபமகரிச |
| 3. | ரத்தினகாந்தி | சரிகமபநிச் | ச்நிபமகரிச |
| 4. | ரவிஸ்வரூபிணி | சகமபதநிச் | ச்நிதபமகச |
| 5. | பின்னநிஷாதம் | சநிசரிகமபதநி | பமகரிசநீ |
| 6. | நாகவாகினி | சரிகபமதநிச் | ச்நிதபமகரிச |
| 7. | ரமணீ | சகமபநிச் | ச்நிதபமகச |
| 8. | காலநிர்ணிகா | சகமபநிதச் | ச்பமகரிச |
| 9. | நவரத்னபூஷணி | சரிகமபதச் | ச்நிதபமகரிச |
| 10. | பூர்ணநிஷாதம் | பதநிதசரிகம | பமகசரிசநித |
| 11. | கருணாகரி | சமபதநிதச் | ச்நிதபமச |
| 12. | சுத்தகளாநிதி | சகபதநித | பமகரிசநிச |
| 13. | சுவர்ணகாந்தி | சகபமதநிச் | ச்நிபமகச |
| 14. | சுஜனரஞ்சனி | சகரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 15. | சாமுண்டி | சகரிமபநிதச் | ச்தநிபமகரிச |
| 16. | ஜனாகாரி | சரிகமபநிதச் | ச்தபமரிகரிச |
| 17. | ஸஜ்ஜனாநந்தி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 18. | கோத்ராளி | சமபதச் | ச்நிதபமகரிச |
| 19. | கோஹரஹித்தாஸ்வரூபி | பமபதநிசக | ரிசநிதபமப |
| 20. | சத்ரதரி | சகமபமரிபச் | ச்நிதபமகரிச |
| 21. | தாதுப்ரியா | சரிபமபதச் | ச்நிதபபமகமரிச |
| 22. | நயனப்ரியா (நைமப்பிரியா) | சரிமகமதபதச் | ச்நிதபமகபமகரிச |
| 23. | ஷட்விதஸ்வரூபிணி | சகரிகமநிச் | ச்நிதபமகரிச |
| 24. | கானனப்ரியா | சரிகமபமதநிச் | ச்தநிபமகரிச |
| 25. | தானரஞ்சனி | சரிகமபதபச் | ச்தபச்நிச்தபமகரிச |
| 26. | கோமலி | சரிகமபநிதமபச் | ச்தநிமகரிச |

லதாங்கி — தொடர்ச்சி

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 27. | கானநாயகி | சகமநிதபதநிச் | ச்நிதபமகரிச |
| 28. | கதலம் | சமபதநிச் | ச்நிதபமச |
| 29. | கீதப்பிரியா | சரிகமபதநிச்பதச் | ச்நிதபமரிகரிச |
| 30. | கோத்ராரி (கோத்னாரி) | சரிமபதச் | ச்நிதபமகரிச |
| 31. | கோவிந்த தன்யாசி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 32. | தாத்ரி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 33. | பூர்வரௌக்ஷிகர் | சரிமபமநிதச் | ச்நிபமகரிசநிதநிச |
| 34. | மங்கள்நாயகி | சரிமபநிச் | ச்நிபமகரிச |
| 35. | முகுந்தகல்யாணி | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 36. | லதாமணி | சரிகமபதநிச் | ச்நிதமகரிச |
| 37. | லலிதாங்கி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 38. | வேகமாலினி | சரிமகமபதச் | ச்நிதபமதமரிகரிச |
| 39. | சுருதிப்பிரகாசினி | சரிமதநிச் | ச்நிதமரிச |
| 40. | சரசசாமந்தினி | சரிகமபதநிச் | ச்பமகரிச |
| 41. | சரபிந்து | சரிகபநிதச் | ச்நிதநிபமகச |
| 42. | சுப்ரவாகினி | சரிகமநிச் | ச்நிபமகரிச |
| 43. | பூபகல்யாணி | சரிகபதச் | ச்நிதபமகரிச |
| 44. | வீரன் | சரிகமபதச் | ச்நிபமரிச |
| 45. | ஸ்ரீநவரத்னபூஷணி | சரிமபதநிச் | ச்நிதபமகச |
| 46. | ஸ்ரீரமணி | சகமபநிச் | ச்தபமகரிச |
| 47. | அதிபதி | சரிகபநிச் | ச்தபமகரிச |
| 48. | ஸ்ரீபத்மாவதி | சரிகமபச் | ச்நிதபமகரிச |
| 49. | ஸ்ரீவேதகிரி | சரிகமபநிச் | ச்தபமகரிச |
| 50. | குருதாசன் | சரிமபநிச் | ச்தபமகச |
| 51. | ஓச்சை | சரிகமபதநிச் | ச்நிபமகரிச |
| 52. | ஓடிசில் | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 53. | பிச்சையப்பா | சரிகமபதநிச் | ச்நிபகரிச் |
| 54. | மயூரகிரி | சரிகமபதநிச் | ச்தபகரிச |

## லதாங்கி — தொடர்ச்சி

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 55. | ஓம் | சரிகமபதநிச் | ச்நிபமகச |
| 56. | இசைக்கடல் | சரிகமபதநிச் | ச்தபமகச |
| 57. | சுகள்வரூபி | சரிகமபதநிச் | ச்நிபகச |
| 58. | ஏரகத்தண்ணல் | சரிகமபதநிச் | ச்தபகச |
| 59. | ஓதி | சரிகமபநிச் | ச்நிதபமகரிச |
| 60. | ஒலியல் | சரிகபதநிச் | ச்நிதபமகரிச |
| 61. | பேரூரன் | சரிகபநிச் | ச்நிதபமகரிச |
| 62. | வள்ளிப்ரியா | சகபநிச் | ச்நிதபமகரிச |
| 63. | தேவகுஞ்சரிப்பிரியன் | சகபதச் | ச்நிதபமகரிச |
| 64. | இன்னிசைவள்ளல் | சரிகமபநிச் | ச்தபமரிச |
| 65. | இசைவாரிதி | சரிகமபதச் | ச்நிபமகச |
| 66. | இசைஉலகஜோதி | சரிகமபநிச் | ச்தபமகச |
| 67. | மதுரைவாசனி | சகமபதச் | ச்நிபமகரிச |
| 68. | மதுரைவாசன் | சரிகபநிச் | ச்நிபமகரிச |
| 69. | குபேரப்ரியா | சரிகபநிச் | ச்தபமகச |
| 70. | ஸ்ரீஏறூர்ந்தோன் | சரிமபதச் | ச்நிபகச |
| 71. | ஏனல் | சரிகமபநிச் | ச்தபகச |
| 72. | எழில்நாயகி | சகபதச் | ச்நிபமகரிச |
| 73. | எழில்நாயகன் | சகபநிச் | ச்தபமகரிச |
| 74. | குபேரன் | சரிமபச் | ச்தபமகரிச |
| 75. | நேரு | சரிமபச் | ச்நிபமகரிச |
| 76. | சுபாஷ் | சரிமபதச் | ச்நிபகச |
| 77. | மகாத்மா | சரிமபநிச் | ச்தமகச |
| 78. | மாபாரதி | சரிமபநிச் | ச்தபகச |
| 79. | உம்பளம் | சகபதச் | ச்நிபமரிச |
| 80. | ஆரகூலம் | சகபநிச் | ச்தபமரிச |
| 81. | ஆரக்கம் | சகமபச் | ச்நிதமரிச |
| 82. | ஆனந்தமயன் | சரிமதச் | ச்நிபகச |
| 83. | ஆனந்தரூபி | சகபமச் | ச்தமரிச |

## 64. வாசஸ்பதி

ச ரி⁴ க⁶ ம⁴ ப த⁴ நி⁴ ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | வாசஸ்பதி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | விஜயாபரணி | சரிகமபதநிதச் | ச்நிதபமகரிச |
| 3. | தேவாமிர்தவாகினி | சகமபநிதநிச் | ச்நிதநிபமகரிச |
| 4. | குடும்பினி | சகமதபதநிச் | ச்நிபமகரிச |
| 5. | பலதாயகி | சகபமதநிச் | ச்தநிபகமகரிச |
| 6. | ப்ரபரு (பர்பா) | சகமரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 7. | உத்தரி | சகமபதநிச் | ச்நிதமகச |
| 8. | சிம்ஹஸ்வரூபி | சகமதநிச் | ச்நிபமகச |
| 9. | கேதகப்ரியா | சகமபநிச் | ச்நிதபமகரிச |
| 10. | பஞ்சமூர்த்தி | சரிகமபதநி | தபமபகரிசநிச |
| 11. | நாதப்பிரும்மம் | சபமபதநிச் | ச்நிதபமகச |
| 12. | ப்ரணவாகரி | பநிதநிசரிகம | பமகரிசநிதநிப |
| 13. | சரதிந்துமுகி | சகமபநிதநிபச் | ச்நிதபமகரிச |
| 14. | பூஷாவளி | சரிகமபதச் | ச்நிதபமகரிச |
| 15. | ரத்னாம்பரி | சகமபச் | ச்நிதபமரிச |
| 16. | குருப்பிரியா | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 17. | பரிமளாநந்தி | சரிகபமதநிச் | ச்நிபமகச |
| 18. | விஜ்ரும்பினி | சகபநிதநிச் | ச்நிதநிபமகரிச |
| 19. | சரஸ்வதி | சரிமபதச் | ச்நிதபமரிச |
| 20. | போகீஸ்வரி | சரிகபதநிதச் | ச்நிதபமகரிச |
| 21. | தருணப்ரியா | சகரிகமபநிதச் | ச்நிபமரிச |
| 22. | மங்களகரி | சரிபமபதநிச் | ச்நிதபசரிச |
| 23. | ககனமோகினி | சகபதநிச் | ச்நிபமகச |
| 24. | சரமந்தசிகாமணி | சகமபமதநிச் | ச்நிதபகச |
| 25. | அருணகிரி | சரிகமதச் | ச்தமகரிச |

## வாசஸ்பதி — தொடர்ச்சி

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 26. | ஐராவதி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 27. | கதித | சரிமபநிச் | ச்நிதபமகரிச |
| 28. | ஜகாபரணம் | சரிமகமபதநிச் | ச்நிதபமகமரிச |
| 29. | திரிவேணி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 30. | பரமேஷ்டி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 31. | பஞ்சநாராயணி | சகமபநிதநிச் | ச்நிதபமகரிச |
| 32. | முக்திதயாணி | சகமபதநிச் | ச்நிதபமகச |
| 33. | லதிகாந்தி | சகமதநிச் | ச்நிதபமபமகரிச |
| 34. | விலாம்பூரி | சரிகபதச் | ச்நிதநிபமபகரிச |
| 35. | சந்தாநிக | சரிகமநிச் | ச்நிமகரிச |
| 36. | சுதாலகரி | சரிமதநிச் | ச்நிதமரிச |
| 37. | ஹார்தினி | சகமபநிச் | ச்நிபமகச |
| 38. | ஹிரதாரணி | சகமபதச் | ச்தபமகச |
| 39. | பிருந்தாவன சாரங்கா | சரிமபநிச் | ச்நிபமரிச |
| 40. | தமயந்தி | சகமபச் | ச்நிதபமகரிச |
| 41. | வெங்கடாஜலன் | சகமபதச் | ச்நிதபமகரிச |
| 42. | அமரி | சகமபநிச் | ச்தபமகரிச |
| 43. | தேவகுஞ்சரி | சரிகபதச் | ச்நிதபமகரிச |
| 44. | கருணாகரன் | சரிகமதச் | ச்நிபமகரிச |
| 45. | விதாதா | சரிமதநிச் | ச்நிதமரிச |
| 46. | கமலவூர்தி | சமபதநிச் | ச்நிதபமச |
| 47. | அனுவழிப்பிரியன் | சரிகமபதநிச் | ச்நிபமகரிச |
| 48. | அனூரு ஒளி | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 49. | அந்தரர்நாயகி | சரிகமபதநிச் | ச்நிபகரிச |
| 50. | தேவஅத்திரு | சரிகமபதநிச் | ச்தபகரிச |
| 51. | ஆதிபூச்சியர் | சரிகமபதநிச் | ச்நிபமகச |
| 52. | மாமாதேவி | சரிகமபதநிச் | ச்நிபகச |
| 53. | மகாதேவப்பிரியா | சரிகமபதநிச் | ச்தபகச |

## வாசஸ்பதி — தொடர்ச்சி

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 54. | அந்தரக்கொடிச்சி | சரிகபதநிச் | ச்நிதபமகரிச |
| 55. | மாசகன் | சகபதச் | ச்நிதபமகரிச |
| 56. | சகன்மோகினி | சகபநிச் | ச்நிதபமகரிச |
| 57. | அண்டர்நாயகி | சரிகமபநிச் | ச்தபமகரிச |
| 58. | பழமுதிர்சோலை | சரிகபதநிச் | ச்தபமகச |
| 59. | உத்தரி | சகமபதநிச் | ச்நிதமகச |
| 60. | சுகமேசொரூபன் | சரிகபதநிச் | ச்நிபமகச் |
| 61. | அருள்நாயகி | சரிகபதச் | ச்நிபமகரிச |
| 62. | மாஸ்ரீகிரதாரணி | சரிகபதச் | ச்நிபமகச |
| 63. | சிவரௌத்திரம் | சரிகமபதச் | ச்நிபகச |
| 64. | வாசன் | சரிகமபநிச் | ச்தபகச |
| 65. | இராமாபரணம் | சரிமபச் | ச்நிதபமகச |
| 66. | தேவப்புகழ்மணி | சகமதச் | ச்நிபமகரிச |
| 67. | இரவிகாந்தமணி | சரிமபதச் | ச்நிபகச |
| 68. | இரவிகுலநாயகன் | சரிமபநிச் | ச்தபகச |
| 69. | இரமி | சகபதச் | ச்நிபமகச |
| 70. | இரமணியம் | சகபநிச் | ச்தபமகச |
| 71. | இரணபேரிஒலி | சரிமதச் | ச்நிபகச |
| 72. | இரட்டுமித்வனி | சகபதச் | ச்தமரிச |

## 65. மேசகல்யாணி

ச ரி4 க6 ம4 ப த4 நி6 ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | கல்யாணி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | மைத்ரபாவினி (சரசகல்யாணி) | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 3. | கௌமோதம் | சரிகமநிச் | ச்நிமகரிச |
| 4. | சுத்தரத்னபானு | சரிகமபச் | ச்நிதபமகச |
| 5. | குந்தலஸ்ரீகண்டி | சகமபதநிச் | ச்நிபமகரிச |
| 6. | சுத்தகோசலம் | சகமபச் | ச்நிதமகரிச |
| 7. | ஹமீர்கல்யாணி | சபமபதநிச் | ச்நிதபகமகரிச |
| 8. | சுனாதவினோதனி | சகமதநிச் | ச்நிதமகச |
| 9. | குந்தலகுசுமாவளி | சரிகமபமபச் | ச்நிதநிபமகச |
| 10. | யமுனாகல்யாணி | சரிகபமபதச் | ச்தபமபகரிச |
| 11. | சுந்தரகாந்தம் | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 12. | சீலாங்கி (ஸ்மரரஞ்சனி) | சகமபநிச் | ச்நிபமகச |
| 13. | கனககண்ட | சகரிகமபநிதச் | ச்நிபமரிகமரிச |
| 14. | கன்னடமாருவ | சகமபதநிச் | ச்நிதபமகச |
| 15. | கமலோத்தரம் (நிருமலன்) | சமபதநிச் | ச்நிதபமச |
| 16. | கல்யாணதாயனி (லக்ஷ்மணகுந்தலி) | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 17. | நிர்வாணி | சரிமபதநிச் | ச்நிதமகரிச |
| 18. | நிஷாதி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 19. | பயங்கல | சரிகமபநிதநிச் | ச்நிதமகரிச |
| 20. | பூபகல்யாணி | சரிமபதச் | ச்நிதபமகரிச |
| 21. | மதுஜங்காரி | சரிகமகபநிதநிச் | ச்நிபமகரிச |
| 22. | மகதரங்கிணி | சரிகமபதச் | ச்நிதபமரிகரிச |
| 23. | மாதவகல்யாணி | சரிகமபதச் | ச்நிதபமகரிச |
| 24. | மேசவுத்தரி | சகமபதநிச் | ச்நிதமகச |
| 25. | மோஹனகல்யாணி | சரிகபதச் | ச்நிதபமகரிச |

## மேசகல்யாணி — தொடர்ச்சி

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 26. | வந்தனதாரிணி | சரிமபதச் | ச்தபமரிச |
| 27. | சஷதாரித்ரி (தேசிய சிந்து மாளவி) | சரிகமபதநிச் | ச்தபகரிச |
| 28. | சியாம கல்யாணி | சரிகமபநிச் | ச்நிபதபமகரிச |
| 29. | சுப்ரவர்ணி | சரிமதநிச் | ச்நிதமரிச |
| 30. | சிங்காரமூர்த்தி | சரிகமபநிச் | ச்நிதபமகரிச |
| 31. | சாரங்க | சரிகமபதநிச் | ச்நிதபமரிகமரிச |
| 32. | சாஸ்வக | சகரிகமபதநிதச் | ச்நிதபமகரிகரிச |
| 33. | சுதாகல்யாணி | சரிகபதநிச் | ச்நிதபகரிச |
| 34. | ஆதிகவிம்பிரியன் | சரிகமபதநிச் | ச்நிபமகரிச |
| 35. | விளக்கொளி | சரிகபதநிச் | ச்நிதபமகரிச |
| 36. | குறத்திமணாளன் | சகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 37. | பரிபூர்ணஸ்வரூபி | சரிமபதநிச் | ச்நிதபமகரிச |
| 38. | ஸ்ரீதனுகீர்த்தி | சரிகமபதநிச் | ச்நிபகரிச |
| 39. | மாளவிசிந்து | சரிகமபதநிச் | ச்நிபமகச |
| 40. | சிந்துதேசியமாளவி | சரிகமபதநிச் | ச்தபமகச |
| 41. | மாமங்கள தேசிகம் | சரிகபநிச் | ச்நிதபமகரிச |
| 42. | கோகிலபூபாளம் | சகமபதச் | ச்நிதபமகரிச |
| 43. | கோடைபூபாளம் | சகமபநிச் | ச்நிதபமகரிச |
| 44. | மேககுந்தலி | சரிகமபதச் | ச்நிபமகரிச |
| 45. | மாமேககுந்தலி | சரிகமபநிச் | ச்தபமகரிச |
| 46. | அந்தரி | சகமபதநிச் | ச்தபமகரிச |
| 47. | சகஸ்ரநாமம் | சரிகமபதச் | ச்நிபகரிச |
| 48. | மாகனகபவானி | சரிகமபநிச் | ச்தபகரிச |
| 49. | மாகனககிரி | சகமபதநிச் | ச்தபகரிச |
| 50. | கோசலவிஜயம் | சரிமபதநிச் | ச்நிபகரிச |
| 51. | ஞானசுருதிநிரஞ்சனி | சரிகபதநிச் | ச்நிபமகச |
| 52. | தீபகாவிஜயம் | சரிகமதநிச் | ச்தபகரிச |

மேசகல்யாணி — தொடர்ச்சி

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 53. மாவிஜயகீர்த்தி | சரிகபதநிச் | ச்தபமகச |
| 54. மாபோககுசுமாவளி | சரிகபதச் | ச்நிபமகச |
| 55. மாருவசிந்து | சரிகபநிச் | ச்தபமகரிச |
| 56. மலையாளக்குறிஞ்சி | சகமபதச் | ச்நிபமகரிச |
| 57. ப்ரமோதினி (கிரதாரணி) | சகமபதச் | ச்தபமகச |
| 58. அலர்மகள் | சரிகமதச் | ச்தமகரிச |
| 59. ஜன்யசூடாமணி | சரிகபதச் | ச்நிபமகச |
| 60. மாகந்தர்வ கோகிலம் | சரிகபநிச் | ச்தபமகச |
| 61. கலகஹம்சா | சகமபதச் | ச்நிபகரிச |
| 62. தேவஅம்சத்வனி | சகமபநிச் | ச்தபகரிச |
| 63. தேவசாவேரி | சரிகமபதநிச் | ச்நிபகரிச |
| 64. தேவதன்யாசி | சரிகமபதநிச் | ச்தபகச |
| 65. மகாகோகிலம் | சகபதச் | ச்நிதபமகரிச |
| 66. ஸ்ரீமாசாமந்தம் | சகபநிச் | ச்நிதபமகரிச |
| 67. குருதீபகம் | சரிகபச் | ச்நிதபமகரிச |
| 68. மாமருவகௌள | சகமபச் | ச்நிதபமகரிச |
| 69. பேரானந்தபோகி | சரிகமபதச் | ச்நிபகச |
| 70. பேரானந்தநாயகி | சரிகமதநிச் | ச்நிபகச |
| 71. மாமேசசாவேரி | சகபநிச் | ச்தபமகரிச |
| 72. இந்துமாகீர்வாணி | சகபதச் | ச்நிபமகரிச |
| 73. மாகோபதி | சரிகபச் | ச்நிதமகரிச |
| 74. தேவஅம்சவேளாவளி | சரிமபதச் | ச்நிபகச |
| 75. மாயோகதன்யாசி | சரிமபநிச் | ச்தபகச |
| 76. ஆந்தாளிநவரசம் | சகபதச் | ச்நிபமரிச |
| 77. மாதர்மாணி | சகபநிச் | ச்தபமரிச |
| 78. நவதிருமணி சந்திரிகா | சகமபச் | ச்நிதமரிச |
| 79. மாதவளாங்கி | சரிகபச் | ச்நிதமரிச |
| 80. விஜயமாதிருவசந்தம் | சரிமதச் | ச்நிபகச |
| 81. தேவகமலநாராயணி | சகபநிச் | ச்தமரிச |

## 66. சித்ராம்பரி

ச ரி4 க6 ம4 ப த6 நி6 ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | சித்ராம்பரி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | சூர்ணிகாவினோதினி | சரிகமபதநிச் | ச்நிதநிபமகரிச |
| 3. | சதுரங்கினி | சமகமபநிச் | ச்நிதநிபகமகரிச |
| 4. | விஜயகோசலம் | சரிகமபமபச் | ச்நிபமகச |
| 5. | ககனரஞ்சினி | சகமபச் | ச்தநிபமகரிச |
| 6. | நாககுந்தலி | சரிகமபநிச் | ச்நிபதநிபமகரிச |
| 7. | ககனபவானி | சமகமபதநிச் | ச்நிபமரிச |
| 8. | கனககிரி | சரிகமபச்நிச் | ச்நிதநிபமகச |
| 9. | தேவகீர்வாணி | சகரிமபச் | ச்பமகரிச |
| 10. | சுத்தநிர்மத | சரிகமபதநிபச் | ச்நிமகச |
| 11. | அமிர்தவர்ஷணி | சகமபநிச் | ச்நிபமகச |
| 12. | ஈசப்பிரியா | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 13. | சந்திரிகம் | சகமதநிச் | ச்நிதமகச |
| 14. | சித்தரஞ்சிலினி | சரிகமபதச் | ச்நிபமரிகமரிச |
| 15. | திருவிக்ரிணி | சரிகமபமதநிச் | ச்தபமகரிச |
| 16. | தீவ்ரதாகமினி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 17. | மானினி | சரிகமதச் | ச்தமகரிச |
| 18. | முகுரகபோல | சகமபதநிச் | ச்நிதபமகச |
| 19. | முசகூதனி | சமபநிதநிச் | ச்நிபமகரிச |
| 20. | விசித்ராம்பரி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 21. | ஶ்ரீநந்தனு | சரிகமபதநிச் | ச்நிதபமதமகரிச |
| 22. | சாமக்கிரியா | சரிகமகபதச் | ச்நிதபமகரிச |
| 23. | சாய்கதக்ஷீரனி | சரிமபதச் | ச்தபமரிச |
| 24. | ஹேரம்பாபிரிய | சரிமதநிச் | ச்நிதமரிச |
| 25. | சாரதி | சரிகரிமபதச் | ச்நிபதபமகரிச |

## 67. சுசரித்ரா

ச ரி6 க6 ம4 ப த2 நி2 ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | சுசரித்ரா | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | சேஞுஜயந்தி | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 3. | சத்தியவதி | சரிமபதநிதச் | ச்நிதபமகமரிச |
| 4. | குந்தலபவானி | சரிகமபமபச் | ச்நிதநிபமரிச |
| 5. | சோமமஞ்சரி | சகமபதச் | ச்தபமகரிச |
| 6. | கனகீர்வாணி | சரிமபமதநிச் | ச்தபமரிச |
| 7. | பானுஜோதிஷ்மதி | சரிகமபதநிதச் | ச்நிதபமகமரிச |
| 8. | கனகநிர்மத | சரிகமபமதச் | ச்நிதபமகரிச |
| 9. | ராமகுந்தலி | சரிகமபதநி | தபமகரிசநிச |
| 10. | சுத்தசிம்காரவம் | சரிமகமபதநிச் | ச்தநிதபமரிச |
| 11. | கீர்த்திபானு | சரிகமபதபச் | ச்நிதபமகரிச |
| 12. | குமுதினி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 13. | கேதஞுவலி | சரிகமநிபதச் | ச்நிதமபமகச |
| 14. | கோபிகாமஞேரஞ்சனி | சரிகமபநிச் | ச்நிபமகரிச |
| 15. | பதாக | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 16. | பர்வபாவதி | சரிமபதநிதச் | ச்நிதபமகரிச |
| 17. | பிங்கவதி | சகமகபதநிச் | ச்நிதபமகரிச |
| 18. | மாயசொரூபிணி | சரிகமதச் | ச்தமகரிச |
| 19. | ரங்கவாம்பரி | சரிமபநிச் | ச்நிபமரிச |
| 20. | விஸ்வதாத்திரி | சகரிமதநிச் | ச்நிதமகச |
| 21. | ஷம்பாவி | சரிகமநிச் | ச்நிமகரிச |
| 22. | சியாமளவர்ணி | சரிகமபச் | ச்பமகரிச |
| 23. | சுத்தகைவஷ | சரிகமபதநிச் | ச்நிதநிபமகரிகச |
| 24. | சந்தானமஞ்சரி | சரிகமபதச் | நிதபமரிச |
| 25. | சம்ரக்ஷணி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிகச |
| 26. | ஷோணி | சரிமதநிச் | ச்நிதமரிச |

## 68. ஜோதிசொரூபிணி

ச ரி$^{6}$ க$^{6}$ ம$^{4}$ ப த$^{2}$ நி$^{4}$ ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | ஜோதிசொரூபிணி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | ஜவுடகாந்தாரி | சரிகமபதச் | ச்நிதபமகரிச |
| 3. | ஜயோதிஷ்மதி | சரிகமபச் | ச்நிதமபமரிகச |
| 4. | குந்தலரஞ்சனி | சரிமபநிதநிச் | ச்நிதபமகரிச |
| 5. | புவனகுந்தலி | சரிகமபதச் | ச்தபமகச |
| 6. | குசுமபவாணி | சரிமபதச் | ச்நிதமபமரிச |
| 7. | ராம்கிரி | சரிமகமபதநிச் | ச்தநிதபமகரிச |
| 8. | குந்தலகீர்வாணி | சரிகமபதநிச் | ச்தமபமகரிச |
| 9. | உறிந்தோளதேசாக்ஷி | சநிசரிகமபதச் | ச்தபமகரிச |
| 10. | சுத்தசுருதிரஞ்சனி | சரிமபதநிதச் | ச்நிதபமகமரிச |
| 11. | கஞ்சபவப்ரியா | சரிகமபநிச் | ச்நிபமகரிச |
| 12. | காந்திஸ்வரூபிணி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 13. | கேதகங்குஷா | சரிமபமதநிச் | ச்தமகரிச |
| 14. | ஜலஜாமுகி | சரிகமபதச் | ச்நிதநிபமரிகசா |
| 15. | தொமரபாணி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 16. | நாகமணி | சரிமபதச் | ச்நிதபமகரிச |
| 17. | வனஜாரிணி | சரிகபதநிதச் | ச்நிபமகரிச |
| 18. | வாணிணி | சரிகமநிச் | ச்நிமகரிச |
| 19. | விராரணி | சரிகமபதநிச் | ச்தபமரிகரிச |
| 20. | சிரேயதாயனி | சரிமதநிச் | ச்நிதமரிச |

## 69. தாதுவர்தனி

ச ரி⁶ க⁶ ம⁴ ப த² நி⁶ ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | தாதுவர்தனி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | தீரசாவேரி | சரிகமபதநிச் | ச்தபமகரிச |
| 3. | நளினகுசுமாவளி | சரிகமபமபச் | ச்நிதநிபமரிச |
| 4. | தாதுப்பஞ்சமம் | சரிகமபநிபச் | ச்நிதபமரிகமரிச |
| 5. | பிருந்தாவன கன்னட | சகமபதச் | ச்தபமகரிச |
| 6. | குந்தலசிம்காரவம் | சரிமபமதநிச் | ச்தபமகரிச |
| 7. | லலிதகோசல | சரிகமபதநிதச் | ச்நிதபமகமரிச |
| 8. | பத்மபவானி | சரிகமபமதச் | ச்நிதபமகரிச |
| 9. | ஈசகிரி | சரிகமபதநி | தபமகரிசநிச |
| 10. | குசுமஜ்யோதிஷ்மதி | சரிமகமபதநிச் | ச்தநிதபமரிச |
| 11. | கலபோகி | சரிகமபதபச் | ச்தமபமகரிச |
| 12. | சந்தநாகந்தி | சரிகமபநிச் | ச்நிபமகரிச |
| 13. | சாயவர்த்தினி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 14. | தேவநாயகி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 15. | தனுப்பிரியா | சரிகமநிச் | ச்நிபதமகரிச |
| 16. | பரிதி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 17. | வர்தனி | சமகமபநிதச் | ச்நிதபமகரிச |
| 18. | ஷம்புதயுத்தி | சகமதநிச் | ச்நிதபமகரிச |
| 19. | சசிப்பிரியா | சரிகமநிச் | ச்நிமகரிச |
| 20. | சம்வேஷினி | சரிமதநிச் | ச்நிதமரிச |
| 21. | சைதவக்கிரியா | சரிகமபதநிச் | ச்நிபமரிச |
| 22. | ஹவலிலாசினி | சரிமபதச் | ச்தபமரிச |

## 70. நாசிகாபூஷணி

ச ரி$^{6}$ க$^{6}$ ம$^{4}$ ப த$^{4}$ நி$^{4}$ ச்

| இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|
| 1. நாசிகாபூஷணி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. நிகமசஞ்சாரி | சகமபதநிச் | ச்நிதநிபமரிச |
| 3. குந்தலகண்டானம் | சரிகமபமபச் | ச்நிபமரிச |
| 4. நாசாமணி | சரிகமபமபச் | ச்நிதநிபமரிச |
| 5. கௌரிசீமந்தினி (கௌரிசாமந்தி) | சரிகமபதநிச் | ச்நிபமகச |
| 6. நீதிகுந்தலி | சமகமபதநிச் | ச்தநிபமகச |
| 7. உறம்சகோசல | சரிகமபதநிதச் | ச்நிதபமகமரிச |
| 8. கன்னடபூமானி | சரிகமபதநிச் | ச்நிதமகரிமகச |
| 9. கமலபாணி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 10. கர்ணபூஷணி | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 11. கலவகுல | சரிகமநிதநிச் | ச்நிபமகரிச |
| 12. பஞ்சரூபி | சரிமபதச் | ச்நிதபமகரிச |
| 13. பாகாசனப்பிரியா | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 14. ரங்காரோகிணி | சரிமபநிச் | ச்நிபமரிச |
| 15. ரவிப்பிரதாபி | சரிகமதச் | ச்தமகரிச |
| 16. ரேவநாட | சரிமபநிதச் | ச்தபகரிமகச |
| 17. வீரமேகம் | சரிகமபதநிதநிச் | ச்தபகரிமகச |
| 18. ஷட்பதத்வனி | சரிமபதச் | ச்தபமரிச |
| 19. ஹரிநாக்ஷி | சரிமதநிச் | ச்நிதமரிச |

## 71. கோசலம்

ச ரி$^{6}$ க$^{6}$ ம$^{4}$ ப த$^{4}$ நி$^{6}$ ச்

| இராகத்தின் பெயர் | | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | கோசலம் | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | கௌசுதப்ரியா | சரிகமபதநிச் | ச்தபமகமரிச |
| 3. | பிரதாபசாரங்கம் | சரிகமபதச் | ச்நிதபமகச |
| 4. | நாககிரி | சகமபதபச் | ச்தபமகச |
| 5. | கௌரிநிஷாதம் | சகமபநிதச் | ச்நிதநிபமகச |
| 6. | சத்தியபூஷணி | சகமபதநிச் | ச்நிதபமகச |
| 7. | குசுமாவளி | சகமபதச் | ச்நிதபமகமரிச |
| 8. | கோசலா | சரிகபதச் | ச்நிதபமகரிச |
| 9. | ஜெயசுகா | சரிகமபதநிச் | ச்தபமகமரிச |
| 10. | பிரீதிவருணி | சரிகரிமபதநிதச் | ச்நிதமபமகரிச |
| 11. | பலநாதனி | சமகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 12. | ராமவராளி | சரிமபநிதச் | ச்நிதமகரிச |
| 13. | வரதாரி | சரிகமபதபநிச் | ச்நிபமரிகரிச |
| 14. | சர்வமங்கள | சரிமதநிச் | ச்நிதமரிச |

## 72. ரசிகப்ரியா

ச ரி$^{6}$ க$^{6}$ ம$^{4}$ ப த$^{6}$ நி$^{6}$ ச்

| | இராகத்தின் பெயர் | ஆரோசை (ஆரோகணம்) | அமரோசை (அவரோகணம்) |
|---|---|---|---|
| 1. | ரசிகப்ரியா | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2. | ரீதிமல்லாரு | சரிகமபச் | ச்நிபதநிபமகச |
| 3. | கிரிகுந்தலி | சரிகமகமபச் | ச்நிதபமகச |
| 4. | ஹம்சகிரி | சரிகமபதநிச் | ச்நிபதநிபமகச |
| 5. | கனகஜ்யோதிஷ்மதி | சமபதநிச் | ச்நிதபமகச |
| 6. | ரசமஞ்சரி | சரிகமபதநிச் | ச்நிபமரிச |
| 7. | அம்ருதசுரரூபிணி | சரிகமபதச் | ச்தபமகரிச |
| 8. | பார்வதி | சரிமபதநிச் | ச்நிதபமரிச |
| 9. | மங்களசந்திரிகா | சரிகமபதநிச் | ச்நிதபமதமகரிச |
| 10. | மாரதரங்கிணி | சகமதநிபநிச் | ச்பமகரிச |
| 11. | ரக்தாக்ஷி | சரிகமதச் | ச்தமகரிச |
| 12. | வாரிதரஞ்சனி | சரிமபநிச் | ச்நிபமரிச |
| 13. | சிவமனோகரி | சரிமபநிச் | ச்தபமரிமகச |
| 14. | ஷோபாம்பிகா | சரிமபநிச் | ச்நிதபமரிகச |
| 15. | சரசப்ரியா | சரிகமதநிச் | ச்நிதமகரிச |
| 16. | சுந்தராங்கி | சரிகபதச் | ச்நிதபமபகரிச |
| 17. | ஸ்புதாலாப்பினி | சகமபதச் | ச்தபமகச |
| 18. | ஹரிசந்தனப்பிரியா | சரிமதநிச் | ச்நிதமரிச |

# 72 மேளகர்த்தா இராகங்களும் அவைகளில் பிறந்த கிளை இராகங்களின் எண்ணிக்கையும்

| மே. க. எண். | மே. க. இராகம் | கிளை இராகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கனகாங்கி | 29 |
| 2. | ரத்னாங்கி | 22 |
| 3. | கானமூர்த்தி | 23 |
| 4. | வனஸ்பதி | 23 |
| 5. | மானவதி | 18 |
| 6. | தானரூபி | 21 |
| 7. | சேனாவதி | 24 |
| 8. | அனுமத்தோடி | 92 |
| 9. | தேனுகா | 66 |
| 10. | நாடகப்ரியா | 97 |
| 11. | கோகிலப்ரியா | 70 |
| 12. | ரூபாவதி | 19 |
| 13. | காயகப்ரியா | 30 |
| 14. | வகுளாபரணம் | 88 |
| 15. | மாயாமாளவகௌளை | 132 |
| 16. | சக்ரவாகம் | 82 |
| 17. | சூரியகாந்தம் | 74 |
| 18. | ஹாடகாம்பரி | 22 |
| 19. | ஜங்காரத்வனி | 21 |
| 20. | நடபைரவி | 107 |
| 21. | கீரவாணி | 68 |
| 22. | கரகரப்ரியா | 154 |
| 23. | கௌரிமனோகரி | 70 |
| 24. | வருணப்ரியா | 24 |
| 25. | மாரரஞ்சனி | 27 |
| 26. | சாருகேசி | 61 |
| 27. | சரசாங்கி | 77 |

| மே. க. எண். | மே. க. இராகம் | கிளை இராகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 28. | ஹரிக்காம்போதி | 157 |
| 29. | தீரசங்கராபரணம் | 134 |
| 30. | நாகநந்தினி | 28 |
| 31. | யோகப்ரியா (யாகப்ரியா) | 28 |
| 32. | இராகவர்த்தனி | 29 |
| 33. | காங்கேயபூஷணி | 24 |
| 34. | வாகதீஸ்வரி | 28 |
| 35. | சூலினி | 23 |
| 36. | சலநாட்டை | 24 |
| 37. | சாலகம் | 33 |
| 38. | ஜாலார்ணவம் | 22 |
| 39. | ஜலவராளி | 32 |
| 40. | நவநீதம் | 22 |
| 41. | பாவனி | 22 |
| 42. | ரகுப்ரியா | 24 |
| 43. | கவாம்போதி | 28 |
| 44. | பவப்ரியா | 58 |
| 45. | சுபபந்துவராளி | 63 |
| 46. | ஷட்விதமார்கினி | 51 |
| 47. | சுவர்ணாங்கி | 57 |
| 48. | திவ்யமணி | 25 |
| 49. | தவளாம்பரி | 20 |
| 50. | நாமநாராயணி | 57 |
| 51. | காமவர்தனி | 72 |
| 52. | ராமப்ரியா | 75 |
| 53. | கமனப்ரியா | 64 |
| 54. | விஸ்வம்பரி | 20 |
| 55. | சியாமளாங்கி | 22 |
| 56. | சண்முகப்ரியா | 66 |
| 57. | சிம்மேந்திரமத்யமம் | 60 |

| மே. க. எண். | மே. க. இராகம் | கிளை இராகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 58. | ஹேமவதி | 62 |
| 59. | தர்மவதி | 61 |
| 60. | நீதிமதி | 20 |
| 61. | காந்தாமணி | 25 |
| 62. | ரிஷபப்ரியா | 55 |
| 63. | லதாங்கி | 83 |
| 64. | வாசஸ்பதி | 72 |
| 65. | மேசகல்யாணி | 81 |
| 66. | சித்ராம்பரி | 25 |
| 67. | சுசரித்ரா | 26 |
| 68. | ஜோதிசொரூபிணி | 20 |
| 69. | தாதுவர்தனி | 22 |
| 70. | நாசிகாபூஷணி | 19 |
| 71. | கோசலம் | 14 |
| 72. | ரசிகப்ரியா | 18 |
| | மொத்த இராகங்கள் | 3,512 |

# 11

# இணை, கிளை, நட்பு, பகைச் சுரங்கள்

இரண்டு சுரங்கள் (நரம்புகள்) ஒரே சமயத்தில் ஒன்றோடு ஒன்று பொருந்தி ஒலிக்கும்போது, ஓர் இன்ப ஒலிக்கலவை ஏற்பட்டு, நம் செவிக்கு இன்பத்தைத் தருகிறது. உதாரணமாக, தம்புராவில் குரல் (சட்ஜம்) இளி (பஞ்சமம்) என்னும் இரு நரம்புகளையும் மீட்டும்போது அதில் சேர்ந்து ஒலிக்கும் நாதம் நம்மை மெய்மறக்கச் செய்கிறது. ஐரோப்பிய இசையில் இதை ஆர்மோனி ( Harmony ) என்கிறார்கள். இவ்வாறு சுரங்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தி வருவது மூன்று வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதை இணை, கிளை, நட்புச் சுரங்கள் என்று பழந்தமிழ் மக்கள் குறிப்பிட்டனர். சுரங்கள் ஒன்றோடொன்று பொருந்தி வராதபோது அவைகளைப் பகைச் சுரங்கள் என்றார்கள். உதாரணமாக ஆர்மோனிய வாத்தியத்தில் குரலையும் (சட்ஜம்) நிறை உழையையும் (பிரதி மத்யமம்) சேர்ந்து ஒலிக்கச் செய்தால், அந்தச் சுரங்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தாமல் நம் செவிக்குத் துன்பத்தைத் தரும். இவ்வாறு சுரங்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தி ஒலிப்பதையும், பொருந்தாமல் ஒலிப்பதையும் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் ''இசைபுணர் குறிநிலை'' என்று குறிப்பிடுகிறார்.

''இணை கிளை பகை நட்பென்றிந் நான்கின்
இசைபுணர் குறி நிலை எய்தநோக்கி.''

[சிலப்பதிகாரம் 8 : 33, 34]

**இணைச்சுரம் :**

இணை என்றால் இரண்டு இசைந்த நரம்புகள் அல்லது பொருந்திய சுரங்கள் என்று பொருள்படும். இது ச—ப முறைப்படி உண்டான சுரங்கள் ஆகும். அதாவது நின்ற சுரத்திற்கு (நரம்பிற்கு) ஏழாவது சுரம் இணைச் சுரமாகும்.

1 2 1 2 1 2
ச ரி ரி க க ம ம ப
1 2 3 4 5 6 7

எந்தெந்த சுரங்கள் ச-ப வைப்போல் பொருந்தி வருகின்றனவோ அவைகள் இணைச்சுரங்களாகும். தாரத்தினின்று ஏழாவது இடத்தில் வரும் உழையும் (நி-ம), உழையினின்று ஏழாவது இடத்தில் வரும் குரலும் (ம-ச), குரலினின்று ஏழாவது இடத்தில் வரும் இளியும் (ச-ப), இளியினின்று ஏழாவது இடத்தில் வரும் துத்தமும் (ப-ரி), துத்தத்தினின்று ஏழாவது இடத்தில் வரும் விளரியும் (ரி-த), இணைச்சுரங்களாகும்.

ஆரோசை (ஆரோகணம்) முறையில் வருவது போல அமரோசை (அவரோகணம்) முறையில் ஏழாவது இடத்தில் வரும் சுரங்களும் இணைச் சுரங்களாகும்.

2 1 2 1 2 1
ச் நி நி த த ப ம ம
1 2 3 4 5 6 7

குரலிலிருந்து (ச) அமரோசையாய் (அவரோகணம்) ஏழாவது இடமான உழையில் (ம) இணைச்சுரம் நிற்பதைக் காண்கிறோம்.

சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையில் இது இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

''இணை எனப்படுவ கீழும் மேலும்
அணையத் தோன்றும் அளவின என்ப'' (சிலப். 8:33)
(அடியார்க்கு நல்லார் உரை.)

**கிளைச்சுரம் :**

கிளை என்பது உறவு, கிளைத்தவை, சுற்றம் என்று பொருள்படும். ஆரம்ப சுரத்திலிருந்து ஐந்தாவது இடத்தில் நிற்கும் சுரம் கிளைச்சுரமாகும். குரலுக்கு (ச) உழை (ம) கிளைச்சுரமாகும்.

1 2 1 2 1
ச ரி ரி க க ம
1 2 3 4 5

இதைப்போலவே அமரோசை (அவரோகணம்) முறையிலும் ம-ச, ச-ப, ப-ரி, ரி-த போன்ற சுரங்கள் கிளைச்சுரங்களாகும்.

2 1 2 1
ச் நி நி த த ப
1 2 3 4 5

**நட்புச்சுரம் :**

தொட்ட சுரத்திற்கு (நின்ற நரம்பிற்கு) நான்காவது இடத்தில் வரும் சுரம் (நரம்பு) நட்புச்சுரமாகும்.

1 2 1 2
ச ரி ரி க க
1 2 3 4

இதேபோல் அமரோசை (அவரோகணம்) முறையிலும் வரும்.

2 1 2 1
க க ரி ரி ச
1 2 3 4

**பகைச்சுரம் :**

நின்ற நரம்பிற்கு ஆறும் மூன்றும் பகை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது குரலை (சட்ஜம்) நின்ற நரம்பு என்று வைத்துக் கொண்டால், மூன்றுவது சுரமான குறை கைக்கிளையும் (சாதாரண காந்தாரம்) ஆறாவது சுரமான நிறை உழையும் (பிரதி மத்யமம்) பகைச்சுரங்களாகும்.

> ''நின்ற நரம்பிற்கு ஆறும் மூன்றும்
> சென்று பெற நிற்பது கூடமாகும். (சிலப். 8:33)
>
> (அடியார்க்கு நல்லார் உரை)

கூடம் என்றால் பகை என்று பொருள்படும்.

1 2 1
ச ரி ரி க
1 2 3

1 2 1 2 1 2
ச ரி ரி க க ம ம
1 2 3 4 5 6

"உறவிணை நட்புக் கிளை இயல் பெய்த
முகின் முழவதிர ஏழிசை முகக்கும்
முல்லை யாழொடு சுருதி வண்டலம்பக்
களவலர் சூடிப் புறவு பாட்டெடுப்பப்
பசுந்தழை பரப்பிக் கனமயிலால"

என்னும் கல்லாடச் செய்யுள் அடிகளின் உரையிலே,

"ஏழாம் நரம்பிணை நாலு நட்பாகும்
ஐந்து கிளை, ஆறும் மூன்றும் பகையே"

என்றார் இசை மரபுடையார் எனக்காணப்படுகிறது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | |
| ச | ரி | ரி | க | க | ம | ம | ப |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | பகை | நட்பு | கிளை | பகை | இணை |

இணை, கிளை, நட்பு, பகைச் சுரங்கள்[1] இன்னின்னவை என்று தெரிந்துகொள்வது மிகவும் இன்றியமையாததாகும். இணை, கிளை, நட்புச் சுரத்தொடர்களை எழுதவும், ஓர் இராகத்திற்கு இலக்கணம் வகுக்கவும், பண் அமைப்பதற்கும், சுரங்கள் பொருந்தும் முறை மிகவும் பயன்படுகிறது.

**வாதி, சம்வாதி, அனுவாதி, விவாதி சுரங்கள்**

வடமொழியில் வாதி, சம்வாதி, அனுவாதி, விவாதி என்னும் சுரங்களின் நான்கு வகைப்பகுப்புகளைக் காண்கிறோம்.[2]

தொடங்கும் சுரம் அல்லது நரம்பிற்கு வாதி என்று பெயர்.

ச-ப முறையில் ஏழாவதாக வரும் இணைச்சுரங்களும், ச-ம முறையில் ஐந்தாவதாக வரும் கிளைச்சுரங்களும் சம்வாதி சுரங்கள் என்று அழைக்கப்

---

1. ஆதாரம்: கருணாமிர்தசாகரம்—முதல் நூல். (பக்கம் 651–657)

2. இவைகளின் விவரங்களை கருணாமிர்தசாகரம் முதலாம், இரண்டாம் நூற்களிலும், டாக்டர். எஸ். இராமநாதன் இயற்றிய "சிலப்பதிகாரத்து இசைத்தமிழ்" என்னும் நூலிலும், டாக்டர். வீ. ப. கா. சுந்தரம் எழுதிய "ஏழு இசை நரம்புகளும், முல்லைப்பண்ணும்" என்னும் கட்டுரையிலும் காணலாம்.

படுகின்றன. இதற்குக் காரணம் குரலிலிருந்து (சட்ஜம்) 7வது இடத்தில் இளி (பஞ்சமம்) வருகிறது. இடமுறையாகப் பார்த்தால் குரலிலிருந்து ஐந்தாவது இடத்தில் இளி வருகிறது. எனவே இணைச்சுரமும் கிளைச்சுரமும் சம்வாதி சுரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | |
| ச | ரி | ரி | க | க | ம | ம | ப |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2 | 1 | 2 | 1 | |
| ச் | நி | நி | த | த | ப |
| | 1 | 2 | 3 | 4 | 5 |

ச-க முறையில் நான்காவதாக வரும் நட்புச்சுரங்கள் அனுவாதி சுரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| | 1 | 2 | 1 | 2 |
| ச | ரி | ரி | க | க |
| | 1 | 2 | 3 | 4 |

ச-ரி முறையில் இரண்டலகு இடைவெளியில் வரும் சுரங்கள் விவாதி சுரங்கள் ஆகும். இவை பகைச்சுரங்கள் ஆகும். பூர்வ தமிழ் மக்களின் முறைப்படி இரண்டு அலகு இடைவெளியில் வரும் சுரங்கள் பகைச்சுரங்கள் அல்லவென்று தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் கருணாமிர்த சாகரம் நூலில் கூறியிருக்கிறார்.

**சுரங்களும், இராசிகளும் :**

பூர்வ காலத்தில் இசையில் தேர்ச்சிபெற்ற தமிழ் மக்கள் சோதிடத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தமையால், அவர்கள் இரண்டு கலைகளையும் ஒப்புநோக்கிச் சொல்லும் திறன் பெற்றிருந்தனர். வான வீதியில் கணக்கிடப்பெற்ற பன்னிரு இராசிகளையும், பன்னிரு சுரங்களையும் இணைத்துப் பார்த்து அரிய பல உண்மைகளைக் கண்டார்கள். பன்னிரு இராசிகளில் சுரங்கள் பன்னிரண்டையும் வகுத்து, அவைகளில் இணை, கிளை, பகை, நட்புப் பொருத்தம் கூறியிருக்கிறார்கள்[3].

3. ஆதாரம் : கருணாமிர்தசாகரம்—முதல் புத்தகம். (பக்கம் 701).

| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>தாரம் (நி$^{1}$)<br>பகைநரம்பு<br>(10) | மேடம்<br>தாரம் (நி$^{2}$)<br>நட்பு நரம்பு<br>(11) | இடபம்<br>குரல் (ச)<br>நின்ற நரம்பு<br>(12) | மிதுனம்<br>துத்தம் (ரி$^{1}$)<br>(1) |
| கும்பம்<br>விளரி (த$^{2}$)<br>இணை நரம்பு<br>(9) | | | கடகம்<br>துத்தம் (ரி$^{2}$)<br>(2) |
| மகரம்<br>விளரி (த$^{1}$)<br>பகை நரம்பு<br>(8) | | | சிம்மம்<br>கைக்கிளை (க$^{1}$)<br>பகை நரம்பு<br>(3) |
| தனு<br>இளி (ப)<br>இணை நரம்பு<br>(7) | விருச்சிகம்<br>உழை (ம$^{2}$)<br>பகை நரம்பு<br>(6) | துலாம்<br>உழை (ம$^{1}$)<br>கிளை நரம்பு<br>(5) | கன்னி<br>கைக்கிளை (கா$^{2}$)<br>நட்பு நரம்பு<br>(4) |

சோதிடத்தில் இன்னின்ன இடங்கள் (ஸ்தானங்கள்) நல்ல பலனைக் கொடுக்கும் என்றும், இன்னின்ன இடங்கள் நல்ல பலனைக் கொடுக்கமாட்டா என்றும் கூறப்பட்டுள்ளது. 1, 2, 4, 5, 7, 9 ஆகியவை சுபமான இடங்கள் என்றும், 3, 6, 8, 10, 12 ஆகியவை சுபமில்லாத இடங்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இசை நூலில் தொட்ட இராசியை நின்ற இராசியாக வைத்துக்கொண்டு அதற்குமேல் கணக்கிடுகிறார்கள். ஆனால் சோதிடத்தில்

தொட்ட இராசியைச் சேர்த்துக் கணக்கிடுகிறார்கள். இடபம் முதற்கொண்டு சுரங்கள் கணக்கிடப்படுகின்றன.

சோதிடத்தில் ஏழாம் வீட்டின் பலன் சொல்லப்படும்பொழுது, அதற்குக் குடும்ப இடமான எட்டாம் வீட்டின் பலனை அனுசரித்தே சொல்லப்படுகிறது. ஏழாவது இடத்திலிருந்து குடும்ப இடமாகிய இரண்டாவது இடம் எட்டாவது இடமாகும்.

ஓர் இயக்கின் (ஸ்தாயி) சுரங்கள் பன்னிரண்டாம் இடமாகிய மேருவில் லயத்தை அடைகின்றன. இப்படியே எந்த இராசியைத் தொட்டாலும் அதற்குப் பன்னிரண்டாம் இடம் மோட்ச இடமாகும்.

மோட்ச இடத்திலிருந்து ஏழாவது இடத்தில் இணைச்சுரம் நிற்கிறது. இது களத்திர இடமாகும். இந்த ஏழாவது இடத்திற்குமேல் வரும் ஏழாவது இடமும் களத்திர இடமாகும். களத்திர இடம் சுகம், இன்பம், விவாகம், அலங்காரம் முதலியவைகளைக் குறிக்கிறது.

மோட்ச இடத்திலிருந்து அதாவது குரலிலிருந்து ஆறாவது இடம் சத்துரு இடமாகும். நிறை உழை (பிரதி மத்யமம்) குரலொடு (சட்ஜம்) பொருந்தாமல் துன்பம் தருவதால், இது சத்துரு இடம் (ஸ்தானம்) என்று சொல்லப்படுகிறது. இது சத்துரு, வியாதி, சண்டை, சேதம், துன்பம் முதலியவற்றைக் குறிக்கிறது.

மேருவில் நின்ற குரலுக்கு மேல் ஐந்தாவது இராசியில் நின்ற சுரம் (உழை) புத்திர இடத்தில் நிற்கிறது. இந்த இடம் புத்திரன், பூர்வ புண்ணியம், புத்தி முதலியவற்றைக் குறிக்கிறது. இந்த இடத்தில் நிற்கும் சுரத்தைக் கிளைச்சுரம் என்று அழைக்கிறோம்.

மேருவிற்கு மேல் நான்காம் இடத்தில் நட்புச்சுரம் இருக்கிறது. நான்காம் இடம் மாதுரு, வித்தை, வாகனம், மனை, பூமி, தெய்வம் முதலியவைகளைப் பற்றிச் சொல்லுகிறது. மேருவில் தோன்றிய குரலுக்கு மாதுர் இடமாக நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்) நிற்கிறது.

மேருவிலிருந்து மூன்றாவது இடம் வீரிய இடமென்றும், சகோதர இடமென்றும் சொல்லப்படுகிறது. குரலுக்கு மூன்றாம் இடத்தில் வரும் குறை கைக்கிளை (சாதாரண காந்தாரம்) பகையாகும்.

இரண்டாம் இடம் தன குடும்ப நேத்திர இடமென்று அழைக்கப் படுகிறது. ஆரம்ப சுரமாகிய குரலுக்கு நிறை துத்தம் (சதுச்ருதி ரிஷபம்) நேத்திரம் போல் இருக்கிறது.

ஏழாமிடத்திற்கு மேலுள்ள எட்டாம் இடம் மரண இடம். அது வியாதி, துன்பம் முதலியவைகளைக் குறிக்கும் இடமாகும். குரலுக்கு எட்டாம் இடத்திலுள்ள குறை விளரி (சுத்த தைவதம்) குரலுடன் பொருந்தாது.

ஒன்பதாவது இடம் பிதுர், குரு, அருள், கல்வி, குணம், தவம், ஒழுக்கம் முதலியவற்றைக் குறிக்கின்றது. நிறை விளரி (சதுச்ருதி தைவதம்) இந்த இடத்தில் நிற்கிறது.

பத்தாம் இடம், கர்மம், பிரதாபம், ஆளுகை, வீடுகள் முதலியவற்றைச் சொல்லுகிறது. இந்த இடத்கில் குறை தாரம் (கைசிகி நிஷாதம்) இருக்கிறது. பதினோராம் இடம் லாப இடம் என்று சொல்லப்படுகிறது. இந்த இடத்தில் நிறை தாரம் (காகலி நிஷாதம்) வருகிறது.

ஒன்று, நான்கு, ஏழு முதலிய கேந்திர இடங்களும், ஒன்று, ஐந்து, ஒன்பது ஆகிய திரிகோண இடங்களும், இரண்டு, பதினொன்று ஆகிய பணபர இடங்களும் நல்ல பலனைத்தரும் இடங்கள் என்று சோதிடத்தில் சொல்லப்படுகிறது. இதுபோலவே இசையிலும், குரலுக்கு (சட்ஜம்) இரண்டாம் இடத்திலுள்ள நிறை துத்தம் (சதுச்ருதி ரிஷபம்), நான்காம் இடத்திலுள்ள நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), ஐந்தாம் இடத்திலுள்ள குறை உழை (சுத்த மத்யமம்), ஏழமிடத்திலுள்ள இணைச்சுரமாகிய இளி (பஞ்சமம்), ஒன்பதாம் இடத்தில் வரும் நிறை விளரி (சதுச்ருதி தைவதம்) பதினோராம் இடத்திலுள்ள நிறை தாரம் (காகலி நிஷாதம்) ஆகியவை, ஏழு சுரங்களின் நல்ல இடங்களாக (ஸ்தானங்கள்) விளங்குகின்றன.

மூன்றாம் இராசியாகிய சிம்மமும், ஆறாம் இராசியாகிய விருச்சிகமும், எட்டாம் இராசியாகிய மகரமும், பத்தாம் இராசியாகிய மீனமும் பகை இடங்களாகச் சொல்லப்படுகின்றன. மூன்று, ஆறு, எட்டு முற்றிலும் பகையாம். இதுபோலவே ஓர் இயக்கில் (ஸ்தாயி) மூன்று ஆறு, எட்டு இடங்களில் வரும் சுரங்கள் பகை பெற்று நிற்பதைக் காணலாம். குறை கைக்கிளை (சாதாரண காந்தாரம்), நிறை உழை (பிரதி மத்யமம்), குறை விளரி (சுத்த தைவதம்) ஆகியவை பகைச்சுரங்களாகும்.

எப்படி ஒரு மனிதன் த்ன் குடும்பத்தோடும் (2), மாதாவோடும் (4), மக்களோடும் (5), மனையாளோடும் (7), தந்தையோடும் (9), தன லாபத்தோடும் (11), தன் வீட்டோடும் (12) பொருந்தி நிற்பானோ, அப்படியே ஆரம்ப சுரமாகிய குரல், தனக்குப்பின் வரும் துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஆறு சுரங்களோடும் பொருந்தி நிற்பதைக் காண்கிறோம்.

**சுரங்களும், இலக்னாதி பாவங்களும்**

| | | | |
|---|---|---|---|
| குரல் | ச | 0 | |
| குறை துத்தம் | ரி[1] | 1 | லக்கின இடம் [ஸ்தானம்] |
| நிறை துத்தம் | ரி[2] | 2 | குடும்ப நேத்திர இடம் [சுபம்] |
| குறை கைக்கிளை | க[1] | 3 | வீரிய இடம் அல்லது சகோதர இடம் [பகை] |
| நிறை கைக்கிளை | க[2] | 4 | மாதுரு இடம் [சுபம்] |
| குறை உழை | ம[1] | 5 | புத்திர இடம் [சுபம்] |
| நிறை உழை | ம[2] | 6 | சத்துரு இடம் [பகை] |
| இளி | ப | 7 | களத்திர இடம் [சுபம்] |
| குறை விளரி | த[1] | 8 | மரண இடம் [பகை] |
| நிறை விளரி | த[2] | 9 | பிதுர் இடம் [சுபம்] |
| குறை தாரம் | நி[1] | 10 | கர்ம இடம் [பகை] |
| நிறை தாரம் | நி[2] | 11 | லாப இடம் [சுபம்] |
| குரல் | ச் | 12 | மோட்ச இடம் |

# 12

# இராக புடமுறை

ஓர் இராகத்தைப் பகுத்து, வரையறுத்து, அதில் கீதம், கீர்த்தனம் முதலியவைகளுக்கான இசையை இயற்றப்பயன்படும் முறை இராகபுடமுறை[1] என்று அழைக்கப்படுகிறது. ஓர் இராகத்தின் பொருத்தமுள்ள சுரத்தொடர் களைத் தெரிந்து, அந்த இராகத்தின் சீவசுரம், அமுதவைப்பு முதலியவைகளை வரையறுக்கவும், அந்த இராகத்தின் போக்கைப் (சஞ்சாரம்) புரிந்து கொண்டு ஆலாபனம் செய்யவும், அந்த இராகத்தில் வர்ணம், சுரஜதி, கீதம், கீர்த்தனம் முதலியவைகளை இயற்றவும் இந்த முறை மிகவும் பயன்படுகிறது.

இணை, கிளை, நட்பு, பகைச்சுரங்களைப் பற்றிய விவரங்களைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | |
| ச | ரி | ரி | க | க | ம | ம | ப |
| | | | பகைச் சுரம் | நட்புச் சுரம் | கிளைச் சுரம் | பகைச் சுரம் | இணைச் சுரம் |

சரிகமபா என்பது இணைச்சுரத்தொடர் அல்லது இணைச்சுரத்தொகுதியாகும்.

  1
சரிகமா என்பது கிளைச்சுரத்தொடராகும்.

  2
சரிகா என்பது நட்புச்சுரத்தொடராகும்.

 1                    2
சரிகா என்பதும் சரிகமா என்பதும் பகைச்சுரத்தொடர்களாகும்.

---

1. இராக புடமுறையைக் கண்டுபிடித்து இசை உலகிற்கு அளித்தவர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் ஆவார். அவர் பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து, இசைக்கு உயிர்நிலை போன்ற இந்த முறையைக் கண்டுபிடித்தார். கருணாமிர்தசாகரம் இரண்டாவது நூலில் இராகபுடமுறையைப் பற்றி அவர் விவரமாக எழுதியுள்ளார். (பக். 272-278)

**இராக புடமுறை விளக்கம்:**

ஓர் இராகத்தைப் புடமிடுவதற்கு முதலில் அது எந்த மேளகர்த்தா இராகம், அதில் வரும் சுரபேதங்கள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அது கிளை இராகமானால் எந்த மேளகர்த்தா இராகத்தில் அது பிறந்திருக்கிறது என்பதையும், அதன் ஆரோசை (ஆரோகணம்), அமரோசை (அவரோகணம்) எவை என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்வாறு தெரிந்துகொண்ட பின்பு, எடுத்துக்கொண்ட இராகத்தின் இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்களை வரிசையாக எழுதவேண்டும். மெலிவு இயக்கின் இளியிலிருந்து (மந்த்ரஸ்தாயி பஞ்சமம்) வலிவு இயக்கின் இளிவரை (உச்சஸ்தாயி பஞ்சமம்) உள்ள இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்களை எழுதவேண்டும். அந்த இராகத்தில் இளி (பா) இல்லாதிருந்தால் (வர்ஜம்) மெலிவு இயக்கின் உழையிலிருந்து (மா) வலிவு இயக்கின் உழை வரையில் உள்ள பொருத்தமான சுரத்தொடர்களை எழுதவேண்டும். உதாரணமாக நமக்கு நன்கு தெரிந்த சக்ரவாக இராகத்தின் புடமுறை கொடுக்கப்பட்டு உள்ளது. அதன் இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் ஆரோசை முறையில் இவ்வாறு வருகின்றன.

பதநிசா

தநிசரீ

தநிசரிகா

நிசரிகமா

சரிகா

அமரோசை முறையில் இணை, கிள்ள, நட்புச்சுரத்தொடர்கள் இவ்வாறு வருகின்றன.

ப்ம்க்ரிச்சா

ம்க்ரீ

ம்க்ரிச்சா

ம்க்ரிச்நீ

க்ரிச்சா

இணைச்சுரத் தொடர்கள், கிளைச்சுரத் தொடர்கள், நட்புச்சுரத் தொடர்கள் முதலியவைகளைத் தனியாகவும் எழுதவேண்டும். பகைச்சுரத் தொடர்களைத் தவிர்க்கவேண்டும். இணைச்சுரத்தொடர்கள் உத்தமப்

பொருத்தத்தொடர்கள் என்றும், கிளைச்சுரத்தொடர்கள் மத்திமப் பொருத்தத்தொடர்கள் என்றும், நட்புச்சுரத்தொடர்கள் அதமப்பொருத்தத் தொடர்கள் என்றும் கூறப்பட்டுள்ளன. இந்தத் தொடர்களின் இறுதிச்சுரம் நெடிலாகவே இருக்கும். உதாரணமாக ஆரோசையில் இணைச்சுரத்தொடர் சரிகமபா என்று வந்தால், இதே தொடர் அமரோசையில் வரும்பொழுது பமகரிசா என்று வரும். முதல் தொடரின் ஆரம்பசுரம் ச இரண்டாவது தொடரின் கடைசியில் சா என்று நெடிலாக வருகிறது. இந்தச் சுரத் தொடர்களை எழுதிக்கொண்டு வரும்பொழுது அவைகளை இணைக்கும் சுரங்களையும் கீழே குறிப்பிடப்பட்டதுபோல எழுதிவரவேண்டும்.

### ஆரோசை முறையில்

| இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் | இணைக்கும் சுரம் |
|---|---|
| பு̣த̣நிசா | நி̣தா̣ |
| த̣நி̣சரீ | சநி̣தா̣ |
| த̣நி̣சரிகா | ரிசா |

### அமரோசை முறையில்

| | |
|---|---|
| ப்ம்க்ரிச்ா | ரிக்ா |
| ம்க்ரீ | ரிக்ா |
| ம்க்ரிச்ா | ச்ரிக்ா |
| ம்க்ரிச்நீ | ச்ரீ |
| க்ரிச்ா | ச்ரீ |

**சீவசுரம் :**

இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்களின் கடைசியில் வரும் ஒவ்வொரு சுரமும் எத்தனை தடவை வருகிறதென்று எண்ணிப்பார்க்கும்பொழுது எந்தச் சுரம் அதிக தடவை வருகிறதோ அந்தச்சுரம் சீவசுரமாகும். சீவசுரத்தை எப்பொழுதும் நெடிலாகவே வழங்கவேண்டும். சீவசுரத்திற்கு இணையாகவோ கிளையாகவோ வந்து எண்ணிக்கையிலும் சீவசுரத்திற்கு அடுத்தபடியாக வரும் சுரம் அழுதவைப்பாகும். இது சீவசுரத்திற்கு அடுத்தபடியான முக்கிய சுரமாகும்.

**இராகத்தின் முழுவடிவம் :**

ஓர் இராகத்தின் சீவசுரம், அமுதவைப்பு, முதலியவை தெரிந்து, இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்களை, அவைகளை இணைக்கும் சுரங்களோடு சேர்த்துப்பாடும்பொழுது அந்த இராகத்தின் முழுவடிவம் (சாயல்) நமக்குக் கிடைக்கிறது. அந்த இராகத்தின் போக்கும் (சஞ்சாரம்) நமக்குத் தெரிவதனால், அந்த இராகத்தை வெகு எளிதில் ஆலாபனம் செய்யலாம்.

**வர்ஜ இராகங்கள் :**

ஓர் இராகத்தின் ஆரோசையிலாவது அல்லது அமரோசையிலாவது அல்லது இரண்டிலுமாவது ஒரு சுரம் அல்லது இரண்டு சுரங்கள் விலக்கப்பட்டு இருக்கும்போது அது வர்ஜ இராகமாகிறது. வர்ஜ இராகங்களுக்கும் இராக புடமுறை பொருந்தும். வர்ஜம் காரணமாக சுரங்களின் இடைவெளி மாறாது. உதாரணமாக மலகரி இராகத்தை எடுத்துக்கொள்ளுவோம். இது 15-வது மேளகர்த்தா இராகமான மாயாமாளவகௌளை இராகத்தில் பிறந்தது. இந்த இராகத்தின் ஆரோசை சரிமபதச். அமரோசை ச்தபமகரிச ஆரோசையில் சரிமா என்பது கிளைச்சுரத்தொடராகும். சரிமபா என்பது இணைச்சுரத்தொடராகும். ஆரோசையில் சரிகா என்னும் சுரத்தொடர் வராது. ஆனால் அமரோசையில் கரிசா என்னும் நட்புச்சுரத்தொடர் வருகிறது. சுரத்தொடர்களை இணைக்கும் சுரங்களிலும் மலகரி இராகத்தின் இலக்கணம் கடைப்பிடிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| உதாரணமாக | சரிமா | — | கரீ |
| | சரிமபா | — | மகா |
| | ரிமா | — | கா |

என்று சுரத்தொடர்களை இணைக்கும் சுரம் அல்லது சுரங்கள் வருகின்றன.

**வக்கிர இராகங்கள் :**

ஆரோசையிலாவது, அமரோசையிலாவது அல்லது இரண்டிலுமாவது சுரங்கள் நேராய் வராமல் திரிந்து வந்தால் அந்த இராகத்தை வக்கிர இராகம் என்று சொல்லுகிறோம். இராகபுடமுறை வக்கிர இராகங்களுக்கும் பொருந்தும். வக்கிரம் காரணமாக சுரங்களின் இடைவெளி மாறாது. உதாரணமாக ஆனந்தபைரவி இராகத்தில் ஆரோசையில் சகரிகமபா— என்னும் வழக்கு (பிரயோகம்) காரணமாக சுரங்களின் இடைவெளி மாறாது. சகரிகமபா என்பது இணைச்சுரத்தொடராகும். ரி, க, வரிசையில் மாறுதல் இருந்தாலும், சா—விற்கும் பா—விற்கும் உள்ள இடைவெளிக் கணக்கில்

மாறுதல் இல்லை. அதாவது இந்த வக்கிர சுரங்களுக்கு முன்னும் பின்னும் உள்ள சுரங்களின் உரிமை தவிர, வேறு எந்தவித உரிமையும் கிடையாது.

**கீதம், கீர்த்தனை முதலியவைகளுக்கு இசை அமைக்கும் முறை:**

கீதம், கீர்த்தனை முதலியவைகளுக்கு இசை அமைப்பதற்குத் தேவையான சில குறிப்புகளை இப்பொழுது கவனிப்போம்.

எந்த இராகத்தில் இசை அமைக்கவேண்டுமோ அந்த இராகத்தின் மேளகர்த்தா எண்ணின்படி வரும் சுரபேதங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த இராகம் கர்த்தா இராகமா அல்லது கிளை இராகமா என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். கர்த்தா இராகங்களில் சுரபேதங்கள் மட்டும் இருக்கும். கிளை இராகங்களில் வர்ஜ, வக்கிர பேதங்கள் இருக்கும். தெரிந்துகொண்ட இராகத்தின் ஆரோசை, அமரோசையையும் கவனித்துக்கொள்ளவேண்டும். இராகபுடமுறையில் குறிப்பிடப்பட்டதுபோல அந்த இராகத்தின் இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்களைக் கணித்து வரிசையாக எழுதவேண்டும். இணைச்சுரத்தொடர், கிளைச்சுரத்தொடர், நட்புச்சுரத்தொடர் இவைகளைத் தனியாகவும் எழுதவேண்டும் இந்த சுரத்தொடர்களை இணைக்கும் சுரங்களையும் எழுதவேண்டும். பகைச்சுரத் தொடர்களைத் தவிர்க்கவேண்டும். அந்த இராகத்தின் சீவசுரம், அமுதவைப்பு முதலியவைகளையும் தெரிந்துகொள்ளவேண்டும். ஓர் இராகத்தின் முற்கூறிலாவது (பூர்வாங்கம்), பிற்கூறிலாவது (உத்தராங்கம்) இருக்கும் சுரபேதம் இன்னதென்று முதலில் தெரிந்துகொள்ளுவதும் நல்லது.

**கீதம்:**

கீதங்கள் பொதுவாக இரண்டு பிரிவுகள் (கண்டிகைகள்) அல்லது மூன்று பிரிவுகள் உள்ளனவாக இருக்கும். இவைகளில் முதல் பிரிவை (கண்டிகை) இராகத்தின் சாயலைக் காண்பிக்கக்கூடிய சீவசுரம் கொண்ட சுரத்தொடரைக் கொண்டு ஆரம்பிக்கலாம். உதாரணமாக மலகரி இராகத்தில் முதல் பிரிவு (கண்டிகை) சரிமபதப என்று ஆரம்பமாகிறது. (சீவசுரம்—சா) இவ்வாறு சமன் இயக்கில் (மத்திம ஸ்தாயி) ஆரம்பித்து வலிவு இயக்குவரை (தாரஸ்தாயி) செல்லலாம். இரண்டாவது பிரிவு (கண்டிகை) பிற்கூறில் (உத்தராங்கம்) ஆரம்பமாகிறது. மபதச்தச் என்று ஆரம்பமாகிறது. இவை இராகத்தின் சாயலைக் காண்பிக்கக்கூடிய சுரத்தொடர்கள். இரண்டாவது பிரிவும் (கண்டிகை) வலிவு இயக்குவரை செல்லலாம். இராகச் சாயலைக் காண்பிக்கக்கூடிய சரிமகாரி என்னும் மற்றொரு தொடர் முதல் பிரிவின் (கண்டிகை) இரண்டாவது வரியில் வருவதைக் காணலாம்.

ஓர் இராகத்தின் போக்கை (சஞ்சாரம்) சித்திரிக்கும் சுரத்தொடர்கள் எல்லாம் கீதத்தில் வரும்படியாக இசை அமைக்கவேண்டும். தொடர்களை இணைக்கும் சுரம் அல்லது சுரங்களையும் பயன்படுத்துவது நல்லது.

சீவசுரம் நேதசுருதியாக இருந்தால் (ச்ா) அதை நெடிலாக நீட்டி முடிக்க வேண்டும். நேத சுருதி தவிர சீவசுரம் வேறு சுரமாக இருந்தால் அதைக் கமகமாகப் பாடவேண்டும்.

**கீர்த்தனை :**

கீதத்தைப் போலவே, கீர்த்தனைக்கும் நாம் இசை அமைப்பதற்கு முன்னதாக, தெரிந்து கொண்ட இராகத்தின் சுரபேதங்கள், ஆரோசை, அமரோசை முதலியவைகளைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த இராகத்தின் இணை, கிளை நட்புச்சுரத்தொடர்களைக் குறித்துக்கொள்ள வேண்டும். அந்த இராகத்தின் சீவசுரம், அமுதவைப்பு முதலியவைகளையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

கீர்த்தனைகள் பொதுவாக முதல்நிலை (பல்லவி), இடைநிலை (அனுபல்லவி), இறுதி நிலை (சரணம்) என்ற மூன்று பிரிவுகளில் (கண்டிகை) அமைந்துள்ளன. சில கீர்த்தனைகளில் முதல் நிலையும், இறுதிநிலையும் மட்டும் வரலாம்.

கீர்த்தனைகளின் முதல்நிலை (பல்லவி) சமன் இயக்கின் (மத்திய ஸ்தாயி) சஞ்சாரமாகவும், இடைநிலை (அனுபல்லவி) சமன் இயக்கில் (மத்திம ஸ்தாயி) ஆரம்பித்து வலிவு இயக்கின் (உச்ச ஸ்தாயி) சஞ்சாரமாக இருக்கும். உதாரணம்: 11 வது மேளமாகிய கோகிலப்ரியாவில் பிறந்த வசந்தமல்லி இராகத்தில் அமைக்கப்பட்டுள்ள கீர்த்தனை. இறுதிநிலையில் (சரணம்) முதல்பாகம் சமன் இயக்கில் (மத்திம ஸ்தாயி) தொடங்கி, மெலிவு இயக்கின் (மந்த்ர ஸ்தாயி) சஞ்சாரமாக இருக்கும். இறுதிநிலையின் (சரணம்) பின்பாகம் இடைநிலைபோல் (அனுபல்லவி) அமைந்திருக்கும். சக்ரவாகம் இராகத்தில் அமைக்கப்பட்ட ''கானமலராலிறைவன்'' என்ற கீர்த்தனையின் இறுதிநிலையை (சரணம்) இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

வேறு சில கீர்த்தனைகளில் முதல்நிலை (பல்லவி) வலிவு இயக்கில் ஆரம்பித்து சமன் இயக்கின் சஞ்சாரமாக இருக்கும். முதல் மேளகர்த்தா இராகமான கனகாங்கியில் பிறந்த கனகதோடியில் அமைக்கப்பட்டுள்ள கீர்த்தனையை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

பொதுவாக எல்லாக் கீர்த்தனைகளிலும் இடைநிலை (அனுபல்லவி) வலிவு இயக்கின் சஞ்சாரமாகவும், இறுதிநிலை (சரணம்) மெலிவு மற்றும் சமன் இயக்கின் சஞ்சாரமாகவும் இருக்கும். இறுதிநிலையின் பிற்பாகம் இடைநிலை போல் அமைந்திருக்கும். இன்னும் சில கீர்த்தனைகளில் முதல்நிலையும் இடைநிலையும் சேர்ந்து இறுதிநிலையாக வரலாம். சில கீர்த்தனைகளில் முதல்நிலையும் இறுதிநிலையும் மட்டும் வரலாம் என்பதற்கு உதாரணமாக 53வது மேளமாகிய கமனப்ரியாவில் பிறந்த பொன்னி இராகத்தில் அமைந்த கீர்த்தனையைக் குறிப்பிடலாம்.

கீர்த்தனைக்கு இசை அமைக்கும்போது முதன்முதலில் சீவசுரப் பொருத்தமுள்ள தொடரில் ஒன்றை முதல்நிலைக்கு (பல்லவி) ஆரம்பத் தொடராகப்பயன்படுத்தினுல் அதன் அமைப்பு சிறப்பாக இருக்கும். முதல் நிலையில் கூடியவரையில் அந்த இராகத்தின் ஆரோசை அமரோசையைச் காண்பிக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட இராகம் வர்ஜமாகவோ வக்கிர மாகவோ இருந்தால், சீவசுரத்துடன் அல்லது அமுதவைப்புடன் கூடிய வர்ஜவக்கிர சுரத்தொடரை முதல்நிலையின் ஆரம்பத்தொடராக எடுத்துக் கொள்ளலாம். உதாரணம் 14வது மேளமாகிய வகுளாபரணத்தில் பிறந்த அமுதசுரபி என்னும் இராகத்தில் அமைக்கப்பட்டுள்ள ''தமிழிசைபாடி'' என்னும் கீர்த்தனை.

இடைநிலையை (அனுபல்லவி) ஆரம்பிக்கும்போது, வலிவு இயக்கில (உச்ச ஸ்தாயி) அல்லது சமன் இயக்கில் (மத்திம ஸ்தாயி) சீவசுரப் பொருத்தம் உள்ள ஒரு சுரத்தொடரை ஆரம்பித்து, வலிவு இயக்கிலும், சமன் இயக்கிலும் சஞ்சாரம் செய்யும்படியாக அமைக்கலாம்.

இதேபோல் இறுதி நிலையின் (சரணம்) முதற்பகுதிக்கு இசை அமைக்கும்போது சமன் மற்றும் மெலிவு இயக்கின் சீவசுரத்தொடர்களைக் கொண்டு ஆரம்பிக்கவேண்டும். இறுதி நிலையின் பின்பகுதி இசையில் இடைநிலையைப்போல இருக்கும்.

ஓர் இராகத்தின் சீவசுரங்கள் கா, நீ என்று வைத்துக்கொள்ளுவோம் கீர்த்தனையின் முதல் நிலையை கா—சீவசுரம் கொண்ட சுரத்தொடரைக் கொண்டு ஆரம்பிக்கலாம் கீர்த்தனையின் இடைநிலை அல்லது இறுதிநிலையை நீ—சீவசுரம் கொண்ட சுரத்தொடரைக் கொண்டு ஆரம்பிக்கலாம். அந்த இராகத்தின் எல்லா முக்கியமான சுரத்தொடர்களும் கீர்த்தனையில் வந்தால் அத்தனை ஒரு சிறப்பான அமைப்பாகக் கொள்ளலாம்.

கீர்த்தனையின் முதல்நிலை, இடைநிலை, இறுதிநிலைகளுக்குத் தேவையான சங்கதிகளை அமைத்துக்கொள்ளலாம். அதிகமான சங்கதிகள் அமைப்பதினால் சாகித்தியத்தின் அர்த்தம் சிதைந்துவிடாதபடியும், இராகத்தின் சிறப்பு குறைந்துவிடாதபடியும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

அதிக விரிவாக இராக சஞ்சாரம் செய்யக்கூடாத சில வக்கிர, வர்ஜ இராகங்களில் இசை அமைக்கும்போது, எளிதாகப் பாடக்கூடிய விதத்தில் அந்த இசை இருக்கும்படியாகக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

ஒரு சில இராகங்களில் அமைந்த கீர்த்தனைகளுக்கு எத்துக்கடை சுரம் அல்லது சிட்டாசுரம் அமைத்தால் சிறப்பாக இருக்கும். அந்த இராகத்தின் இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்களைப் பயன்படுத்தி, தாளத்திற்குத் தகுந்தாற்போல் எத்துக்கடை சுரத்தை அமைக்கவேண்டும். உதாரணமாக அமுத காந்தாரி, நாதரஞ்சனி, பத்மகல்யாணி போன்ற புதிய இராகங்களில் அமைக்கப்பட்ட கீர்த்தனைகளில் எத்துக்கடை சுரம் சேர்க்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

சாகித்தியத்தின் அமைப்பைக் கருத்தில்கொண்டு, கீர்த்தனைக்குப் பொருத்மான தாளத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். நம் அனுபத்தில் உள்ள ஆதி தாளம், ரூபகதாளம், திரிபுடை தாளம், திஸ்ர ஏக தாளம், ஜம்பை தாளம் போன்ற தாளங்களில் இசை அமைப்பது நல்லது. கீர்த்தனைகளைச் சம எடுப்பிலும், விசம (விஷம) எடுப்பிலும் ஆரம்பிக்கலாம். விசம எடுப்பில் அரை இடம், முக்கால் இடம், ஒன்றரை இடம் முதலிய இடங்கள் உள்ளன. இவைகளில் ஏதாவது பொருத்தமான இடத்தில் கீர்த்தனையை ஆரம்பிக்கலாம்.

இராக புடமுறையை விளக்குவதற்காக நம் பழக்கத்தில் உள்ள மலகரி இராகத்தில் இயற்றப்பட்டுள்ள கீதத்தையும், சக்ரவாகம், அம்சத்தொனி ஆகிய இராகங்களில் இயற்றப்பட்டுள்ள கீர்த்தனைகளையும் பின்வரும் பக்கங்களில் காணலாம.

---

2. இராகத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் அமைப்புகள்.

இராகம்: **மலகரி** 15-வது மேளமாகிய மாயாமாளவகௌளையில் பிறந்தது.

ஆ. ச ரி2 ம2 ப த2 ச்

அ. ச் த2 ப ம2 க6 ரி2 ச

2 4 4 6 24 46 2 4 24 46 24 46 24
ப த த நிநி ச ரிரி கக மம ப தத நிநி ச் ரிரி க்க் ம்ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள்**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | தா | ப்ம்க்ரிச்சா | ரீ |
| தசா | தா | ம்க்ரீ | மா |
| தசரீ | சா | ம்க்ரிச்சா | ரிமா |
| சரிமா | கரீ | க்ரிச்சா | ச்சா |
| சரிமபா | மகா | ரிச்தா | ச்சா |
| ரிமா | கா | ச்தா | ச்சா |
| ரிமபதா | பா | ச்தபா | தா |
| மபதச்சா | தா | ச்தபமா | பா |
| பதச்சா | தா | தபமகா | ரிமபா |
| தச்சா | தா | தபமகரீ | சரிமா |
| தச்ரீ | ச்சா | பமகரிசா | ரீ |
| ச்ரீம்மா | க்ரீ | மகரீ | சரீ |
| ச்ரிம்ப்பா | ம்க்ரிச்சா | மகரிசா | ரிமா |
| | | கரிசா | ரீ |
| | | ரிசதா | சா |
| | | சதா | சா |
| | | சதபா | தசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| சரிமபா | மகா | ம்க்ரிச்ா | ச்ரீ |
| ரிமபதா | தபா | ச்தபமா | பா |
| மபதச்ா | ச்ா | தபமகரீ | ரிமா |
| ச்ரிம்ப்ா | ம்க்ரிச்ா | பமகரிசா | சா |

கிளைச்சுரத்தொடர்கள்:

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| புதசா | தா | ம்ச்ரிச்ா | ரீ |
| தசரீ | சா | ரிச்தா | ச்ா |
| சரிம | பா | ச்தபா | பா |
| பதச்ா | தா | மகரிசா | சா |
| தச்ரீ | ச்ா | ரிசதா | சா |
| ச்ரிம்ா | க்ரிச்ா | சதபா | தசா |

நட்புச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | சா | ம்க்ரீ | ம்ா |
| ரிமா | பா | க்ரிச்ா | ச்ா |
| தச்ா | ச்ா | ச்தா | பா |
| | | தபமகா | ரிமா |
| | | மகரீ | ரிமா |
| | | கரிசா | சா |
| | | சதா | சா |

| | | |
|---|---|---|
| சா | — | 11 |
| ரி | — | 5 |
| க | — | 1 |
| ம | — | 4 |
| ப | — | 4 |
| த | — | 5 |

சா — சீவசுரம்
சா — விற்கு பா இணைச்சுரம்
சா — விற்கு மா கிளைச்சுரம்
பா, மா — அமுதவைப்பு
ரி—யும், தா—வும் முக்கிய சுரங்கள்

## இராகம் : மலகரி

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் த$^{2}$ ப ம$^{2}$ க$^{6}$ ரி$^{2}$ ச

### இராக இலக்கணம் (லட்சணம்)

மலகரி இராகம் 15-வது தாய் இராகமாகிய மாயாமாளவகௌளையில் பிறந்தது. இதில் குறை துத்தம் [சுத்த ரிஷபம்], நிறை கைக்கிளை [அந்தர காந்தாரம்], குறை உழை [சுத்த மத்யமம்], இளி [பஞ்சமம்], குறை விளரி [சுத்த தைவதம்] ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் [ஆரோகணம்] கைக்கிளையும் [காந்தாரம்] தாரமும் [நிஷாதம்] வரா. [வர்ஜம்]. அமரோசையில் [அவரோகணம்] தாரம் [நிஷாதம்] வராது. இது திறம்—பண்ணியல் இராகமாகும். [ஔடவ—ஷாடவ இராகம்]

இந்த இராகத்தின் சீவசுரம் — குரல் [சா]

அமுதவைப்பு — உழை [மா], இளி [பா]

### இராகத்தின் போக்கு (சஞ்சாரம்)

சா . . ரிமா . . கரீ . . சா . . . ரிம . . . மாகரி சா . . .

ரிமா . பதா . . பா மாகரிசா . . ரிமபதா . . மபதச் . . .

தா . பா . . மபதச்ா . . தச்ா . . ரீ் . . . ச்ா . ரீ்ம்ாக்ா . ரீ் . .

ச்ாரிம்ப்ா . . ம்ாக்ரீ் . . ச்ா . . . தா . . பா . மபதாச்ா . . . .

ச்ா . தபமா . க . ரிமா . . மகரீசா . . சாரிமாகரீ .

கரீ . . சா . . தா . . சா . . ரீ சா தா . பா . . . தா சா

இராகம்: மலகரி—15வது மேளமாகிய மாயாமாளவகௌளையில் பிறந்தது.

தாளம்: ரூபகம்

கீதம்

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் த$^{2}$ ப ம$^{2}$ க$^{6}$ ரி$^{2}$ ச

கருணையமுது பொழிகுவாய் உன் கழலடி மலர் உளம் நினைகுவேன்
கவலை தீர அறிவினிலே களிபெருகிட ஞானம் வளர
உவகையோடு பணிகுவனே
பொருளொடு புகழ்மேவ நலமும் நாளும் வளர பாவமகல
மகிழ்வினோடு பணிகுவனே.

| சரிமபதப | மபத ச்ாச் | ரி்ச்தச்தப | ததபமகரி |
|---|---|---|---|
| கருணையமுது | பொழிகுவாய்உன் | கழலடிமலர் | உளநினைகுவேன் |
| சரிமகாரி | சதரிரிசா | ரிமபதச்த | பாமகரிச |
| கவலை தீர | அறிவினிலே | களிபெருகிட | ஞானம் வளர |
| சரிமகாரி | சதரிரிசா | | |
| உவகையோடு | பணிகுவனே | | |
| மபத ச்தச் | ச்ாச் தபம | பாபமகரி | சாசரிசத |
| பொருளொடுபுகழ் | மேவ நலமும் | நாளும் வளர | பாவமகல |
| சரிமகாரி | சதரிரிசா | | |
| மகிழ்வினோடு | பணிகுவனே | | |

அருஞ்சொல்:

களி — உவகை
மேவ — பொருந்த

இராகம்: **அம்சத்வனி—29வது மேளமாகிய தீர சங்கராபரணத்தில் பிறந்தது.**

ஆ. ச ரி$^{4}$ க$^{6}$ ப நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ ப க$^{6}$ ரி$^{4}$ ச

```
 *  *  *      *  *  *  *      *  *  *      *  *  *  *
 2  4  4  6   2  4  4  6  2  4   2  4  4  6   2  4  4  6  2  4
ப̣ த̣ த̣ நி̣ நி̣ ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி் ரி் க் க் ம் ம் ப்
```

**இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| ப̣நீ̣ | ப̣ா | ப்க்ரீ் | க்கா |
| ப̣நி̣சா | நீ̣ | ப்க்ரி்ச்சா | ரீ் |
| ப̣நி̣சரீ | சா | க்ரி்ச்சா | ரீ் |
| நி̣சரிகா | ரீ | க்ரி்ச்நீ | சா |
| சரிகா | ரீ | ரி்ச்நிபா | நீ |
| சரிகபா | கா | ச்நிபா | கபா |
| ரிகபா | கரீ | நிபா | கபா |
| கபநீ | பகா | நிபகா | ரிகா |
| பநீ | பா | பகரீ | கா |
| பநிச்சா | நீ | பகரிசா | ரீ |
| பநிச்ரீ் | ச்சா | கரிசா | ரீ |
| நிச்ரி்க்கா | ரீ் | கரிசநீ̣ | சா |
| ச்ரி்க்கா | ரீ் | ரிசநி̣ப̣ா | நீ̣ |
| ச்ரி்க்ப்பா | க்கா | சநி̣ப̣ா | நி̣சா |
| ரி்க்ப்பா | க்ரி்ச்சா | *நி̣ப̣ா | நி̣சா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**இணைச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பநிசரீ | கரீ | ப்க்ரிச்ா | ரிக்ா |
| சரிகபா | கரீ | ரிச்நிபா | கபா |
| கபநீ | பகா | நிபகா | ரீ |
| பநிச்ரீ | ச்நீ | பகரிச | நிசா |
| ச்ரிக்பா | க்ரிச்ா | ரிசநிபா | நிசா |

**கிளைச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பநிசா | ரிசா | ப்க்ரீ | ச்ரீ |
| நிசரிகா | ரீ | க்ரிச்நீ | பநீ |
| ரிகபா | கா | ச்நிபா | கா |
| பநிச்ா | ரிச்ா | பகரீ | சரீ |
| நிச்ரிக்ா | ரீ | கரிசநி | புநீ |
| ரிக்பா | க்ரிச்ா | சநிபா | நிசா |

**நட்புச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| புநீ | சா | க்ரிச்ா | ரிச்ா |
| சரிகா | ரிகா | நிபா | கா |
| பநீ | பநீ | கரிசா | சநீ |
| ச்ரிக்ா | ரிச்ா | நிபா | நிசா |

| | | | |
|---|---|---|---|
| சா | — | 6 | பா—சீவசுரம் |
| ரீ | — | 4 | ரீ—பா—விற்கு இணைச்சுரம்—அமுதவைப்பு |
| கா | — | 5 | சா—பாவிற்கு கிளைச்சுரம்—அமுதவைப்பு |
| பா | — | 10 | கா—வும், நீ—யும் அடுத்தப்படியான முக்கிய சுரங்கள் |
| நி | — | 5 | |

## இராகம். அம்சத்வனி

ஆ. ச ரி4 க6 ப நி6 ச்

அ. ச் நி6 ப க6 ரி4 ச

இராக இலக்கணம் : (லட்சணம்)

அம்சத்வனி இராகம் 29ஆவது தாய் இராகமான தீரசங்கராபரணத்தில் பிறந்தது. அம்சத்வனி இராகத்தில் நிறை துத்தம் (சதுச்ருதி ரிஷபம்), நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), இளி (பஞ்சமம்), நிறை தாரம் (காகலி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையிலும், அமரோசையிலும் உழை (மத்யமம்), விளரி (தைவதம்) ஆகிய சுரங்கள் வரா (வர்ஜம்). இது திறம்—திறம்இராகமாகும். (ஔடவ—ஔடவ இராகம்). இந்த இராகத்தின் சீவசுரம்—இளி (பஞ்சமம்). அமுதவைப்பு—துத்தம் (ரிஷபம்). குரல் (சட்ஜம்).

இராகத்தின் போக்கு (சஞ்சாரம்) :

சரிகா .. ரீ .. சரிகபா .. கா .. ரீ .. ரிகபா .. கபநீ ..

பநீ .. பா .. பநிச்ா .. நீ .. பநிச்ரீ .. ச்ரிக்ா .. ரீ

ச்ரிக்ப்ா .. க்ா .. ரீ .. ரிக்ப்ா .. க்ரிச்ா .. ரீ .. க்ரிச்நீ

ரீ .. ச்நிபா .. நிப .. கபநீ .. பா .. கபநிபகா .. ரீ .. கா

பகரீ .. கரி .. பகரிசா .. ரீ .. கரிசநீ .. பநீ .. சா

ரீ .. சநிபா .. நி சரிகா .. ரீ .. சநிபா .. காபாநீ .. பநீ .. சா

இராகம்: அம்சத்வனி நாளம்: ஆதி

முதல் நிலை (பல்லவி)

தமிழாலே இசைபாடுவோம்—இன்பத்
தமிழாலே இசைபாடுவோம்.

இடை நிலை (அனுபல்லவி)

அமிழ்தூறும் ஒலியாலே அகத்தூய்மை உறவாலே
அறிவோடு, உறவாகி நிறையாவும் பெறலாமே

இறுதி நிலை (சரணம்)

எமதென்ற உணர்வாலே என்புள்ளும் புகுந்தேறி
எங்கெங்கும் பாய்ந்தன்பு பொங்கிச்சுவைபீறிக்
குமிழ் செய்த செவியோடிக் குளமாகி மணம் நாறிக்
குன்றாத பேரின்பம் என்றென்றும் மிகுந்தேறும்

**இராகம்:** அம்சத்வனி — 29வது மேளமாகிய தீரசங்கராபரணத்தில் பிறந்தது.

தாளம்: ஆதி

ஆ. ச ரி$^{4}$ க$^{6}$ ப நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ ப க$^{6}$ ரி$^{4}$ ச

### முதல் நிலை (பல்லவி)

; பநீ பபாகா ; ; ; | ; கபா நீநி | ச்ா ; நீ ச்ா
. தமி ழா . லே . . . . இசை பாடு வோம் . இன்பத்

; ச்ச்ா ச்நீ பாநீர் ; | ; ச் நீ பபா | கா ; கபநிச் | நீ
. தமி ழா . லே . . . இசை பாடு வோம் . . .

### இடைநிலை (அனுபல்லவி)

; க்க்ா க்ாக் க்ாக்க க்ாக்ா | ; ரிக்ா ரீச் | ரீ ரீ ரீ ரீ
. அமிழ்து றும் ஒலியா லே . அகத்து ய்மை உறவாலே

; ரிரி ரீ ரீ க்ா ரீச்ாநீ | ; ப நீ ச் நீ | பா நீ ச்ா ச்ா | நீ
. அறிவோடு உறவாகி . நிறையாவும் பெற லாமே.

### இறுதிநிலை (சரணம்)

; பபா பபா பாபாபாபா | ; க பா நிபா | காபாகரிகா
. எமதென்ற உணர்வாலே . என்புள்ளும் புகுந்தேறி

; கபா கரீ காரீசாசா | ; சரிகா ரிக | பா ; பாபா
. எங்கெங்கும் பாய்ந்தன்பு . பொங்கிச்சு வை . பீறி

; க்க்ா க்க்ா க்ாக்ா க்ாக்ா | ; ரிக்ா ரிச்ா | ரீரீரீரீ
. குமிழ் செய்த செவியோடிக் . குளமாகி மணம்நாறிக்

; ரீ ரீ ரீ க்ா ரீச்ா நீ | ; பநீ ச் நீ | பாநீ ச்ா ச்ா | நீ
. குன்றாத பே . ரின் பம் . என் றென் றும் மிகுந் தே றும்.

## இராகம்: சக்ரவாகம்—16வது மேளகர்த்தா இராகம்.

ஆ. ச ரி$^2$ க$^6$ ம$^2$ ப த$^4$ நி$^4$ ச்

அ. ச் நி$^4$ த$^4$ ப ம$^2$ க$^6$ ரி$^2$ ச

* 2 * 4 4 6 * 2 * 4 4 6 2 4 * 2 4 * 4 6 * 2 * 4 4 6 2 4

ப த த நி நி ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

### இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள்:

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதநிசா | நிதா | ப்ம்க்ரிச்ா | ரிக்ா |
| தநிசரீ | சநிதா | ம்க்ரீ | ரிக்ா |
| தநிசரிகா | ரிசா | ம்க்ரிச்ா | ச்ரிக்ா |
| நிசரிகமா | கரீ | ம்க்ரிச்நீ | ச்ரீ |
| சரிகா | மகரீ | க்ரிச்ா | ச்ரீ |
| சரிகமா | கரீ | க்ரிச்நிதா | நிச்ா |
| சரிகமபா | மகரீ | ரிச்நிதா | தநீ |
| ரிகமா | கரீ | ச்நிதபா | பதநீ |
| கமபதா | பமா | ச்நிதபமா | பதா |
| மபதா | பமா | நிதபமா | பதா |
| மபதநீ | தபா | தபமா | கமபா |
| மபதநிச்ா | நிதபா | தபமகா | கமா |
| பதநிச்ா | ச்நிதா | பமகரிசா | சரிகா |
| தநிச்ரீ | ச்நிதா | மகரீ | சரிகா |
| தநிச்ரிக்ா | ரிச்ா | மகரிசா | ரிகா |
| நிச்ரிக்ம்ா | க்ரீ | மகரிசநீ | சரிகா |
| ச்ரிக்ா | ரிச்ா | கரிசா | சரீ |
| ச்ரிக்ம்ா | க்ரிச்ா | கரிசநிதா | நிசா |
| ச்ரிக்ம்ப்ா | ம்க்ரீ | ரிசநிதா | தநீ |
| ரிக்ம்ா | க்ரிச்ா | சநிதபா | தநிசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசரிகா | ரிசா | ப்ம்க்ரிச்ா | ரிக்ா |
| நிசரிகமா | கரீ | ம்க்ரிச்நீ | ச்ரீ |
| சரிகமபா | மகா | க்ரிச்நிதா | நிச்ா |
| மபதநிச்ா | நிதா | ச்நிதபமா | மபா |
| தநிச்ரிக்ா | ரிச்ா | பமகரிசா | ரிகா |
| நிச்ரிக்ம்ா | க்ரீ | மகரிசநீ | சரீ |
| ச்ரிக்ம்ப்ா | ம்க்ரிச்ா | கரிசநிதா | நிசா |

கிளைச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதநிசா | சா | ம்க்ரிச்ா | ரிச்ா |
| சரிகமா | கரீ | ச்நிதபா | தநீ |
| கமபதா | பமா | நிதபமா | பதா |
| மபதநீ | தபா | தபமகா | மபா |
| பதநிச்ா | நிச்ா | மகரிசா | நிசா |
| ச்ரிக்ம்ா | க்ரிச்ா | சநிதபா | தநிசா |

தட்புச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணை ரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசரீ | சா | ம்க்ரீ | ச்ரீ |
| சரிகா | கரீ | க்ரிச்ா | ரிச்ா |
| ரிகமா | கமா | ரிச்நிதா | தநீ |
| மபதா | பதா | தபமா | மபா |
| தநிச்ரீ | ச்ா | மகரீ | ரிகா |
| ச்ரிக்ா | க்ரீ | கரிசா | சரீ |
| ரீக்ம்ா | க்ரிச்ா | ரிசநிதா | நிசா |

| | | |
|---|---|---|
| சா — 9 | பா — 4 | சீவசுரங்கள்—சா, மா |
| ரீ — 4 | தா — 6 | சா—விற்கு இணைச்சுரம்—பா |
| கா — 5 | நீ — 3 | மா—விற்கு கிளைச்சுரம்—நீ |
| மா — 9 | | அமுதவைப்பு—பா, நீ |

இராகம்: **சக்ரவாகம்**

ஆ. ச ரி$^{2}$ க$^{6}$ ம$^{2}$ ப த$^{4}$ நி$^{4}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{4}$ ப ம$^{2}$ க$^{6}$ ரி$^{2}$ ச

இராக இலக்கணம் :

சக்ரவாகம் இராகம் 16-வது மேளகர்த்தா இராகமாகும். ஆரோசையிலும், அமரோசையிலும் எல்லா சுரங்களும் வரும். இந்த இராகத்தில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), இளி (பஞ்சமம்), நிறை விளரி (சதுச்ருதி தைவதம்), குறை தாரம் (கைசிகி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. இந்த இராகத்தின் சீவசுரங்கள் — குரல் (சா), உழை (மா), அமுத வைப்பு — இளி (பா), தாரம் (நீ).

இராகத்தின் போக்கு :

சரிகா .. மகரீ .. சா .. சரிக்மா .. கரீ .. சரிகமபா .. மகரீ
கமபதா .. பமா .. மபதநீ .. தபா .. மபதநிச்ா ..
தநிச்ரீ .. ச்நிதா .. தநிச்ரிக்ா .. ரிச்ா .. தநிச்ரிக்மா .. க்ரிச்ா
ச்ரிக்ம்பா .. ம்க்ரீ .. க்ரிச்ா .. க்ரிச்நிதா .. தநிச்ரீ ..
ச்நிதபமா .. மபதநீ .. தபமா .. பமகரிசா .. சரிகமா
கரி .. கரிசா .. ரிக .. மகரிசநீ .. கரிசா ..
கரிசநிதா .. நிசா .. ரிசநிதா பா .. தா .. நீ சா

இராகம் : சக்ரவாகம் தாளம் : திச்ரஜாதி ரூபகம்

முதல் நிலை

கான மலராலிறைவன் பாதமே வந்தனைசெய்

இடை நிலை

ஞானமுறு தாழிசைகள் ஏழிசை யெலாம்
வீணைவழி தாவிசுர நாதஒலி மேவிவரும்

இறுதி நிலை

வானொழுகு மாரி மலை வீழருவி நீர்
பாகு கனி தேம்மழலை போலு மினிதாய்
பாணிவழி தாளமெழ சீரொழுகவே
ஊனுருகி நாவிலெழு கீத ஒலி மேவி வரும்.

அருஞ்சொல் :

தாழிசை — மூன்றடுக்கில் வரும் பாடல்கள்
பாணி — கைத்தாளம்
ஊன் — உள்ளுடம்பு.

இராகம்: சக்ரவாகம்—16வது மேளகர்த்தா இராகம்

தாளம்: திஸ்ரஜாதி ரூபகம். (0/3)

ஆ. ச ரி$^2$ க$^6$ ம$^2$ ப த$^4$ நி$^4$ ச்

அ. ச் நி$^4$ த$^1$ ப ம$^2$ க$^6$ ரி$^2$ ச

## முதல் நிலை

| | | | |
|---|---|---|---|
| ச்ா நி த ப | மா க ரி ச | மா மபா | மா பதநி |
| காமல | ராலிறைவன் | பாதமே | வந்தனைசெய் |

## இடை நிலை

| | | | |
|---|---|---|---|
| பா தத நி | ச்ா ரிக்ம் | க்ா ரிக்ரி | ச்ா ; , |
| ஞானமுறு | தா ழிசைகள் | ஏ ழிசையெ | லாம் |
| ரீ ரிக்ரி | ச்ா நி த நி | பா த த ப | மா பதநி |
| வீணை வழி | தாவி சுர | நாத ஒலி | மேவி வரும் |

## இறுதி நிலை

| | | | |
|---|---|---|---|
| மாபதநி | தா நிதபா | மா கரிச | நீ ; , |
| வானொழுகு | மா ரிமலை | வீழருவி | நீர் . |
| பா த நி ச | ரீ மகரி | சா ரிகம | பா ; , |
| பாகுகனி | தேம்மழ லை | போலுமினி | தாய் . |
| பா ததநி | ச்ா ரிக்ம் | க்ா ரி க் ரி | ச்ா ; , |
| டாணி வழி | தாள மெழ | சீரொழுக | வே . |
| ரீ ரிக்ரி | ச்ா நி த நி | பா த த ப | மா பத நி |
| ஊனு ருகி | நாவிலெழு | கீத ஒலி | மேவி வரும். |

# 13

# புதிய இராகங்கள்

புதிய இராகங்களைக் கண்டுபிடித்து, அவைகளின் இணை, கிளை, நட்புசுரத் தொடர்களை எழுதி, சீவசுரம், இராகத்தின் போக்கு (சஞ்சாரம்) முதலியவற்றைக் குறிப்பிட்டு, இசை அமைத்து வழங்குபவர், பேராசிரியர். து. ஆ. தனபாண்டியன் அவர்கள்.

பாடல்கள் இயற்றியவர் கரந்தை தமிழ்ச்சங்கப் புலவர் கல்லூரி முன்னாள் துணை முதல்வர் பாவலரேறு பாலசுந்தரம் அவர்கள்.

## கீதம்.

மிகவும் சிறியதும், சுலபமாகப் பாடக்கூடியதுமான பாடல் கீதமாகும். இராகத்தின் இலக்கணத்தையும் போக்கையும் (சஞ்சாரம்) நன்கு விளக்கிக் காட்டும் வகையில் கீதம் அமைந்திருக்கும். சுரப்போக்கு மிக எளிதாக இருக்கும். கடினமான சங்கதிகளோ பிரயோகங்களோ இதில் வரா.

கீதம் ஒரே காலத்தில் இருக்கும். அதாவது, கீதத்தின் வேகம் ஆரம்பம் முதல் முடிவு வரையில் ஒரே அளவில் இருக்கும். கீதத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் கிடையாது. பொதுவாக கீதத்தில் வரும் ஒவ்வொரு சுரத்திற்கும் ஒரு சாகித்திய எழுத்து இருக்கும்.

கீதம் இருவகைப்படும். சாமான்ய கீதம் அல்லது சாதாரண கீதம் என்பது ஒரு வகை. இதை சஞ்சாரி கீதம் என்றும், லட்சிய கீதம் என்றும் அழைக்கிறார்கள் லட்சண கீதம் என்பது இரண்டாவது வகையாகும். சாமான்ய கீதத்தில் சாகித்தியம் முழுவதும் இறைவனைத் துதிக்கும் வகையில் அமைந்திருக்கும். ஆனால் லட்சண கீதத்தில் சாகித்தியம் முழுவதும் இறை வணக்கமாக இருக்காது. கீதம் அமைக்கப்பட்ட இராகத்தின் இலக்கணம், அந்த இராகத்தில் பிறந்த இராகங்களின் பெயர்கள் முதலியவையும் சாகித்தியத்தில் கொடுக்கப்பட்டிருக்கும்.

கி. பி. 1494 முதல் 1564 வரை உள்ள காலத்தில் வாழ்த்த புரந்தர தாசர் மலகரி இராகத்தில் பல கீதங்கள் இயற்றியிருக்கிறார். ராமாமாத்யர், பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் ஆகியோர் சாமான்ய கீதங்கள் இயற்றி உள்ளனர். கோவிந்த தீட்சதர், வேங்கடமகி ஆகியோர் லட்சண கீதங்களை இயற்றியிருக்கின்றனர்.

இராகம்: சுரமஞ்சரி — 50வது மேளமாகிய நாமநாராயணியில் பிறந்தது.

ஆ. ச க⁶ ம⁴ ப த² ச்

அ. ச் நி⁴ த² ப ம⁴ க⁶ ச்

2 4 4 6 2 4 4 6 2 4 2 4 4 6 2 4 4 6 2 4
ப த த நி நி ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள்:**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | நிதா | ப்ம்க்ச்ா | க்ா |
| தசா | நிதா | க்ச்ா | நிதச்ா |
| சகா | சா | ச்நிதா | தச்ா |
| சகமபா | மா | ச்நிதபா | தா |
| கமபதா | பா | தபமகா | மா |
| பதச்ா | நிதா | பமகசா | கா |
| தச்ா | நிதச்ா | கசா | சா |
| ச்க்ா | ச்ா | சநிதா | தசா |
| ச்ச்ம்ப்ா | ம்க்ச்ா | சநிதபா | தா |

**இணைச்சுரத்தொடர்கள்:**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| சகமபா | தா | ப்ம்க்ச்ா | நிதா |
| ச்க்ம்ப்ா | ம்க்ச்ா | பமகசா | சா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

கிளைச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதச்ா | கமா | ச்நிதபா | மகா |
| பதச்ா | ச்ா | சநிதபா | தசா |

நட்புச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | நிதசா | க்ச்ா | ச்ா |
| சகா | கா | ச்நிதா | தா |
| கமபதா | தபா | தபமகா | கா |
| தச்ா | ச்நிதா | கசா | சா |
| ச்க்ா | ச்ா | சநிதா | தசா |

ச — 8
க — 3
ம — 0
ப — 4
தா — 3
நீ — 0

ஜீவசுரம்—சா.
சா—விற்கு பா—இணைச்சுரம்—அமுத வைப்பு
தா—வும், கா—வும் முக்கிய சுரங்கள்.

## இராகம் : சுரமஞ்சரி

ஆ. ச க$^{6}$ ம$^{4}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ப ம$^{4}$ க$^{6}$ ச

இராக இலக்கணம் (லட்சணம்)

சுரமஞ்சரி இராகம் 50வது தாய் இராகமான நாமநாராயணியில் பிறந்தது. இதில் நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), நிறை உழை, (பிரதி மத்யமம்), இளி (பஞ்சமம்), குறை விளரி (சுத்த தைவதம்), குறை தாரம் (கைசிகி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் (ஆரோகணம்) துத்தம் (ரிஷபம்), தாரம் (நிஷாதம்) ஆகிய சுரங்கள் வரா. (வர்ஜம்).

அமரோசையில் (அவரோகணம்) துத்தம் (ரிஷபம்) வராது.

இது திறம்—பண்ணியல் இராகமாகும்.
(ஔடவ ஷாடவ இராகம்)

இந்த இராகத்தின் சீவசுரம் — குரல் (சா)
அமுத வைப்பு — இளி (பா)

இராகத்தின் போக்கு (சஞ்சாரம்)

த சா .. கா .. சா .. சகமபா .. மா கமகசா ..

கமபதா .. பமகசா .. கமபமகசா ..

கமபதா .. பதச்ா .. நீதாபா .. பமா .. பதச்ா ..

நீதா .. பதச்ா .. ச்க்ா .. ச்ா .. நிதச்ா .. க்ா .. ச்ா

ச்க்ம்ப்ா .. ம்ா .. க்ம்க்ச்ா .. நீ .. தா .. பா ..

பமபா .. தச்ா .. நீ .. தா .. பா .. பதச்ா ..

நீ தா பா மா கா .. கமபம கா .. சா ..

சா நீ தா .. ப த சா .. நீ தா .. பா தா சா

இராகம் : **சுரமஞ்சரி**—50வது மேளமாகிய நாமநாராயணியில் பிறந்தது.

ஆ. ச க[6] ம[4] ப த[2] ச்

அ. ச் நி[4] த[2] ப ம[4] க[6] ச

### கீதம்

இசையுலாம் எமதிறைவா ஒரேழ் ஆய சுரஞ்சேர் அமுதமயமே
நாதவெளியே கலா ரூபமதாகி உணர்வினில் தோயும் தேவா
உளமெலாம் நிறை இறைவா போற்றி.

ஒலியினுருவாய் ஞான உவரி தோயும் அழியா உவகை தருவாய்
கீத வடிவினுய் முழவு ஒலியே தாள ரூபமாய்த் திகழுவாய்
அகமெலாம் நிறை பரமே போற்றி.

அருஞ்சொல் :

உலாம் — உலவும்
ஞானஉவரி — மெய்ஞ்ஞானக்கடல்
கலாரூபம் — கலைவடிவம்
தோயும் — மூழ்கும்

**இராகம் :** சுரமஞ்சரி — 50வது மேளமாகிய நாமநாராயணியில் பிறந்தது.

**தாளம் :** திரிபுட

ஆ. ச க$^{6}$ ம ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ப ம$^{4}$ க$^{6}$ ச

### கீதம்

| சகமபாபம | கமக சாசா | பாம பதச்சா | ததச் க்க்ச்சா |
| இசையுலாம் எம | திறைவா ஓரேழ் | ஆய சுரஞ்சேர் | அமுத மயமே |

| ச்சாச்நித பா | ச்நீ தாபம | காம பமகச | பாத சாசா |
| நாத வெளியே | கலா ரூபம | தாகி உணர்வினில் | தோயும் தேவா |

| சகமபாபம | கமக சாசா |
| உளமெலாம்நிறை | இறைவா போற்றி

| பதச் தச்கா | க்ாச் க்ச்ச்ா | ச்சாச்நிதபா | மபத ச்நிதா |
| ஒலியி னுருவாய் | ஞான உவரி | தோயும் அழியா | உவகை தருவாய்

| பாம கமகச | பதச காகா | மாம பாபா | மபம காசா |
| கீத வடிவினாய் | முழவு ஒலியே | தாள ரூபமாய்த் | திகழு வாய்

| சகம பா பம | கமக சா சா |
| அகமெலாம் நிறை | பரமே போற்றி

## சுரஜதி

இசை கற்போர் கீதம் கற்றபின்பு சுரஜதியைக் கற்கின்றனர். சுரஜதியில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் உண்டு. ஒவ்வொரு சரணமும் வித்தியாசமான இசைவடிவத்துடன் (தாது) இருக்கும். ஒரு சில சுரஜதிகளில் அனுபல்லவி இருக்காது. சுரஜதி மிகவும் இனிமையும், சிறப்பான அமைப்பும் கொண்டது.

சுரஜதியின் சாகித்தியம் இறைவணக்கமாகவோ, காதலைச் சித்திரிப்பதாகவோ, வீரர்களின் செயல்களை விவரிப்பதாகவோ, பிரபுக்களின் புகழைச் சொல்லுவதாகவோ அமையும். நாட்டிய நிகழ்ச்சிகளில் சுரஜதிகள் இடம் பெறுகின்றன.

சியாமா சாஸ்திரிகள், பச்சிமரியம் ஆதியப்பையர், சுவாதித்திருநாள் மகாராஜா, சோபனுத்திரி, வாலாஜாபேட்டை கிருஷ்ணசாமி பாகவதர், மெரட்டூர் வெங்கடராம சாஸ்திரிகள், சின்னி கிருஷ்ணதாசர் ஆகியோர் சுரஜதி இயற்றியுள்ளனர்.

இராகம் : பூர்ணசாவேரி — 62வது மேளமாகிய ரிஷபப்ரியாவில் பிறந்தது.

ஆ. ச ரி$^4$ ம$^4$ ப த$^2$ ச்

அ. ச் நி$^4$ த$^2$ ப ம$^4$ க$^6$ ரி$^4$ ச

2 4 4 6 2 4 4 6 2 4 2 4 4 6 2 4 4 6 2 4
ப த த நி நி ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | நிதா | ப்ம்க்ரீ | ம்ா |
| பதசரீ | சநிதா | ப்ம்க்ரிச்ா | ரீ |
| தசா | நிதா | ம்க்ரீ | ம்ா |
| சரிமபா | மகரீ | க்ரிச்ா | ரீ |
| ரிமா | கரீ | ரிச்நீ | ச்ா |
| ரிமபா | மா | ரிச்நிதபா | தா |
| பதச்ா | நிதா | ச்நிதா | பதா |
| பதச்ரீ | ச்நீ | ச்நிதபா | பதச்ா |
| தச்ா | நிதா | நிதபமா | பா |
| ச்ரிம்ப்ா | ம்க்ா | தபமகா | ரிமா |
| ரிம்ா | க்ா | பமகரீ | ரிமா |
| ரிம்ப்ா | ம்க்ரிச்ா | பமகரிசா | ரீ |
| | | மகரீ | மா |
| | | கரிசா | சா |
| | | ரிசநீ | தசா |
| | | ரிசநிதபா | தசா |
| | | சநிதா | தசா |
| | | சநிதபா | தசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**இணைச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசரீ | சநிதா | ப்ம்க்ரிசா | ச்ா |
| சரிமபா | மா | ரிச்நிதபா | பா |
| பதச்ரீ | ச்ா | பமகரிசா | தசா |
| ச்ரிம்ப்ா | ம்க்ரிச்ா | ரிசநிதபா | தசா |

**இளைச்சுரத்தொடர்கள்:**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | ரீ | ப்ம்க்ரீ | ச்ா |
| ரிமபா | மா | ச்நிதபா | மா |
| பதச்ா | ரீ | பமகரீ | சா |
| ரிம்ப்ா | ம்க்ரிச்ா | சநிதபா | தசா |

**நட்புச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | ரீ | ம்க்ரீ | ம்ா |
| ரிமா | பா | க்ரிச்ா | ரீ |
| தச்ா | ரீ | ரிச்நீ | தச்ா |
| ரிம்ா | ப்ம்க்ரிச்ா | ச்நிதா | ச்ா |
| | | நிதபமா | பா |
| | | தபமகா | ரீ |
| | | மகரீ | ரிமா |
| | | கரிசா | சா |
| | | ரிசநீ | தசா |
| | | சநிதா | தசா |

சா — 8
ரீ — 6
கா — 1
மா — 3
பா — 8
தா — 2
நீ — 2

சா, பா—சீவசுரங்கள்
ரீ—பஞ்சமத்திற்கு இணைச்சுரமாக வருகிறது
ரீ—அமுதவைப்பு

## இராகம்: பூர்ணசாவேரி

ஆ. ச ரி$^{4}$ ம$^{4}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ப ம$^{4}$ க$^{6}$ ரி$^{4}$ ச

இராக இலக்கணம்: (லட்சணம்)

பூர்ணசாவேரி இராகம் 62-வது மேளமாகிய ரிஷபப்ரியாவில் பிறந்தது. இதில் நிறை துத்தம் (சதுச்ருதி ரிஷபம்) நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), நிறை உழை (பிரதி மத்யமம்), இளி (பஞ்சமம்), குறை விளரி (சுத்த தைவதம்) குறை தாரம் (கைசிகி நிஷாதம்) முதலிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் (ஆரோகணம்) கைக்கிளை (கா)தாரம் (நீ) ஆகிய சுரங்கள் வரா. (வர்ஜம்). அமரோசையில் (அவரோகணம்)எல்லா சுரங்களும் வருகின்றன. (சம்பூரணம்).

இது திறம் — பண் இராகமாகும்
(ஔடவ சம்பூரண இராகம்)

இந்த இராகத்தின் சீவசுரங்கள் — குரல் (சா), இளி (பா)
அமுத வைப்பு — துத்தம் (ரீ)

இராகத்தின் போக்கு (சஞ்சாரம்):

சரிமபா .. மகரீ .. ரிமா .. கரீ .. ரிமபாம .. மகரீ ..

சரிமபா தா .. ச்ா .. நீதா .. ச்ா .. நீதா .. பா .. தா ச்ா ..

ச்ரி ம்ா .. க்ா ரீ ச்ா .. ச்ரி ம்ப்ா .. ம்க்ரிச்ா

ரிம்ா க்ாரீ ச்ா .. ரிச்நீ .. தா .. பா .. தா ..

ச்ா .. நீ .. தா .. பா .. தா .. பாமாகா .. ரீ .. ரிமபதா ..

.. பாமாகா ரீ .. சா .. ரீ சா .. நீ தா .. தசா

ரீசா .. நீ தா பா .. தா .. சா.

## சுரஜதி

இராகம் : பூர்ணசாவேரி தாளம் : ஆதி

### முதல் நிலை (பல்லவி)

பாத சேவை நீ தாராயே நேசமதாகவே யான்
சார வேணுமே ஞானபோதகா நாளுமே

### இடை நிலை (அனுபல்லவி)

சீருலாவு மலரடி யழகே தேவாமுதமெனப் பருகிடவே
சாருமனமார தேனொழுகு பாதம் மேவியாவி ஓவிலாமலாரவே

### இறுதி நிலை (சரணம்)

(1)

தாமதமினியேன் சுடரொளியாலே புவி மீதருள் பாவிடும்

(2)

பாராய் எனதுளமே நீ தாராய் எனில் இனி வாழேன்
பாரிலுனது புகழ் பாடி வழிபடுதல் நாடி உருகுவேன்
பரமா உனது — பாதசேவை

(3)

பேசவரு புகழும் நீசமுறு பொருளும்நிதியொடு பதவிகளோ
பெறேனென தாசை யெலாமதுவே யுன்திருவடி மலரிணை விடாதவரமினி.

அருஞ்சொற்பொருள் :

| | | |
|---|---|---|
| சார | — | நெருங்க |
| ஆர | — | நிறைய |
| மேவி | — | பொருந்தி |
| ஓவிலாமல் | — | நீங்காமல் |
| ஆரவே | — | உண்ணவே |
| பாவிடும் | — | பரவிடும் |
| நிதி | — | செல்வம் |
| பெறேன் | — | வேண்டேன் |

## சுரஜதி

**இராகம்:** பூர்ணசாவேரி — 62வது மேளமாகிய ரிஷபப்ரியாவில் பிறந்தது.

ஆ. ச ரி4 ம4 ப த2 ச்

அ. ச் நி4 த2 ப ம4 க6 ரி4 ச

### முதல் நிலை (பல்லவி)

பா , த ச்ா ச்ா நீ தாபாமா | பா ; மா பா | தா ; பாதா |
பா . த சேவை நீ தாரா . யே . நே ச ம தாக

ச்ா ; ; ரீ ச்ா நீ தாபா | ச்ா நீ தாபா | மா சாரீமா
வே . யான் சாரவேணுமே ஞானபோத கா நாளுமே

### இடைநிலை (அனுபல்லவி)

ரீரீ க்ரிச்நிதப மபதா ; | ச்ாச்ா ச்நிதப | நிதபம பா ;
சீரு லாவுமலரடி யழகே தேவாமுதமென பருகிடவே .

சாரிமபதாத மாபதச்ரீச் | ரீரிச்ாச்நீ | நிதாத பாபம
சாருமனமார தேனொழுகுபாதம் மேவியாவிஓ விலாமலாரவே

### இறுதிநிலை (சரணம்)

(1)

ச்ா ; ரிச்நிதபா ; ச்நிதப | மா ; நீ தப | மா கரி சா ரிம |
தா . மதமனியேன் சுடரொளி யா . லேபுவி மீதருள் பாவிடும்

(2)

பாபா பதச்நிநீ ; நீ ; | தா தா பமபத | ச்ா ; ச்ா ;
பாராய் எனதுளமே நீ . தாராய் எனில்இனி வா . மேன்.

ரீச்நி ததபத ச்ா நிதபமகரி | சாரிமபதா, | ச்ரிச்ா நிதபம
பாரிலுனது புகழ் பாடி வழிபடுதல் நாடி உருகுவேன் பரமா உனது.

(3)

ச்ாச் ச்நிதபம நீநி நிதபமப | ரிமபம கரிகரி | சா ; ; ;
பேச வருபுகழும் நீசமுறுபொருளும் நிதியொடு பதவிக ளோ . .

சரீம ரிமாப மபாத பதர்ச் | ரிம்ப்ம் க்ரிக்ரி | ச்நீதபமரிம
பெறேனெனதாசை யெலாமதுவேயுன் திருவடி மலரிணை விடாதவரமினி

## ஜதி சுரம்

இசை அமைப்பில் (தாது) சுரஜதியை ஒத்திருக்கும். ஜதிசுரத்திற்கு சாகித்தியம் கிடையாது. சுரங்களைக்கொண்டே இதைப்பாடுவது வழக்கம். சுரபல்லவி என்றும் இது அழைக்கப்படுகிறது.

பிலகரி இராகத்தில் அமைக்கப்பெற்ற சா, ரிகபா தாச்நீதா .... என்று துவங்கும் ஜதிசுரம் மிகவும் பிரசித்தி பெற்றது. இது அழகாக அமைந்து உள்ளதால் சில கவிஞர்கள் இதற்கு சாகித்தியம் இயற்றியுள்ளனர். பழங்காலத்தில் இது ஜதிசுரமாகவே பாடப்பட்டது.

இராகம்: **பூர்வதன்யாசி** 26-வது மேளமாகிய சாருகேசியில் பிறந்தது.

ஆ. ச ம² க⁶ ம² ப நி⁴ ச்

அ. ச் நி⁴ த² ப ம² க⁶ ரி⁴ ச

* * * * * * * * * *
2 4 4 6 24 46 2 4 24 46 24 46 24
ப் தத நிநி ச ரிரி கக மம ப தத நிநி ச் ர்ரி க்க் ம்ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள்**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பநிசா | நிதபா | ப்ம்க்ரீ | ச்ம்க்ம்ா |
| நிசமகமா | கரீ | ப்ம்க்ரிச்ா | ச்ம்க்ம்ா |
| சமகமா | கரீ | ம்க்ரிச்ா | ச்ம்க்ம்ா |
| சமகமபா | மகா | ம்க்ரிச்நீ | ச்ம்க்ம்ா |
| மபநீ | தபா | க்ரிச்ா | ச்ம்க்ம்க்ா |
| மபநிச்ா | நிதா | ரிச்நீ | ச்ம்க்ம்க்ா |
| பநிச்ா | நீ | ரிச்நிதபா | நிச்ா |
| நிச்ம்க்ம்ா | க்ரீ | ச்நிதா | பநீ |
| ச்ம்க்ம்ா | க்ரீ | ச்நிதபா | மபநீ |
| ச்ம்க்ம்ப்ா | ம்க்ரிச்ா | ச்நிதபமா | பநிச்ா |
| | | நிதபமா | பநீ |
| | | தபமகா | மபா |
| | | பமகரீ | சமகமா |
| | | பமகரிசா | சமகமா |
| | | மகரிசா | சமகமா |
| | | மகரிசநீ | சமகமா |
| | | கரிசா | சமகமகா |
| | | ரிசநீ | சமகமகா |
| | | ரிசநிதபா | நிசா |
| | | சநிதா | பநீ |
| | | சநிதபா | நிசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| நிசமகமா | கரீ | ப்ம்க்ரிச்ா | ச்ம்க்ம்ா |
| சமகமபா | மகா | ம்க்ரிச்நி | ச்ம்க்ம்க்ா |
| மபநிச்ா | ச்ா | ரிச்நிதபா | நிச்ா |
| நிச்ம்க்மா | க்ரீ | ச்நிதபமா | பா |
| ச்ம்க்ம்ப்ா | ம்க்ரிச்ா | பமகரிசா | சமகமா |
| | | மகரிசநீ | சமகமகா |
| | | ரிசநிதபா | நிசா |

கிளைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பநிசா | சா | ப்ம்க்ரீ | ச்ம்க்ம்ா |
| சமகமா | மா | ம்க்ரிச்ா | ச்ா |
| மபநீ | தா | ச்நிதபா | நிச்ா |
| பநிச்ா | ச்ா | நிதபமா | பா |
| ச்ம்க்ம்ா | க்ரிச்ா | பமகரீ | சமகமகா |
| | | மகரிசா | சா |
| | | சநிதபா | நிசா |

நட்புச்சுரத்தொடர்கள் :

| அ. | இணைக்கும் சுரம் |
|---|---|
| க்ரிச்ா | ச்ம்க்ம்க்ா |
| ரிச்நீ | ச்ா |
| ச்நிதா | பநீ |
| தபமகா | ரீ |
| கரிசா | சா |
| ரிசநீ | தபநீ |
| சநிதா | பநிசா |

சா — 9
ரீ — 2
கா — 1
மா — 6
பா — 6
தா — 2
நீ — 5

சீவசுரம் — சா
சா-விற்கு பா — இணைச்சுரம்
சா-விற்கு மா — கிளைச்சுரம்
மா, பா — அமுதவைப்பு.

## இராகம் : பூர்வதன்யாசி

ஆ. ச ம2 க6 ம2 ப நி4 ச்

அ. ச் நி4 த2 ப ம2 க6 ரி4 ச

இராக இலக்கணம் :

பூர்வதன்யாசி இராகம் 26:வது தாய் இராகமாகிய (மேளகர்த்தா) சாருகேசியில் பிறந்தது.

இதில் நிறை துத்தம் (சதுச்சுருதி ரிஷபம்), நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), குறை உழை (சுத்த மத்தியமம்), இளி (பஞ்சமம்) குறை விளரி (சுத்த தைவதம்), குறை தாரம் (கைசிகி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் துத்தமும் (ரீ) விளரியும் (தா) வரா. ஆரோசையில் சமகம என்ற பயன்பாடு (பிரயோகம்) வருகிறது. அமரோசையில் எல்லா சுரங்களும் வருகின்றன (சம்பூரணம்).

இந்த இராகத்தின் சீவசுரம் — குரல் (சா)

அமுத வைப்பு — உழை (மா), இளி (பா)

இராகத்தின் போக்கு (சஞ்சாரம்)

சமகமபா .. மாகரி சா ..

சமகமாபா .. நீ .. தா .. பா. மபா நீ தா பா ..

பா நி ச்ா .. நிதபா ..பா .. நி ச்ா ..

ச்ம்க்ம்ாக்ா .. ரீ .. ச்ா ..

ச்ம் க்ம் ப்ா .. ம்ா க்ா ரீ ச்ா ..

ச்ாநிதபா .. பாநி .. ச்ா .. நிதா .. பமா .. பநீ

ச்ா நிதபமா .. பாநி .. ச்ாநிதபமா ..

மபநீ தபமகா .. பமகரீ .. சமகமா .. கரி .. சா ..

நிதபா .. மபநீ தபா .. மபா .. நி சா.

## ஜதிசுரம்

இராகம்: பூர்வதன்யாசி — 26வது மேளமாகிய சாருகேசியில் பிறந்தது.

தாளம்: ஆதி

ஆ. ச ம$^2$ க$^6$ ம$^2$ ப நி$^4$ ச்

அ. ச் நி$^4$ த$^2$ ப ம$^2$ க$^6$ ரி$^4$ ச

### முதல் நிலை (பல்லவி)

| ச்ா ச்ா ச்நி தப நீ , தபம கரி | சா , சமகமப | நீ , தபமபநி |

### இடை நிலை (அனுபல்லவி)

| ச்ம்க்ம் க்ரி ச்ா பநிச்நி தபமா | சாசசமகமா | பாபமபநிநீ |

### இறுதி நிலை (சரணம்)

(1)

| பநிச்நி தப மக சமகம கரிசநி | சா , மா , கா | மா , பாநிநீ |

(2)

| ச்ா ; ச்ம்க்ம் க்ா ; ம்க்ரிச் | நீ ; ச்நிதப | மா ; மபநிநி |
| ச்ா ச் நீ நி த ப தாத பாப மக | மாம காகரிச | சமகமா பபநி |

(3)

| பநி ச்நி தப மபநீ ; நீ ; | பநிதப மகரிச | நீ ; நீ ; |
| சமகமபாபா மபநிநிச்ாச்ா | நிநிச் நிநிச் பநி | ச்ம்க்ம் க்ரிச்நி |

(4)

| பநிச்நிதா ; மபதபமா ; | கமபமகா ; | கமபநி ச்ா ; |
| ச்ம்க்ம் க்ரிச்ா நிச்நிச் நிதபா | ச்ாச் நீநிதப | ச்நீதபமபநி |

## வர்ணம்

இசை கற்பவர்கள் சரளி வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள், சுரஜதிகள் முதலியவற்றைக் கற்ற பின்பு, வர்ணங்களைக் கற்கவேண்டியது இன்றியமையாததாகும். இராகங்களின் இன்சுவைப் (ரஞ்சக) பகுதிகளையும், விசேடப் போக்குகளையும் (சஞ்சாரங்கள்) அந்தந்த இராகங்களிலுள்ள வர்ணங்களில் காணலாம். வர்ணங்களைக் கற்றுக்கொள்ளுவதின் மூலம் கிருதிகளையும் கீர்த்தனைகளையும் கமகத்துடனும் அழகுடனும் பாடும் திறமை உண்டாகின்றது. வர்ணங்கள் இயற்றுவதற்கு சிறந்த இராக ஞானமும், தாள ஞானமும், தனித் திறமையும் வேண்டும்.

வர்ணத்தில் சாகித்தியம் மிக சொற்பமாகவே இருக்கும். அகாரம் அதிகமாக இருக்கும். இது வர்ணத்தின் சிறப்புத்தன்மையாகும். சாகித்தியம் பக்திமார்க்மாகவோ, சிருங்கார சம்பந்தமாகவோ, பிரபுக்களைப்பற்றியதாகவோ இருக்கும்.

**வர்ணத்தின் அங்கங்கள் :**

வர்ணத்தின் முற்பகுதியில் (பூர்வாங்கம்) பல்லவி, அனுபல்லவி, முக்தாயி சுரம் முதலியவை அங்கங்களாக வருகின்றன.

இதன் பிற்பகுதியில் (உத்தராங்கம்) சரணம், சரண சுரங்கள் முதலியவை அங்கங்களாக வருகின்றன.

**வர்ணங்களின் வகைகள் :**

வர்ணங்கள் தான வர்ணம், பத வர்ணம் என இருவகைப்படுகின்றன.

இராகத்தின் மத்திமகால போக்குடன் (சஞ்சாரம்) அமைவது தான வர்ணம். தான வர்ணங்களில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகியவற்றிற்கு மட்டும் சாகித்தியம் இருக்கும். ஆனால் பத வர்ணங்களில் எல்லா அங்கங்களுக்கும் சாகித்தியம் இருக்கும்.

**வர்ணங்களை இயற்றிய இசைப்புலவர்கள் :**

பச்சிமிரியம் ஆதியப்பய்யர், சியாமா சாஸ்திரிகள், பல்லவி கோபாலய்யர், மானம்புச்சாவடி வேங்கட சுப்பையர், வீணை குப்பையர், கொத்தவாசல் வெங்கட்ராமையர், பட்டணம் சுப்ரமணிய அய்யர் ஆகியோர் தான வர்ணங்களை இயற்றிய இசைப்புலவர்களில் முக்கியமானவர்கள் ஆவர்.

ராமசாமி தீட்சதர், தஞ்சாவூர் வடிவேல் நட்டுவனார், பல்லவி சேஷய்யர், குன்றக்குடி கிருஷ்ணய்யர், ராமசாமி சிவன் ஆகியோர் பத வர்ணங்களை இயற்றிய முக்கியமான இசை வல்லுநர்கள் ஆவர்.

**இராகம்: சுந்தரமனோகரி—23வது மேளமாகிய கௌரி மனோகரியில் பிறந்தது**

ஆ. ச ரி4 ம2 ப நி6 ச்

அ. ச் நி6 த4 ப ம2 க4 ரி4 ச

| * | * | * | * | * | * | * | * | * | * |
|---|---|---|---|---|---|---|---|---|---|

2 4 4 6 2 4 4 6 2 4 2 4 4 6 2 4 4 6 2 4

ப த த நி நி ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள்:**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பநீ | தபா | ப்ப்க்ா | ரிம்ா |
| பநிசா | நிதபா | ப்ம்க்ரீ | ச்ரிம்ா |
| பநிசரீ | சா | ப்ம்க்ரிச்ா | ச்ரீ |
| சரிமா | கரீ | ம்க்ரிச்ா | ரிம்ா |
| சரிமபா | மகரீ | க்ரிச்நீ | ச்ா |
| ரிமபா | மா | ரிச்நிதா | பநிச்ா |
| மபநிச்ா | நிதபா | ரிச்நிதபா | நிச்ா |
| பநீ | தபா | ச்நிதபா | நிச்ா |
| பநிச்ா | நிதபா | ச்நிதபமா | பநீ |
| பநிச்ரீ | ச்ா | நிதபா | நிதா |
| ச்ரிம்ா | க்ரீ | தபமா | பநீ |
| ச்ரிம்ப்ா | ம்க்ரீ | தபமகரீ | ரிமா |
| ரிம்ப்ா | ம்க்ரிச்ா | பமகா | ரிமா |
| | | பமகரீ | ரிமா |
| | | பமகரிசா | ரிமா |
| | | மகரிசா | ரிமா |
| | | கரிசநீ | சா |
| | | ரிசநிதா | பநிசா |
| | | ரிசநிதபா | பநீ |
| | | சநிதபா | நீ |
| | | நிதபா | நிசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | **இணைக்கும் சுரம்** |
|---|---|---|---|
| பநிசரீ | சா | ப்ம்க்ரிச்ா | ரீ |
| சரிமபா | மா | ரிச்நிதபா | நீ |
| மபநிச்ா | நிதபா | ச்நிதபமா | பநீ |
| பநிச்ரீ | ச்ா | தபமகரீ | மா |
| ச்ரிம்ப்ா | ம்க்ரிச்ா | பமகரிசா | சா |
| | | ரிசநிதபா | நிசா |

கிளைச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | **இணைக்கும் சுரம்** |
|---|---|---|---|
| பநிசா | சா | ப்ம்க்ரீ | ம்ா |
| சரிமா | கரீ | ம்க்ரிச்ா | ரீ |
| ரிமபா | மா | ரிச்நிதபா | பநீ |
| பநிச்ா | ச்ா | ச்நிதபமா | மா |
| ச்ரிம்ா | க்ரீ | பமகரீ | சரீ |
| ரிம்ப்ா | ம்க்ரிச்ா | மகரிசா | சா |
| | | ரிசநிதா | பநீ |
| | | சநிதபா | நிசா |

நட்புச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | **இணைக்கும் சுரம்** |
|---|---|---|---|
| ப நீ | சரிமா | ப்ம்க்ா | ரிம்ா |
| பநீ | சா | க்ரிச்நீ | ச்ா |
| | | நிதபா | பநீ |
| | | தபமா | மா |
| | | பமகா | கா |
| | | கரிசநீ | சா |
| | | நிதபா | நிசா |

சா — 7
ரீ — 5
கா — 2
மா — 4 சீவசுரம் — பா ,
பா — 10 ரீ — பா-விற்கு இணைச்சுரம்
தா — 2 சா — பா-விற்கு கிளைச்சுரம்
நீ — 4 ரீ, சா — அமுதவைப்பு.

இராகம் : சுந்தரமனோகரி

ஆ. ச ரி$^{4}$ ம$^{2}$ ப நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{4}$ ப ம$^{2}$ க$^{4}$ ரி$^{4}$ ச

## இராக இலக்கணம்

சுந்தரமனோகரி இராகம் 23வது மேளமாகிய கௌரிமனோகரியில் பிறந்தது. இதில் நிறை துத்தம் (சதுச்ருதி ரிஷபம்), குறை கைக்கிளை (சாதாரண காந்தாரம்), குறை உழை (சுத்தமத்யமம்), இளி (பஞ்சமம்), நிறைவிளரி (சதுச்ருதி தைவதம்), நிறை தாரம் (காகலி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் (ஆரோகணம்) கைக்கிளையும் (காந்தாரம்), விளரியும் (தைவதம்) வரா (வர்ஜம்). அமரோசையில் (அவரோகணம்) எல்லா சுரங்களும் வருகின்றன (சம்பூரணம்). இது ஒரு திறம்—பண் இராகமாகும் (ஔடவ—சம்பூரண இராகம்) இந்த இராகத்திற்கு சீவசுரம் இளி (பஞ்சமம்). அமுதவைப்பு—துத்தம் (ரிஷபம்), குரல் (சட்ஜம்).

## இராகத்தின் போக்கு :

சரிம .. கா .. ரீ .. சா. சரிமபா .. மகரீ .. சா ..
ரிமபா .. மா .. மபநிச்ா .. நிதபா .. பாநீச்ா ..
.. நிதபா .. பநிச்ரீ .. ச்ா .. ச்ரிம்ா .. க்ாரீ
ச்ரிம்ப்ா .. ம்க்ரீ .. ச்ா .. ரீ .. ம்ா .. க்ரீ .. ச்ா
ச்நிதபா .. நிச்ா .. நிதபா .. நி .. ச்ா
ச்நிதபமகரீ ... ரிமபா .. மா .. கா .. ரீ ..
ரிமா .. கா .. ரீ .. சா .. ரிமகரீ .. சா .. ரிசநிதபா ..
பாநீ .. சநிதபா .. ப நீ சா

இராகம் : சுந்தரமனோகரி | தாளம் : ஆதி

## வர்ணம்

### முதல் நிலை

பா ரா யோ எனையே
பதமே நினைவாய் தாராயே

### இடை நிலை

சா மி ஏகேனே தயவாய்
நீ அருளாய் இனிதே

### இறுதி நிலை

நீயே காவாய் தினமே.

இராகம் : சுந்தரமனோகரி    தாளம் : ஆதி

ஆ. ச ரி⁴ ம² ப நி⁶ ச்

அ. ச் நி⁶ த⁴ ப ம² க⁴ ரி⁴ ச

**வர்ணம்**

முதல் நிலை

**பா ;** நிச் நீதப மபமாகரி | பமா காரி சநி | ரிசா ரீமபநி
**பா .** ரா .... யோ.... எ. னை. . . யே. ....
**ச்ரிம்** க்ரிரிரிச் நிச்ரி ச்ச்நிதப | ச்ாநிதபமகரி | சா, ரீமபம
**ப.. த..** மே. நி.. னை.. வாய் தா... ரா.. யே ....

இடை நிலை

ச்ாநிதபமகரி சரீமபா நிநி | ச்ா மபாநிச்ா | ரிம்க்ரி ச்நிச்ா
**சாமி....** யே கே. னே. . த. யா. வா... ..ய்
**ரீரிம்க்ரி** ச்நிச்ா பச்நீதப | மாபமா காரி | சா ; ரிமபநி |
**நீ....** அ. ரு ளா...ய் இ.. னி. தே. ....

முக்தாயி சுரம்

**ச்ரி** நிச்பநிச் மபநிச் ரிமபநிச் | சாசரிமபநி | ச்ா மபாநிச்ரி
**ம்ா ,** க்ரிச்நிச் ரீ , ச்நிதபம | பா , மகரிசநி | சா ; ரிமபம

இறுதி நிலை

**நீ ;** ச்ா ; ரீ ச்நிதப மத | பா , மகரி சரி | நிசா ரிமபமப
**நீ .** யே . கா.... வா. ய் . தி.. ன. மே......

(1)

**பா** , மா , பாமா , கா , ரீ | பமா காரி சநி | சா , நிசரிமப |

(2)

**ச்ாநித** பமகரி பாம காரி சரி | மகாரி சநிசா | பாநிசரிம்பா |

(3)

**பாபா** மகரிச மாகரி சநிசா | பாநிசரிமகரி | நிசரிமபநிச்ரி
**ம்ா ;** க்ரிச்நிச்ா ; பா ; | ச்நீதபமகரி | சா , நிசரிமப

(4)

**ரீ ;** ரிம்க்ரி ச்நீதாப மப | ச்நிதப மகாரி | சா , ரிமபநிச்
**ரிம்ாம்** க்ரிச்ா பச்ாச்நிதபா | ரிமபநிச்ரிம்ா | க்ரிச்நிச்ா ரிச் |

இராகம்: கனகதோடி — 1வது மேளமாகிய கனகாங்கியில் பிறந்தது.

ஆ. ச ரி² க² ம² ப த² ச்

அ. ச் நி² த² ப ம² ரி² ச

2 2 4 6 2 2 4 6 2 4 2 2 4 6 2 2 4 6 2 4
ப த நி நி நி ச ரி க க க ம ம ப த நி நி நி ச் ரி க் க் க் ம் ம் ப்

இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள்:

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | நிதபா | ப்ம்ரிச்ா | ச்ரிக்ா |
| பதசரிகா | மரிசா | ம்ரீ | ச்ரிக்ா |
| தசா | ரிசநீ | ம்ரிச்ா | ரிச்ா |
| தசரீ | கமரீ | ரிச்நீ | தபதச்ா |
| சரிகமா | ரிசா | ரிசநிதா | பதச்ா |
| சரிகமபா | மரீ | ச்நிதா | பதா |
| ரிகமா | மரீ | ச்நிதபா | பதா |
| ரிகமபதா | பமரீ | ச்நிதபமா | பதச்ா |
| கமபா | பம | நிதபமா | மபா |
| மபதச்ா | நிதபா | தபமரீ | ரிகமா |
| பதச்ா | நிதபா | பமரிசா | ரிகா |
| பதச்ரிக்ா | ம்ரிச்நீ | மரீ | சரிகா |
| தச்ா | ச்நீ | மரிசா | ரிசா |
| தச்ரீ | ரிச்ா | ரிசநீ | தசரீ |
| ச்ரிக்ம்ா | ரிச்ா | ரிசநீதா | பதசா |
| ச்ரிக்ம்ப்ா | ம்ரிச்ா | சநிதா | பதா |
| ரிக்ம்ா | ம்ரிச்ா | சநிதபா | பதசா |
| க்ம்ச்ப்ா | ம்ரிச்ா | | |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசரிகா | மரிசா | ப்ம்ரி்ச்ா | ரி்ச்ா |
| சரிகமபா | பமா | ச்நிதபமா | மபதா |
| ரிகமபதா | பமா | தபமரீ | சரிகமா |
| மபதச்ா | நிதபா | பமரிசா | சா |
| பதச்ரி்க்ா | ம்ரி்ச்ா | | |
| ச்ரி்க்ம்ப்ா | ம்ரி்ச்ா | | |

கிளைச்சுரத்தொடர்கள்:

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | நிதா | ம்ரி்ச்ா | ச்ரீ |
| தசரீ | ரிசா | ரி்ச்நிதா | பதா |
| சரிகமா | ரிசரீ | ச்நிதபா | தபா |
| கமபா | மப்ா | மரிசா | சா |
| பதச்ா | நிதா | ரிசநிதா | பதசா |
| தச்ரீ | ச்ா | சநிதபா | பதசா |
| ச்ரி்க்ம்ா | ம்ரி்ச்ா | | |
| க்ம்ப்ா | ம்ரிச்ா | | |

நட்புச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | சரீ | ம்ரீ | ச்ா |
| ரிகமா | பா | ரி்ச்நீ | தபதா |
| தச்ா | ச்ா | ச்நிதா | பதச்ா |
| ரி்க்ம்ா | ம்ரி்ச்ா | நிதபமா | பமா |
| | | மரீ | ரிசா |
| | | ரிசநீ | தசா |
| | | ச்நிதா | பதசா |

சா — 9
ரீ — 5
கா — 2
மா — 6
பா — 6
தா — 5
நீ — 2

சீவசுரம் — சா.
சா — விற்கு இணைச்சுரம் பா, கிளைச்சுரம் — மா.
அமுதவைப்பு — பா, மா.

## இராகம் : **கனகதோடி**

ஆ. ச ரி$^{2}$ க$^{2}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{2}$ த$^{2}$ ப ம$^{2}$ ரி$^{2}$ சா

### இராக இலக்கணம் (லட்சணம்)

கனகதோடி இராகம் 1-வது மேளகர்த்தா இராகமான கனகாங்கியில் பிறந்தது. இதில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), நிறை துத்தம் (சுத்த காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), இளி (பஞ்சமம்), குறை விளரி (சுத்த தைவதம்), நிறை விளரி (சுத்த நிஷாதம்), ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் நிறை விளரி (சுத்த நிஷாதம்) வராது (வர்ஜம்). அமரோசையில் நிறை துத்தம் (சுத்த காந்தாரம்) வராது. இது ஒரு பண்ணியல் — பண்ணியல் இராகமாகும். அதாவது ஷாடவ — ஷாடவ இராகம்.

இந்த இராகத்தின் சீவசுரம் — குரல் (சட்ஜம்).
அமுத வைப்பு — இளி (பஞ்சமம்), உழை (மத்யமம்).

### இராகத்தின் போக்கு (சஞ்சாரம்)

சரீ .. கா .. மா .. ரிசா .. சரீ .. கா .. மா .. பா மா .. ரீ .. சா

ரீ .. கா .. மா .. பாதா .. பமரீ .. கமபா .. மபதச்ா ..

.. நீதாபா .. பதச்ா .. நீதாபா .. பதச்ரீச்ா ..

பதச்ரிக்ா .. ம்ரிச்நி .. தா .. ச்ா .. ரீ .. ச்ரீ .. க்ா .. ம்ா ..

ரிச்ா .. சரீ .. க்ா ம்ா .. ப்ா ம்ரிச்ா .. ச்ா .. நீ .. தா .. பா ..

பதா .. ச்நீதாபாமா .. பத ச்ா நீதாபமா .. பா .. தா ..

.. பாமரீ .. சரீ .. கா .. மா .. பமரிசா .. சரிகா ..

.. மரிசா .. ரிச .. ச஼நி஼தா஼ .. த஼சரீ ..

ரிசநி஼தா஼பா஼ .. ப஼தா஼ .. சநி஼தா஼ .. ப஼த஼சா

**இராகம் : கனகதோடி** தாளம் : ஆதி

முதல் நிலை (பல்லவி)

வானோர் தேவா வழிபடுவோமினி
வருவாயே பூ மேலருள் தரவே.

இடை நிலை (அனுபல்லவி)

தருவாயே நீ தகவுறு கோவே
தாயே தேவா மூவா முதலே

இறுதி நிலை (சரணம்)

மறவோமேயினி தாதாவே
மலரடியே துதி புரிவோமே வா
ஒரு பேரீசா உயர் நலமே தா
ஓவாதே நீ காவா யெமையே.

**அருஞ்சொற்பொருள் :**

பூ—பூமி, நெஞ்சத்தாமரையுமாம்
தகவு—பேரின்ப வீடு
மூவா—மூப்பில்லாத—அழியாத
தாதா—வள்ளல்
ஓவாத—நீங்காமலே
காவாய்—காத்தருள்வாய்

இராகம் : **கனகதோடி** — 1வது மேளமாகிய கனகாங்கியில் பிறந்தது.

தாளம் : ஆதி

ஆ. ச ரி² க² ம² ப த² ச்

அ. ச் நி² த² ப் ம² ரி² ச

முதல் நிலை

ச்ா ; நீ ; தா ; பா ; | மாபா தாபா | மா ; ரீ சா |
வா. னோர். தே . வா . வழி படு வோ . மி னி

சா ரீ கா ; மா ; பா ; | தா ; பாமா | பாதா ச்ா ; |
வ ரு வா . யே . பூ . மே . லருள் தர வே .

இடை நிலை

பாதா ச்ா ; ர்ீ ; ச்ா ; | ச்ா ர்ீ க்ா ம்ா | ர்ீ ; ச்ா ; |
தரு வா . யே . நீ . தக வு று கோ . வே .

ர்ீ ; ர்ீ ; ச்ா ; நீ ; | தா ; பா ; | பாதா ச்ா ;
தா . யே . தே . வா . மூ . வா . முத லே .

இறுதி நிலை

மா மா பா ; தா ; பாமா | ரீ ; ரீ ; | சா ; ; ;
ம ற வோ . மே . யினி தா . தா . வே . . .

சா ரீ காமா பா ; மாபா | தா ச்ா நீ ; | தா ; பா ;
மல ரடி யே . துதி புரி வோ . மே . வா .

பா தாச்ா ; ர்ீ ; ச்ா ; | ச்ா ர்ீ க்ா ம்ா | ர்ீ ; ச்ா ;
ஒரு பே . ரீ . சா . உயர் ந ல மே . தா .

ர்ீ ; ர்ீ ; ச்ா ; நீ ; | தா ; பா ; | பாதாச்ா ;
ஓ . வா . தே . நீ . கா . வா . யெமையே .

**இராகம் : கானமுகாரி — 2வது மேளமாகிய ரத்னாங்கியில் பிறந்தது.**

ஆ. ச ரி² ம² த² ச்

அ. ச் நி⁴ த² ம² ரி² ச

* * * * * * * * * * * * * *

2 4 4 6 2 4 4 6 2 4 2 4 4 6 2 4 4 6 2 4

ப த த நி நி ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | நீ | ப்ரீ | ச்ரீ |
| தசரீ | சா | ப்ரீச்சா | ரீ |
| சரிமா | ரீ | ப்ரிச்நீ | தச்சா |
| ரிமா | ரீ | ரிச்நிதா | ச்ரி |
| ரிமதா | மா | ச்நிதா | ச்சா |
| மதச்சா | நிதா | ச்நிதமா | தச்சா |
| தச்சா | நிதா | நிதமா | தா |
| தச்ரீ | ச்சா | தமரீ | ரீ |
| ச்ரிம்மா | ரீ | மரீ | சரீ |
| ரிம்மா | ரிச்சா | மரிசா | ரீ |
| | | மரிசநீ | தசா |
| | | ரிசநிதா | தசா |
| | | சநிதா | தசா |

**இணைச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| ரிமதா | மா | ம்ரிச்நீ | தச்சா |
| மதச்சா | ச்சா | ச்நிதமா | தா |
| | | தமரீ | மா |
| | | மரிசநீ | தசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**கிளைச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசரீ | சா | ம்ரி்சா | ரீ |
| சரிமா | தா | ரி்ச்நிதா | ச்ா |
| தச்ரீ | ச்ா | நிதமா | மா |
| ச்ரிம்ா | ரி்ச்ா | மரிசா | சா |
| | | ரி்சநித | சா |

**நட்புச்சுரத்தொடர்கள் :**

| | | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | சா | ம்ரீ | ச்ா |
| ரிமா | மா | ச்நிதா | மா |
| த்ச்ா | ச்ா | மரீ | சா |
| ரி்ம்ா | ம்ரி்ச்ா | சநிதா | சா |

சா — 5
ரீ — 5
மா — 6 மா, தா—ஜீவசுரங்கள்
தா — 5 ரீ — தா-விற்கு கிளைச்சுரம்
நீ — 2 ரீ — அழுதவைப்பு

இராகம் : கானமுகாரி

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ த$^{2}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ம$^{2}$ ரி$^{2}$ ச

இராகத்தின் இலக்கணம் :

கானமுகாரி 2-வது தாய் இராகமாகிய ரத்னங்கியில் பிறந்தது.

இதில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), குறை உழை (சுத்த மத்யமம்), குறை விளரி (சுத்த தைவதம்), குறை தாரம் (கைசிகி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன.

ஆரோசையில் கைக்கிளை (கா), இளி (பா)., தாரம் (நீ) ஆகிய சுரங்கள் வரா.

அமரோசையில் கைக்கிளை (கா) இளி (பா) ஆகிய சுரங்கள் வரா

இதைத் திறத்திறம்-திறம் இராகம் என்று சொல்லலாம் (சுராந்தர ஔடவ இராகம்).

இந்த இராகத்தின் சீவ சுரங்கள் — உழை (மா), விளரி (தா). அமுத வைப்பு—துத்தம் (ரீ).

இராகத்தின் போக்கு :

சரிமா .. ரீசா .. சரிமா .. ரிமரீமரீ .. சா ..
ரிமாதா .. மா .. ரிமரீம .. ரீ .. சா .. ரிமதா ..
மதாச்ா .. ச்நிதா .. மதா ச்ா .. ச்நிதாமா ..
மதாச்ா நீதா தச்ரீ .. ச்ரிம்ா .. ரிம்ரிம்
ரீ..சா .. ச்நிதாம்ா .. ரிமாதமா .. ரிமதச்ா .. நிதமா
ரிமரிமரீ .. சா .. ரிமதா .. மா .. ரீ .. சா ..
சநீதா .. மா .. தா .. சா .. நிதா .. மா .. தா .. சா ..

இராகம் : கானமுகாரி　　　　　　　　　　தாளம் : ஆதி

முதல் நிலை

ஒளி வளர் தே கா மாமறை நாதா
ஓதரும் போ தா உனதருள் இனி நனியே தா

இடை நிலை

உளமுரு கா தா வரமருள் தா தா
தாமத மே னோ தாளிணை இனிநனியே தா

இறுதி நிலை

மாதவ போ தா யானும் வீவதா
வானம ம ரீ சா வரும மி தா கா
அருளமுதே தா தருவது தீதா
தாமத மேனோ தாளிணை இனிநனியே தா

அருஞ்சொற்பொருள் :

| | | |
|---|---|---|
| தேகா | — | வடிவுடையனே |
| மறை | — | வேதாகமம் |
| ஓதரும் | — | சொல்லுதற்கு அறிய |
| போதா | — | ஞானவடிவானவனே |
| இனி | — | இப்பொழுதே |
| நனி | — | மிகுதியாக |
| தாதா | — | தருவாய் — வள்ளலே |
| தாள் இணை | — | அடியிரண்டையும் |
| வீவதா | — | அழிவதாகுமா |

இராகம்: கானமுகாரி — 2-வது மேளமாகிய ரத்னாங்கியில் பிறந்தது.

தாளம்: ஆதி

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ த$^{2}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ம$^{2}$ ரி$^{2}$ ச

## முதல் நிலை (பல்லவி)

; சரீ மமா தா ; தா ; | ; ததா மதா | ச்சா ; ச்சா ;
. ஒளி வளர் தே . கா . . மா . மறை நா . தா .

; ச்சா , ச்ச்சா நீதா மா ; | ; ரி மா தமா | ரிமரிமரீசா
. ஓ . தரும் போ. தா . . உன தருள் இனிநனியே தா

## இடை நிலை (அனுபல்லவி)

; தச்சா ரிச்சா ரீ ; ரீ; | ; ச்ரீ ம்ரீ | ச்சா ; ச்சா ;
. உளமுரு கா . தா. . வரமருள் தா . தா .

; ச்சா , ச்ச்சா நீ தாமா ; | ; தா, மமா | ரிமரிமரீசா
தா . மத மே. ஞே. தா. ளிணை இனி நனியே தா

## இறுதி நிலை (சரணம்)

; தா , ததா தா ; தா ; | தா ; மா; | ரீமாதா ;
. மா . தவ போ . தா . யா . னும் . வீவதா

; மமா மமா ரீ ; சா ; | ; சரீ மமா | தா ; ச்சா ;
. வான மம ரீ . சா . . வரு மமி தா . கா .

; தச்சா ரிச்சா ரீ ; ரீ ; | ; ச்ரீ ம்ரீ | ச்சா ; ச்சா ;
. அரு ளமு தே . தா . . தரு வது தீ . தா .

; ச்சா , ச்சா நீ தாமா ; | ; தா , மமா | ரிமரிமரீசா
தா . மத மே. ஞே . . தா . ளிணை இனி நனியே தா

இராகம் : நாதரஞ்சனி — 3வது மேளமாகிய கானமூர்த்தியில் பிறந்தது

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ த$^{2}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{2}$ ம$^{2}$ க$^{2}$ ரி$^{2}$ ச

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | * | * | | | | | | * | * | | * | * | | | * | * | | | | * | * | | * | * |
| | 2 | 4 | 4 | 6 | | 2 | 2 | 4 | 6 | 2 | 4 | | 2 | 4 | 4 | 6 | | 2 | 2 | 4 | 6 | 2 | 4 | |
| ப | த | த | நி | நி | ச | ரி | க | க | க | ம | ம | ப | த | த | நி | நி | ச் | ரி | க் | க் | க் | ம் | ம் | ப் |

இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் :

| | | | |
|---|---|---|---|
| தநிசா | நீ | ம்க்ரீ | ச்ரீ |
| தநிசரீ | சா | ம்க்ரிச்ா | ரீ |
| சரிமா | கரீ | ரிச்நிதா | மதா |
| ரிமா | கரீ | ச்நிதா | மதா |
| ரிமதா | மா | ச்நிதமா | ரிமா |
| மதநிச்ா | ச்நீ | தமகரீ | சரீ |
| தநிச்ா | ச்ா | மகரீ | ரீ |
| தநிச்ரீ | ச்ா | மகரிசா | ரீ |
| சரிம்ா | க்ரீ | ரிசநிதா | நீ |
| ரிம்ா | க்ரிச்ா | சநிதா | நிசா |

இணைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| ரிமதா | மா | ச்நிதமா | மா |
| மதநிச்ா | ச்ா | தமகரீ | சா |

கிளைச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசரீ | சா | ம்க்ரிச்ா | ச்ா |
| சரிமா | தா | ரிச்நிதா | மா |
| தநிச்ரீ | சா | மகரிசா | சா |
| ச்ரிம்ா | க்ரிச்ா | ரிசநிதா | சா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**நட்புச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசா | சா | ம்க்ரீ | ச்ா |
| ரிமா | தா | ச்நிதா | மா |
| தநிச்ா | ச்ா | மகரீ | சா |
| ரிம்ா | க்ரிச்ா | சநிதா | நிசா |

| | | | |
|---|---|---|---|
| சா | — | 5 | |
| ரீ | — | 5 | |
| கா | — | 0 | சீவசுரம் — சா, தா |
| மா | — | 5 | சா — விற்கு மா கிளைச்சுரம் |
| தா | — | 5 | தா — விற்கு ரீ கிளைச்சுரம் |
| நீ | — | 0 | மா, ரீ — அமுதவைப்பு |

## இராகம் : **நாதரஞ்சனி**

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ த$^{2}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{2}$ ம$^{2}$ க$^{2}$ ரி$^{2}$ ச

### இராக இலக்கணம் : (லட்சணம்)

நாதரஞ்சனி இராகம் 3-வது தாய் இராகமாகிய (மேளகர்த்தா) கானமூர்த்தியில் பிறந்தது. இந்த இராகத்தில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), நிறை துத்தம் (சுத்த காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), குறை விளரி (சுத்த தைவதம்), நிறை தாரம் (காகலி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வரும்.

இது திறம் — பண்ணியல் இராகமாகும் (ஔடவ—ஷாடவ இராகம்). இதன் ஆரோசையில் நிறை துத்தம் (சுத்த காந்தாரம்), இளி (பஞ்சமம்) ஆகிய சுரங்கள் வரா. அமரோசையில் இளி (பஞ்சமம்) வரா.

சீவசுரம் — குரல் (சா), குறை விளரி (தா)

சா—விற்கு மா கிளைச்சுரம். தா—விற்கு ரீ கிளைச்சுரம்.

மா, ரீ—அமுதவைப்பு.

### இராகத்தின் போக்கு (சஞ்சாரம்) :

சரி மகா . . ரீ . . சா . . ரிமதா . . மா . . கா . . ரீ . . சா . .
ரிமதா . . மா . . மாதா . . நீ ச்ா . . நீ . . தா . . நீ . . ச்ா . .
ச்ரி்ம்ா . . க்ா . . ரீ் . . ச்ா . . ரீ் . . ச்ா நீ . . தா . .
மா தா நீ . . ச்ா நிதமா . . ரி மா தம கா . . ரீ . . சா
சரி மகா . . ரீ . . சா நீ தா . . மா . . தா . . நீ . . சா . .

**இராகம் : நாதரஞ்சனி** தாளம் : **ரூபகம்.**

முதல் நிலை

ஆரமுதே தமிழே தேனார்மொழியே நீ வாழ்வாய்

இடை நிலை

சீராவாய் கவியுளே பொருளாவாய் தாயே
ஓதுகலையுன் உருவமே அதனாலே நீ வாழ்வாய்

இறுதி நிலை

நாதமான வடிவமாகி நானிலமேல் வளருவாய்
பராவுவோர் வாயாவாய் பாலமுதே மதிநிதியே
தாயாவாய் அறிவிலே ஒளியாவாய் சேயேன்
ஞான உணர்வு தழையவே புவிமேலே நீ வாழ்வாய்

அருஞ்சொல் :

| | | |
|---|---|---|
| ஆரமுதே | — | நிறைந்த அமிழ்தமே |
| வாயாவாய் | — | இடமாக இருப்பாய் |
| பாராவுவோர் | — | புகழ்ந்து வணங்குவோர் |
| தழைய | — | செழிக்க |
| சேயேன் | — | குழந்தையான யான் |
| | | சேய்மையிலிருப்பவனாகிய யான் |

**இராகம்: நாதரஞ்சனி — 3வது மேளமாகிய கானமூர்த்தியில் பிறந்தது.**

தாளம்: ரூபகம்

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ த$^{2}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{2}$ ம$^{2}$ க$^{2}$ ரி$^{2}$ ச

## முதல் நிலை

| சா ரிம தா | மத நீ ச்சா | ச்சா நிதமா | கா ரீ சா |
| ஆ ரமு தே | தமிழே தே | னார் மொழியே | நீ வாழ் வாய் |

## இடை நிலை

| தா நீ ச்சா | த நி ச்ரீ , | ச்ரி ம்ா க்ா | ரீ ச்சா ; |
| சீ ரா வாய் | கவியுளே | பொரு ளா வாய் | தா யே |

| ச்சா நிதமத | ச்நிதமா , | ரிம தாமா | கா ரீ சா |
| ஓ துகலையுன் | உருவமே. | அத னாலே | நீ வாழ்வாய் |

## எத்துக்கடைசுரம்

| ரிமதம தா | மதச்நிச்ா | ச்ரிம் க்ாக் | ரீரி ச்ா ச் |
| நீதமகா | ரீசா சரி | மதா , மத | நிச்ா , ச்ரி |
| ம்க்ாரீச் | ச்ா , ச்நித | நீ , நிதம | கா , ரிரிச |

## இறுதி நிலை

| தாத தாத | மதநி ச்ாநி | ச்ாநிதமா | ச்நிதமா ,
நாத மான | வடிவ மாகி | நானிலமேல் | வளரு வாய்

| ரிமா தமா | காரீ சா | சா ரிம தா | மத ச்நிதா
பரா வுவோர் | வா யாவாய் | பா லமு தே | மதிநிதியே

| தா நீ ச்சா | த நி ச் ரீ , | ச் ரி ம்ா க்ா | ரீ ச்ா ; |
தா யா வாய் | அ றிவிலே | ஒளியாவாய் | சேயேன்

| ச்ா நித மத | ச்நிதமா , | ரிமதாமா | காரீ சா |
ஞான உணர்வு | தழையவே | புவிமேலே | நீ வாழ்வாய்

இராகம்: நவரசமாலா — 7வது மேளமாகிய சேனாவதியில் பிறந்தது

ஆ. ச ரி² க⁴ ம² ப த² ச்

அ. ச் நி² த² ப ம² ரி² ச

2 2 4 6 2 4 4 6 2 4 2 2 4 6 2 4 4 6 2 4

ப த நி நி நி ச ரி ரி க க ம ம ப த நி நி நி ச் ரி் ரி் க் க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள்:**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | நீ | ப்ரி்ச்ா | ச்ரி்க்ா |
| தசா | நீ | ம்ரீ் | ச்ரி்க்ா |
| தசரீ | சநீ | ம்ரி்ச்ா | ச்ரி்க்ா |
| தசரிகா | மரீ | ரி்ச்நீ | தபதச்ா |
| சரிகமா | மரீ | ரி்ச்நிதா | பதச்ா |
| சரிகமபா | மரீ | ச்நிதா | பதச்ா |
| ரிகமா | மரீ | ச்நிதபா | பதச்ா |
| ரிகமபதா | பமரீ | ச்நிதபமா | பதச்ா |
| கமபா | மரீ | நிதபமா | பா |
| கமபதா | பமரீ | தபமரீ | ரிகமா |
| மபதச்ா | நிதா | பமரிசா | சரிகா |
| பதச்ா | நிதா | மரீ | சரிகா |
| தச்ா | நிதா | மரிசா | சரீ |
| தச்ரீ் | ச்நிதா | ரிசநீ | சா |
| தச்ரி்க்ா | ரி்க்ரீ் | ரிசநிதா | பதசா |
| ச்ரி்க்ம்ா | ம்ரி்ச்ா | சநிதா | பதசா |
| ச்ரி்க்ம்ப்ா | ம்ரி்ச்ா | சநிதபா | பதச்ா |
| ரி்க்ம்ா | ம்ரி்ச்ா | | |

இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசரிகா | ரிசா | ப்ம்ரிச்ா | ச்ா |
| சரிகமபா | மரிசா | ச்நிதபமா | பா |
| ரிகமபதா | பா | தபமரீ | சரிகமா |
| மபதச்ா | ச்நிதா | பமரிசா | சா |
| தச்ரிக்ா | ப்ரிச்ா | | |
| ச்ரிக்ம்ப்ா | ம்ரிச்ா | | |

கிளைச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| புதசா | சநிதா | ப்ரிச்ா | ச்ா |
| தசரீ | சநிதா | ரிச்நிதா | பதச்ா |
| சரிகமா | மரீ | ச்நிதபா | பா |
| கமபதா | பமா | மரிசா | சா |
| பதச்ா | ச்நி | ரிசநிதா | புதசா |
| தச்ரீ | ச்ா | சநிதபா | புதசா |
| ச்ரிக்ம்ா | ம்ரிச்ா | | |

நட்புச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | சா | ம்ரீ | ச்ா |
| ரிகமா | மரீ | ரீச்நீ | தச்ா |
| கமபா | பா | ச்நிதா | பதச்ா |
| தச்ா | ச்ா | நிதபம | பா |
| ரிக்ம்ா | ம்ரிச்ா | மரீ | சா |
| | | ரிசநீ | தசா |
| | | சநிதா | புதசா |

சா — 9
ரீ — 5
கா — 2
மா — 6
பா — 5 சீவசுரம் — சா
தா — 6 சா-விற்கு கிளைச்சுரம் — மா
நீ — 2 அமுதவைப்பு — மா.

இராகம் : நவரசமாலா

ஆ. ச ரி$^{2}$ க$^{4}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{2}$ த$^{2}$ ப ம$^{2}$ ரி$^{2}$ ச

இராக இலக்கணம் :

நவரசமாலா இராகம் 7வது மேளமாகிய சேனுவதியில் பிறந்தது. இதில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), குறை கைக்கிளை (சாதாரண காந்தாரம்) குறை உழை (சுத்தமத்யமம்), இளி (பஞ்சமம்), குறைவிளரி (சுத்த தைவதம்) நிறைவிளரி (சுத்த் நிஷாதம்) முதலிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் நிறைவிளரி (சுத்த நிஷாதம்) வராது. அமரோசையில் குறை கைக்கிளை (சாதாரண காந்தாரம்) வாரது. இது பண்ணியல்—பண்ணியல் இராகமாகும் (ஷாடவ—ஷாடவ இராகம்) இதன் சீவசுரம்—குரல் (சா); அமுதவைப்பு—உழை (மா)

இராகத்தின் போக்கு (சஞ்சாரம்)

தசரிகா — ரீ சா .. சரிகமா .. மா ரீ .. சா
ச .. ரீ .. கா — மா .. பா. .. மா .. ரீ சரி .. கமபதா ..
பம ரீ .. கமபதா .. பத ச்ா .. நீ .. தா .. பா
.. பதச்ா .. ச்நிதா .. தச்ரீ .. ச்ரீக்ா .. ரீ க்ா ரீ ச்ா
ச்ரீக்ம்ா .. ம்ா .. ரீ .. ச்ா .. ச்ரீக்ம்ப்ா .. மாரீச்ா
ச்ாநீதாபா பதச்ா நி தா பா
த பா மாரீ .. ரிகமபதா .. பமரீ .. கரிகா
மா .. ரீசா .. சாநி தா பா .. பத் சா.

இராகம் : நவரசமாலா தாளம் : ஆதி

### முதல் நிலை (பல்லவி)

தாரகமே நீ தானே தேவ நாதா
தரை மீதே வாராய் எனைக் காவாய்

### இடை நிலை (அனுபல்லவி)

ஆரமுதே நீயாவாய் வானோர்
ஆதார மாவாய் பாரோர் தாதாவுமானாய்

### இறுதி நிலை (சரணம்)

பேரான பேறே ஞானாகரா
புவிமீதிலே தீமை போகவே வாராய்
பேரருளே கோவே தாதாவே
பேணவே வாராய் நேசமே ஈசா

**அருஞ்சொல் :**

| | | |
|---|---|---|
| தாரகம் | — | மூலப்பொருள் |
| பேறு | — | செல்வம் |
| ஞானாகரா | — | ஞானக்கடலே |
| கோவே | — | தலைவனே |
| தாதாவே | — | வள்ளலே |
| பேணவே | — | காக்கவே |
| நேசமே | — | பக்தியே |

**இராகம் :** நவரசமாலா — 7வது மேளமாகிய சேனாவதியில் பிறந்தது.

தாளம் : ஆதி

ஆ. ச ரி² க⁴ ம² ப த² ச்

அ. ச் நி² த² ப ம² ரி² ச

## முதல் நிலை (பல்லவி)

; தச்ா ரிச்ா நீதாபா ; | ; பா ; மா | ரீ ரீ சா ;
. தார கமே நீதானே . , தே . வ நா . தா .

; சரீ கமா பாமாபா ; | ; பமா பதா | ச்ா ; ; ;
. தரை மீதே வா . ராய் . எனைக் கா . வாய் . . .

## இடைநிலை (அனுபல்லவி)

; தச்ா ரிச்ா ச்ாரீக்ாம்ா | ; ரீ, ரீ, | ச்ா ; ; ;
. ஆர முதே நீ . யாவாய் . வா ஞே. ர் . . .

; ச்ா , நீ , தா ; பா ; | ; பா , பா , | மா பாதாச்ா | ச்ா
. ஆ . தார மா . வாய் . பா . ரோர் தாதாவுமா ஞய்

## இறுதிநிலை (சரணம்)

; மா , மமா மா ; மா ; | ; மபாதபா | மாரீரீசா
. பே . ரான பே . றே . . ஞானு கரா . .

; சரீ காம பா, ம தாபா | ; பதா ச்ச்ா | நீ தாபா ;
. புவி மீதி லே . தீமை . போகவே . வாராய் .

; தச்ா ரிச்ா ச்ாரீக்ாம்ா | ; ரீ, ரீ, | ச்ா ; ; ;
. பேர ருளே கோ . வே . . . தா . தா . வே . . .

; ச்ா , நிநீ தா ; பா ; | ; பா , பா , | மாபாதாச்ா | ச்ா
. பேணவடே வா . ராய் . தா . ராய் நேசமே ஈ சா

இராகம்: வசந்ததோடி 9-வது மேளமாகிய தேனுகாவில் பிறந்தது.

ஆ. ச ரி$^{2}$ க$^{4}$ ம$^{2}$ த$^{2}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{2}$ ம$^{2}$ ரி$^{2}$ ச

* * * * * * * * * * * *
2 4 4 6 24 46 2 4 24 46 24 46 24
ப த த நி நி ச ரிரி கக மம ப தத நிநி ச் ரிரி க்க் ம்ம் ப்

## இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள்

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசா | நிதா | ம்ரீ | ச்ரிக்ா |
| தநிசரீ | சநிதா | ம்ரிச்ா | ச்ா |
| தநிசரிகா | மரிசநீ | ரிச்நிதா | தநீ |
| நிசரிகா | மரீ | ச்நிதா | தநீ |
| சரிகமா | ரிசா | ச்நிதமா | மா |
| ரிகமா | ரீ | தமரீ | கமா |
| ரிகமதா | மரீ | மரீ | கமா |
| கமதா | மா | மரிசா | சா |
| மதநிச்ா | நீ | ரிசநிதா | நிசா |
| தநிச்ா | நீ | சநிதா | நிசா |
| தநிச்ரீ | ச்நீ | | |
| தநிச்ரிக்ா | ரிச்ா | | |
| நிச்ரிக்ா | ம்ரிச்ா | | |
| ச்ரிக்ம்ா | ரிச்ா | | |
| ரிக்ம்ா | ரிச்ா | | |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசரிகா | மரிசா | ச்நிதமா | தா |
| ரிகமதா | தா | தமரீ | சா |
| மதநிச்சா | நீ | | |
| தநிச்ரிக்கா | ரிச்சா | | |

இளைச்சுரத்தொடர்கள்:

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசரீ | சா | ம்ரிச்சா | ரீ |
| சரிகமா | மரீ | ரிச்நிதா | மா |
| கமதா | மா | மரிசா | ரீ |
| தநிச்ரீ | ச்சா | ரிசநிதா | நிசா |
| ச்ரிக்ம்மா | ரிச்சா. | | |

நட்புச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசா | நீ | ம்ரீ | ச்சா |
| நிசரிகா | மரீ | ச்நிதா | மா |
| ரிகமா | தா | மரீ | சா |
| தநிச்சா | நீ | சநிதா | நிசா |
| நிசரிக்கா | ரீ | | |
| ரிக்ம்மா | ரிச்சா | | |

| | | | |
|---|---|---|---|
| சா | — | 5 | |
| ரீ | — | 5 | |
| கா | — | 4 | தா — சீவசுரம் |
| மா | — | 5 | ரீ — தா-விற்கு கிளைச்சுரம் |
| தா | — | 6 | கா — தா-விற்கு இணைச்சுரம் |
| நீ | — | 0 | ரீ-யும், கா-வும் அமுதவைப்பாகும் |

இராகம் : வசந்ததோடி

ஆ. ச ரி$^{2}$ க$^{4}$ ம$^{2}$ த$^{2}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{2}$ ம$^{2}$ ரி$^{2}$ ச

**இராக இலக்கணம் :**

வசந்ததோடி இராகம் 9வது தாய் இராகமான தேனுகாவில் பிறந்தது. இதில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), குறை கைக்கிளை (சாதாரண காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), குறை விளரி (சுத்த தைவதம்), நிறை தாரம் (காகலி நிஷாதம்) முதலிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் இளி (பஞ்சமம்) வராது (வர்ஜம்). அமரோசையில் இளியும் (பஞ்சமம்), கைக்கிளையும் (காந்தாரம்) வரா.

இது பண்ணியல் — திறம் இராகமாகும். (ஷாடவ — ஔடவ இராகம்)

இந்த இராகத்தின் சீவசுரம் — விளரி (தா)

அமுதவைப்பு — துத்தமும் (ரீ), கைக்கிளையும் (கா)

**இராகத்தின் போக்கு (சஞ்சாரம்) :**

சரிகமா .. ரீசா .. ரிகமா .. ரீசா .. ரிகமதா .. மரீசா
ரிகமதா .. மா .. கமதா .. மாதா .. நீ .. ச்ா .. நீ தாநீ ச்ா .. நீ
தநிச்ரீ .. ச்ா நீ .. த நிச்ரி க்ா .. ரீச்ா .. ச்ரிக்மா .. ரீச்ா
ரிக்ம்ா .. ரீ .. ச்ா .. ரிச் நிதா .. நீ .. ச்நிதா .. மதநீ
ச்நிதமா .. த .. மா .. ரீ .. கா .. மா .. ரீ .. சா
சரிகா .. மா .. ரீசா .. ரிசநிதா .. நி சா ..
சா நி தா மா தா நீ சா

இராகம்: வசந்ததோடி தாளம்: ஆதி

### முதல் நிலை

தலைவா என் தேவா தனயேனைக் காக்க
தரைமீதிலே வரவேணுமே

### இடை நிலை

தயவாகவே உனைக் காணவே
தணல் மீது சேர் புழுவாயினனே

### இறுதி நிலை

சகமாகியே உறவாயினாய்
தாரகமாக உனை நாடினேன்
சுகமேவவே துயர் தீரவே
அருள் மாரியாய் வருவாய் பரனே

அருஞ்சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| தனயேன் | — | மகனாகிய யான் |
| தணல் | — | நெருப்பு |
| சகம் | — | உலகம் (உயிர் யாவையும் குறித்து நின்றது) |
| சுகம் | — | மாசில்லாத இன்பம் |
| அருள்மாரி | — | அருள் மழை |

**இராகம் : வசந்ததோடி** — 9வது மேளமாகிய தேனுகாவில் பிறந்தது.

ஆ. ச ரி$^{2}$ க$^{4}$ ம$^{2}$ த$^{2}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{2}$ ம$^{2}$ ரி$^{2}$ ச

## முதல் நிலை (பல்லவி)

; ; ; தா நீ ச்சா ; நீ | தா ; மா கா | மா தா ; மா
. . . தலைவா . என் தே . வா த ன யே . னைக்

ரீ ; சா சாரீகா ; மா | தா ; ; கா | மா தா ; நீ | ச்சா ; ;
காக்க தரைமீ . தி லே . . வ ர வே . ணு மே . .

## இடைநிலை (அனுபல்லவி)

; ; ; தாநீச்சா ; நீ | ச்சா ; ; ச்சா | ச்சா ரீ ; ரீ
. . . தயவா . க வே . . உ னைக் கா . ண

ச்சா ; ; தாநீச்சா ; நீ | ச்சா ; ; ச்சா | ரீ க்கா ; ம்மா
வே . . தயவா . க வே . . உ னைக் கா . ண

ரீ ; ச்சா ச்சா ச்சா நீ ; தா | மா ; ; கர | மாதா ; மா | தாநீ ;
வே . . தணல் மீ து சேர் . . புழு வர் . யி னனே .

## இறுதிநிலை (சரணம்)

; ; ; காமா தா ; மா | தா ; ; நீ | நீ ச்சா ; நீ
. . . ச க மா . கி யே . . உ ற வா . யி

தா ; ; ச்சா ; நீதாமா | ரீ ; சா சா | ரீ கா ; மா
னாய் . தா . ரகமா க . . உ னை நா . டி

தா ; ; தாநீச்சா ; நீ | ச்சா ; ; ச்சா | ச்சாரீ ; ரீ
னே . ன் சுகமே . வ வே . . து யர் தீ . ர

ச்சா ; ; தா நீ ச்சா ; நீ | ச்சா ; ; ச்சா | ரீக்கா ; ம்மா
வே . . சு க மே . வ வே . . து யர் தீ . ர

ரீ ; ச்சா ச்சா ச்சா நீ ; தா | மா ; ; கா | மாதா ; மா | தா நீ ;
வே . . அருள் மா . ரி யாய் . . வ ருவாய் . ப ர னே.

இராகம் : ஞானசிந்தாமணி — 11வது தாய் இராகமாகிய கோகிலப்ரியாவில் பிறந்தது.

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ த$^{4}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{4}$ ப ம$^{2}$ ரி$^{2}$ ச

*  *  *  *  *  *  *  *  *  *  *  *

2 4 4 6  2 4 4 6 2 4  2 4 4 6  2 4 4 6 2 4

ப த த நி நி ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசரீ | மரீ | ப்ம்ரிச்சா | ரீ |
| சரிமா | ரீ | ம்ரீ | ச்ரீ |
| ரிமா | ரீ | ம்ரிச்சா | ச்சா |
| மதா | பமரீ | ரிச்நிதா | பமதநீ |
| மதநிச்சா | நிதா | ச்நிதபா | மதநீ |
| தநிச்ரீ | ச்சா | ச்நிதபமா | தநீ |
| ச்ரிம்மா | ரீ | நிதபா | மா |
| ரிம்மா | ரிச்சா | தபமா | தநிதா |
| | | பமரிசா | ரீ |
| | | மரீ | சரீ |
| | | மரிசா | ரீ |
| | | ரிசநிதா | நீ |
| | | சநிதபா | மதா |
| | | நிதபா | மதநிசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**இணைச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| மதநிச்ா | ச்ா | ப்ம்ரிச்ா | ரீ |
| | | ச்நிதபமா | ரிமதா |
| | | பமரிசா | சா |

**கிளைச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| சரிமா | தநீ | ம்ரிச் | ரீ |
| ச்ரிம்ா | ரிச்ா | ச்நிதபா | பா |
| | | மரிசா | ரீ |
| | | சநிதபா | மதநிசா |

**நட்புச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசரீ | சா | ம்ரீ | ச்ா |
| ரிமா | மரீ | ரிச்நிதா | பமதா |
| மதா | மா | நிதபா | மதா |
| தநிச்ரீ | ச்ா | தபமா | மா |
| ரிம்ா | ரிச்ா | மரீ | சா |
| | | ரிசநிதா | பமதா |
| | | நிதப | மதநிசா |

| | | |
|---|---|---|
| சா | — | 5 |
| ரீ | — | 4 |
| மா | — | 6 |
| பா | — | 4 |
| தா | — | 3 |
| நீ | — | 0 |

மா — சீவசுரம்
மா-விற்கு இணைச்சுரம் — சா
சா — அமுத வைப்பு
அமரோசை (அவரோகணம்) முறையில் மா-விற்கு ரீ — கிளைச்சுரமாக வருவதால் அது அடுத்தபடியான முக்கிய சுரமாகும்.

## இராகம் : ஞானசிந்தாமணி

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ த$^{4}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{4}$ ப ம$^{2}$ ரி$^{2}$ ச

### இராக இலக்கணம் : (லட்சணம்)

ஞான சிந்தாமணி இராகம் 11வது தாய் இராகமான கோகிலப்ரியாவில் பிறந்தது.

இதில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), குறை உழை (சுத்த மத்தியமம்), இளி (பஞ்சமம்), நிறை விளரி (சதுச்ருதி தைவதம்), நிறை தாரம் (காகலி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. கைக்கிளை (காந்தாரம்) ஆரோசையிலும், அமரோசையிலும் வராது. (வர்ஜம்). ஆரோசையில் இளி (பஞ்சமம்) வராது.

இது திறம் — பண்ணியல் இராகமாகும் (ஔடவ—ஷாடவ இராகம்).

இதன் சீவசுரம் உழை (மா) யாகும்.

அமுதவைப்பு — குரல் (சா)

அடுத்த முக்கியமான சுரம் துத்தம் (ரீ)

### இராகத்தின் போக்கு (சஞ்சாரம்) :

சரிமா .. ரீ .. சா .. சரிமா .. ரீ .. ரிமாரிமா .. ரீசா
சரிமா .. தா .. பாமா .. ரீ .. சா ..
ரிமா .. தா .. பா .. மதா .. நீ .. ச்ா .. நீதபாமா ..
தாநீச்ா .. நீச்ா .. ரீ் .. ச்ா .. ச்ரீம்ா .. ரீ் ..
ரிம்ா ரிம்ா .. ரீச்ா .. ச்நிதா .. பா .. மதாநீச்ா
ச்நி தபமா .. ரீ .. சரிமா ரீ .. சா .. சநிதா
நி சரீ .. சநிதபா .. மா .. தா .. நீ .. சா.

இராகம் : ஞானசிந்தாமணி **தாளம் : ஆதி**

## முதல் நிலை

தாதாதா இனியேதா பெருமா நின்
தாளிணையே மறவாவோர் வரமே.

## இடை நிலை

தாதா ஈரேழ் புவியோரீசா
வேத நிறைவே அருளமுதே நீயே

## இறுதி நிலை

நீதி தேவா வான நாதா
நேச மாக ஆதாரமாம்
போ தார் பாத நினைவே தாராய்
பூசனை நாளும் புரிதரவே நீயே

அருஞ்சொல் :

| | | |
|---|---|---|
| தா—தாதா | — | தருவாய் வள்ளலே |
| தாதாய் | — | தந்தையே |
| புவி | — | உலகம் |
| போதார் பாதம் | — | மலரால் நிறை பாதம் |
| பூசனை | — | வழிபாடு |
| புரிதர | — | செய்ய |

இராகம்: ஞானசிந்தாமணி — 11வது தாய் இராகமாகிய கோகிலப்ரியாவில் பிறந்தது.

தாளம் : ஆதி

ஆ. ச ரி$^{2}$ ம$^{2}$ த$^{4}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{4}$ ப ம$^{2}$ ரி$^{2}$ ச

## முதல் நிலை (பல்லவி)

மா ; மா ; மா ; ரீமா | தா ; ; மா | தாநீ ச்ா ரீ
தா . தா . தா இனி யே . . தா பெருமாநின்

ச்ா ; நீ தா பா ; மாமா | ரீ ; சா ; | ; சா சாரீ
தா . ளிணையே . மற வா . வோர் . வரமே

## இடை நிலை (அனுபல்லவி)

தா ; நீ ; ச்ா ; ரீ ; | ச்ா ரீ ம்ா ; | ரீ ; ச்ா ;
தா . தா . ஈ . ரேழ் புவியோ . ரீ . சா

ரீ ; ரீ ; ச்ாநீதா ; | ச்ாநீதாபா | மா ; சா ரீ
வே . த நிறைவே . அருளமு தே . நீயே

## இறுதி நிலை (சரணம்)

மா ; மா ; ரீ ; சா ; | சா ; ரீமா | தா ; ; ;
நீ , தி . தே . வா . வா . னநா தா . . .

தா ; தா ; நீ ; ச்ா ; | ச்ா ; நீதா | பா ; ; ;
நே . ச . மா . க . ஆ . தார மாம்

தா ; நீ ; ச்ா ; ரீ ; | ச்ாரீம்ா ; | ரீ ; ச்ா ;
போதார் பா . த . நினைவே தா . ராய்

ரீ ; ரீ ; ச்ாநீதா ; | ச்ாநீதாபா | மா ; சாரீ
பூ . சனை நா.ளும் புரிதர வே . நீயே

இராகம் : வசந்தமல்லி — 11வது மேளமாகிய கோகிலப்ரியாவில் **பிறந்தது.**

ஆ. ச க$^{4}$ ம$^{2}$ ப நி$^{6}$ ச்

அ. ச் த$^{4}$ ப ம$^{2}$ க$^{4}$ ச

| * | | * | | * | * | | * | | * | | * | | * | * | * | * |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 4 | 6 | 2 | 4 | 4 | 6 | 2 | 4 | 2 | 4 | 4 | 6 | 2 | 4 | 4 | 6 | 2 | 4 |

ப த த நி நி ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் :**

| | | | |
|---|---|---|---|
| பநி | சதபா | ப்ம்க்ா | க்ம்ா |
| பநிசா | தபா | ப்ம்க்ச்ா | ச்க்ா |
| நிசகா | சா | ம்க்ச்ா | ச்ா |
| சகமா | கசா | ச்தப்ா | பநிச்ா |
| சகமபா | மகசா | ச்தபமா | பநிச்ா |
| கமபா | மபா | தபமா | பா |
| மபநிச்ா | தபா | பமகா | கமா |
| பநீ | ச்தபா | பமகசா | சகா |
| பநிச்ா | ச்தபா | மகசா | சா |
| நிச்க்ா | ச்ா | சதபா | நிசா |
| ச்க்ம்ா | க்ச்ா | | |
| ச்க்ம்ப்ா | ம்க்ச்ா | | |

இணைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | **இணைக்கும் சுரம்** |
|---|---|---|---|
| சகமபா | மகா | ம்ம்க்ச்ா | தபநீ |
| மபநிச்ா | தபநீ | ச்தபமா | பா |
| ச்க்ம்ப்ா | ம்க்ச்ா | பமகசா | சா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**கிளைச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| ப்நிசா | கசா | ம்க்ச்ா | தபநீ |
| சகமா | கமபா | ச்தபா | மகா |
| பநிச்ா | தபநீ | மகசா | தப்நீ |
| ச்க்ம்ா | க்ச்ா | சத்ப்ா | நிசா |

**நட்புச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| ப்நீ | சதப்ா | ப்ம்க்ா | க்ச்ா |
| நிசகா | சா | தபமா | பநிச்தா |
| கமபா | மா | பமகா | கசா |
| பநீ | ச்தபா | | |
| நிச்க்ா | ச்ா | | |

சா — 7
கா — 4
மா — 4 சீவசுரம் — சா
பா — 5 பா — இணைச்சுரம்
தா — 0 மா — கிளைச்சுரம்
நி — 2 அமுதவைப்பு — பா, மா

## இராகம் : **வசந்தமல்லி**

ஆ. ச க$^{4}$ ம$^{2}$ ப நி$^{6}$ ச்

அ. ச் த$^{4}$ ப ம$^{2}$ க$^{4}$ ச

### இராகத்தின் இலக்கணம் :

வசந்தமல்லி இராகம் 11வது மேளமாகிய கோகிலப்ரியாவில் பிறந்தது. இந்த இராகத்தில் குறை கைக்கிளை (சாதாரண காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), இளி (பஞ்சமம்), நிறை விளரி (சதுச்ருதி தைவதம்), நிறை தாரம் (காகலி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் துத்தமும் (ரிஷபம்), விளரியும் (தைவதம்) வரா. அமரோசையில் துத்தமும் (ரிஷபம்), தாரமும் (நிஷாதம்) வரா (வர்ஜம்). இது ஒரு திறம்—திறம் இராகமாகும் (ஔடவ—ஔடவ இராகம்).

இந்த இராகத்தின் சீவசுரம் — குரல் (சா)
அமுதவைப்பு — இளி (பஞ்சமம்), உழை (மத்யமம்).

### இராகத்தின் போக்கு :

சகமா ... கா .. சா .. சகமபா .. மா .. கா .. சா ..
கமபா .. மபா .. மபா .. மா .. கா .. சா .. கா மா பா —
மபநீ .. ச்ா .. தா .. பா .. நீ ச்ா .. தா .. பா
நிச் .. க்ா ... ச்ா .. ச்க்ம்ா .. க்ா .. ச்ா ...
பநிச்ாதாபாமா .. பா .. பாமாகா .. மாகாசா ..
சாதாபா — நீ .. சா .. கா .. சா

**இராகம் : வசந்தமல்லி** **தாளம் : ஆதி**

முதல் நிலை

கருணாகரா எமையாளவே
தாமதமா நிலமேலே வருக

இடை நிலை

குருவாகவே புவிமீது மேவி
உருவாகி நீ நிதியாக வருக

இறுதி நிலை

குறை யாவும் நீங்க குணாளனே
வரவேணுமே தாய் பாசமே
தரவேணுமே சராசரமான
உலகேழுமாவாய் உறவாக வருக.

இராகம்: வசந்தமல்லி — 11வது மேளமாகிய கோகிலப்ரியாவில் பிறந்தது.

தாளம்: ஆதி

ஆ. ச க⁴ ம² ப நி⁶ ச்

அ. ச் த⁴ ப ம² க⁴ ச

## முதல் நிலை

; ; ; பா நீ ச்ா ; தா | பா ; ; பா | மா கா ; கா |
. . . கருணா . க ரா . . எ மை யா ள

சா ; ; சா ; கா ; மா | பா ; ; கா | மா ; பாமா | காகாமா
வே . . தா . ம . தி மா . . நி ல . மேலே வருக

## இடை நிலை

; ; ; ச்ா ச்ா ச்ா ; ச்ா | க்ா ; ; க்ா | ம்ா ம்ா ; ம்ா |
குரு வா . க வே . . பு வி மீ து

க்ா ; ச்ா ச்ா தாபா ; மா | பா ; நீ ச்ா | தாபா ; மா | காகாமா
மே . வி உரு வா . கி நீ . . நி நியா . க வருக

## இறுதி நிலை

; ; ; பாபாபா ; பா | பா ; நீ ச்ா | தா பா ; மா |
குறையா . வும் நீ . ங் கரு ணா . . ள

பா ; ; பாமாகா ; கா | சா ; ; சா | ; கா ; மா |
னே . . வரவே . ணு மே . . தாய் பா . ச

பா ; ; ச்ா ச்ா ச்ா ; ச்ா | க்ா ; ; க்ா | ம்ா ; ம்ா ம்ா |
மே . . தர வே . ணு மே . . . ச ரா . ச ர

க்ா ; ச்ா ச்ா தாபா ; மா | பா ; நீ ச்ா | தாபா ; மா | காகாமா
மா . ன உல கே . மு மா . வாய்உ றவா . க வருக.

**இராகம் : கல்பனதாரிணி — 13வது மேளமாகிய காயகப்ரியாவில் பிறந்தது.**

ஆ. ச க$^{6}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{2}$ த$^{2}$ ப ம$^{2}$ க$^{6}$ ரி$^{2}$ ச

*  *    * *    *    * *    * *    *

2 2 4 6   2 4 4 6 2 4 , 2 2 4 6   2 4 4 6 2 4

ப த நி நி நி ச ரி ரி க க ம ம ப த நி நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | சநிதா | ப்ம்க்ரிச்சா | ச்க்கா |
| தசா | சா | ம்க்ரீ | ச்க்கா |
| சகா | ரிசா | ம்க்ரிச்சா | ச்க்கா |
| சகமா | கரிசா | க்ரிச்சா | ச்க்கா |
| சகமபா | மகா | க்ரிச்நீ | தச்க்கா |
| கமபதா | பமா | ரிச்நீ | தச்க்கா |
| மபதச்சா | நிதா | ரிச்நிதா | தச்சா |
| பதச்சா | நிதா | ச்நிதா | தச்சா |
| தச்சா | ச்சா | ச்நிதபா | பதச்சா |
| ச்க்கா | ரிச்சா | ச்நிதபமா | பதச்சா |
| ச்க்ம்மா | க்ரீ | நிதபமா | கமபா |
| ச்க்ம்ப்பா | ம்க்ரிச்சா | நிதபமகா | கமபா |
| | | தபமகா | மபா |
| | | தபமகரீ | சகமா |
| | | பமகரிசா | சகா |
| | | மகரீ | சகா |
| | | மகரிசா | சகா |
| | | கரிசா | சகா |
| | | கரிசநீ | தசகா |
| | | ரிசநீ | தசகா |
| | | ரிச்நிதா | தசா |
| | | சநிதா | தசா |
| | | சநிதபா | பதசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**இணைச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| சகமபா | பமா | ப்ம்க்ரிச்ா | ச்க்ா |
| மபதச்ா | ச்ா | க்ரிச்நீ | தச்ா |
| ச்க்ம்ப்ா | ம்க்ரிச்ா | ச்நிதபமா | பதா |
| | | தபமகரீ | சகமா |
| | | பமகரிசா | சகா |
| | | கரிசநீ | தசா |

**இளைச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | சா | ம்க்ரிச்ா | ச்க்ா |
| சகமா | கமா | ரிச்நிதா | தச்ா |
| பதச்ா | நிதச்ா | ச்நிதபா | பதச்ா |
| ச்க்ம்ா | க்ரிச்ா | நிதபமகா | கமபா |
| | | மகரிசா | சகா |
| | | ரிசநிதா | தசா |
| | | சநிதபா | தசா |

**நட்புச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | சா | ம்க்ரீ | ச்க்ா |
| சகா | ரிசா | க்ரிச்ா | ச்க்ா |
| கமபதா | பா | ரிச்நீ | தபதா |
| தச்ா | ச்ா | ச்நிதா | பதச்ா |
| ச்க்ா | ரிச்ா | நிதபமா | பா |
| | | தபமகா | மா |
| | | மகரீ | சதா |
| | | கரிசா | சகா |
| | | ரிசநீ | தசா |
| | | சநிதா | பதசா |

சா — 11
ரீ — 3
கா — 4
மா — 4
பா — 4
தா — 5 ஜீவசுரம் — சா
நீ — 4 அமுதவைப்பு — பா. அடுத்தபடியான முக்கிய சுரம் — தா.

## இராகம் : கல்பனதாரிணி

ஆ. ச க$^{6}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{2}$ த$^{2}$ ப ம$^{2}$ க$^{6}$ ரி$^{2}$ ச

இராக இலக்கணம் :

கல்பனதாரிணி இராகம் 13வது மேளமாகிய காயகப்ரியாவில் பிறந்தது. இதில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), இளி (பஞ்சமம்) குறை விளரி (சுத்த தைவதம்) நிறை விளரி (சுத்த நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் குறைதுத்தம் (சுத்த ரிஷபம்), நிறைவிளரி (சுத்த நிஷாதம்) ஆகிய சுரங்கள் வரா. (வர்ஜம்), அமரோசையில் எல்லா சுரங்களும் வருகின்றன. (சம்பூரணம்) இது திறம் — பண் இராகமாகும். (ஔடவ சம்பூரண இராகம்). இந்த இராகத்தின் சீவசுரம் — குரல் (சா).
அமுதவைப்பு இளி (பா).

இராகத்தின் போக்கு (சஞ்சாரம்)

சகா .. ரீசா .. சகமா .. கரிசா .. சகமபா .. மா .. கா.

மகரீசா .. கமபதா .. பாமா .. பதச்ா .. நீ .. தா .. பா.

பதச்ா .. நீ .. தா .. பா .. தச்க்ா .. ரீ ச்ா.

ச்க்ம்ப்ா .. ம்க்ரி்ச்ா .. க்ரி்ச்நீ .. தா .. பா ..

பதச்ா .. நீ .. தா .. பா .. பதச்ா .. நீ .. தா .. பாமா ..

பதச்ா .. நீ .. தா .. பாமா .. தபமகா .. மபா ..

தபமகரீ .. சகமபமகரீ .. சா கரிசா .. கரிசநி̣தா̣பா .. பா̣தா̣சா.

இராகம் : கல்பனதாரிணி தாளம் : ஆதி

முதல் நிலை (பல்லவி)

ஆதாரமே புரிவாய் இறைவா
ஏழேழு லோகமும் மாயாதொளி பெற [ஆதா]

இடை நிலை (அனுபல்லவி)

பெருமா நிதியே அருளாரமுதே
தேவகோமானே, திருவருளொடு நிறை [ஆதா]

இறுதி நிலை (சரணம்)

தாதாவே புவியோர் வாழ உனதிரு
தாளே துணையெனும் நினைவுற நீயே
வரமே தருவாய் குருவாய் வருவாய்
தேவா மூவா நலனொடு வலமுற [ஆதா]

அருஞ்சொல் :

**மாயாதொளி பெற** — இறவாமல் உன் ஒளியிலே நிலைபெற
**மூவாநலனொடு** — இனநலத்தொடு
**வலமுற** — வெற்றி பெற

இராகம்: கல்பனதாரிணி — 13வது மேளமாகிய காயகப்ரியாவில் பிறந்தது.

தாளம்: ஆதி

ஆ. ச க$^{6}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{2}$ த$^{2}$ ப ம$^{2}$ க$^{6}$ ரி$^{2}$ ச

## முதல் நிலை

ச்ா , நீ , தாபா ; மா பா | மா ; கா ரீ | சா ; ; ; |
ஆ . தா . ரமே . பு ரி வாய் . இறை வா . . .

சா , கா , மா பா ; தா தா | பா ; மா ; | காமாபாதா
ஏ . ழே . ழு லோ . க மும் மா . யா தொளிபெற.

## இடை நிலை

| பாதாச்ா ; த்ா ச்ா க்ா ; | ம்ா க்ா ரீ ; | க்ா ரீ ச்ா ;
பெருமா . நிதி யே . அரு ளா . ரமு தே .

ச்ா ச்ா நீ ; தா ; பா ; | மாகா ரீசா | காமாபாதா
தே வ கோ . மா னே திரு வரு ளொடு நிறை

## இறுதி நிலை

தா , தா , தா தாபாமா ; | பா ; மா ; | காரீ சா நீ
தா . தா . வே புவியோற் . வா . ழ . உன திரு

சா , கா , மா பா ; காமா | பாதா ச்ா நீ | தா ; பா ;
தா . ளே . து ணை . யெனும் நினை வுற நீ . யே .

பா தா ச்ா ; தாச்ா க்ா ; | ம்ா க்ா ரீ ; | க்ா ரீ ச்ா ;
வ ர மே . தரு வாய் . குரு வாய் . வரு வாய் .

ச்ா ; நீ ; தா ; பா ; | மாகா ரீசா | காமா பாதா
தே . வா . மூ . வா . நல னொடு வல முற.

இராகம்: அமுதசுரபி — 14வது மேளமாகிய வகுளாபரணத்தில் பிறந்தது.

ஆ. ச ம$^2$ க$^6$ ம$^2$ ப த$^2$ ச்

அ. ச் நி$^4$ த$^2$ ப ம$^2$ ரி$^2$ ச

```
   *   *       * *     *      *   *       * *    *
 2 4 4 6   2 4 4 6 2 4   2 4 4 6   2 4 4 6 2 4
ப த த நி நி ச ரி ரி க க ம ம ப த த நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்
```

**இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள்:**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | நிதா | ப்ம்ரிச்சா | ச்ம்க்மா |
| தசா | நி | ம்ரீ | ச்ம்க்மா |
| சமகா | ரிசா | ம்ரிச்சா | ச்ம்க்மா |
| சமகமா | ரிசா | ம்ரிச்நீ | ச்ம்க்மா |
| சமகமபா | மா | ரிச்நிதா | தா |
| மபதச்சா | நிதா | ச்நிதா | பதா |
| பதச்சா | நீ | ச்நிதபா | தா |
| தச்சா | ச்சா | சநிதபமா | பதச்சா |
| ச்ம்க்கா | ரிச்சா | நிதபமா | பா |
| ச்ம்க்மா | ரிச்சா | தபமரீ | சமகம |
| ச்ம்க்ம்பா | ம்ரிச்சா | பமரிசா | மா |
| | | மரீ | மா |
| | | மரிசா | சமகமா |
| | | மரிசநீ | சமகமா |
| | | ரிசநிதா | பதா |
| | | சநிதா | பதா |
| | | சநிதபா | தசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| சமகமபா | மா | ப்ம்ரிச்ா | ச்ம்க்ம்ா |
| மபதச்ா | ச்ா | ம்ரிச்நீ | ச்ா |
| ச்ம்க்ம்ப்ா | ம்ரிச்ா | ச்நிதபமா | பா |
| | | தபமரீ | சமகமா |
| | | பமரிசா | சமகமா |
| | | மரிசநீ | சா |

கிளைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | நீ | ம்ரிச் | ச்ம்க்ம் |
| சமகா | மரிசா | ரிச்நிதா | பதா |
| சமகமா | மா | ச்நிதபா | தச்ா |
| பத்சா | ச்ா | நிதபமா | ரீ |
| ச்ம்க்ா | ம்ரிச்ா | மரிசா | ரீ |
| ச்ம்க்ம்ா | ரீச்ா | ரிசநிதா | சா |
| | | சநிதபா | தசா |

நட்புச்சுரத் தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | நீ | ம்ரீ | ச்ா |
| தச்ா | ச்ா | ச்நிதா | பா |
| | | மரீ | சா |
| | | சநிதா | சா |

சா — 9
ரீ — 3
கா — 2 சா — சீவசுரம்
மா — 4 மா — சாவிற்கு கிளைச்சுரம்
பா — 4 பா — சா—விற்கு இணைச்சுரம்
தா — 4
நீ — 2 அமுத வைப்பு — மா, பா.

## இராகம் : அமுதசுரபி

ஆ. ச ம$^{2}$ க$^{6}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ப ம$^{2}$ ரி$^{2}$ ச

**இராக இலக்கணம் : (லட்சணம்)**

அமுதசுரபி இராகம் 14வது மேளமாகிய வகுளாபரணத்தில் பிறந்தது. இதில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), இளி (பஞ்சமம்), குறை விளரி (சுத்த தைவதம்) குறைதாரம் (கைசிகி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் துத்தமும் (ரிஷபம்), தாரமும் (நிஷாதம்) வரா. ஆரோசையில் சமகம என்ற பயன்பாடு (பிரயோகம்) வருகிறது. (வக்ர வர்ஜப்பிரயோகம்). அமரோசையில் கைக்கிளை (காந்தாரம்) வராது (வர்ஜம்). இது ஒரு திறம்—பண்ணியல் இராகமாகும் (ஔடவ—ஷாடவ இராகம்) இந்த இராகத்தின் சீவசுரம்—குரல் (சட்ஜம்). அமுதவைப்பு — இளி (பஞ்சமம்), உழை (மத்யமம்).

**இராகத்தின் போக்கு (சஞ்சாரம்) :**

சமாகமா .. ரீ .. சா .. சமகமா .. பா .. மா .. ரீசா

சமகமாபா .. மா .. மபதா .. ச்ா .. நீ .. தா ..

ச்ம்ாக்ம்ா .. ரீ் .. ச்ா ச்ம்ா க்ம்ா .. ம்ரீ் ..

ம்ரீ்ச்ா .. ம்ாரீ் ச்ாநீ .. ச்ா ..

ச்ாநிதா .. பத ச்ாநீதா .. பதா ..

ச்ாநீ .. தாபாமா .. பதச்ா நீ .. தா .. பா .. மா .. பா

தபமரீ .. சா .. சமகம பாமாரீசா ..

சாநீதா .. பத சா .. சா நீதா .. பா

பாதாசா

இராகம்: அமுதசுரபி　　　　　　　　　　தாளம்: ஆதி

### முதல் நிலை

தமிழிசை பாடி மகிழுமோர்
தனியொரு வரமே அருளுவாய்

### இடை நிலை

தேனூரமுதாய் எழுசுர மேழாய்
திகழு மொருபே ரிறைவா நீ

### இறுதி நிலை

நாத மா யுணர்வோடுளமுற மேவி
நனவினில் கனவாய் நடைபெறுமோர்
வானூரமுதாம் சுவை பெற நாவால்
மனநி றையவே உனையே—யான்.

அருஞ்சொற்பொருள்:

தனியொருவரம்—ஒப்பில்லாத வரம்
எழுசுரம்—உந்தியினின்று மேலோங்கி வரும் நாதம்

இராகம் : அமுதசுரபி — 14வது மேளமாகிய வகுளாபரணத்தில் பிறந்தது.

தாளம் : ஆதி

ஆ. ச ம$^{2}$ க$^{6}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ப ம$^{2}$ ரி$^{2}$ ச

## முதல் நிலை (பல்லவி)

; சமா கமா பா ; ; தா | ; ச்நீ தா , | பா ; ; ;
. தமி ழிசை பா . . டி . மகிழு மோர் . . .

; கமா பதா பாமாமா ; | ; பாமாரீ | சா ; ; ;
. தனி யொரு வரமே . . அருளு வாய் . . .

## இடைநிலை (அனுபல்லவி)

; பா ; தாச்ா ச்ா ச்ா ; | ; ச்மா க்மா | ரீ ; ச்ாச்ா
. தே . னார மு தாய் . . எழு சுர மே . ழாய்

; ச்ா ச்ா ச்ா நீ தாபா ; | ; மமா ரீ , | சா ; ; ;
. தி க ழு மொரு பே . . ரிறை வா நீ . . .

## இறுதிநிலை (சரணம்)

; மா , மமா ; பாதாச்ா | ; ச்நீ தபா | மா ; மா ;
. நா தமா யுணர்வோ . . டுள முற மே . வி .

; மபா தபா ; மாரீசா | ; சமாகமா | பா ; ; ;
. நன வினில் கனவா . நடைபெறு மோர் . . .

; பா ; தாச்ாச்ாச்ா ; | ; ச்மா க்மா | ரீ ; ச்ா ச்ா
. வா . னா ரமுதாம் . . சுவை பெற நா . வால்

; ச்ாச்ா ; நீதாபா | ; மமா ரீ , | சா ; ; ; |
. மனநி . றையவே . உனையே . யான் . . .

**இராகம்: மாளவக்குறிஞ்சி — 15வது மேளமாகிய மாயாமாளவகௌளையில் பிறந்தது.**

ஆ. ச க$^{6}$ ப த$^{2}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{2}$ ம$^{2}$ ரி$^{2}$ ச

2 4 4 6 24 46 2 4 24 46 24 46 24

ப தத நிநி ச ரிரி கக மம ப தத நிநி ச் ரிரி க்க் ம்ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத் தொடர்கள்**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதநீ | தமா | ப்ம்ரிச்சா | ச்க்ப்பா |
| பதநீசா | சநீ | ம்ரீ | ச்க்ப்பா |
| தநிசா | நிசா | ம்ரிச்சா | க்ப்ம்மா |
| நிசகா | பமரீ | ரிச்நிதா | பதநீ |
| சகா | பமரீ | ச்நிதா | பதநீ |
| சகபா | பமரீ | ச்நிதமா | ரிசகபா |
| கபதா | தமரீ | தமரீ | சகபா |
| கபதநீ | நிதமா | பமரிசா | சகபா |
| பதநீ | தமா | மரீ | சகபா |
| பதநிச்சா | நிதா | மரீசா | கபமா |
| தநிச்சா | நிதா | ரிசநிதா | தநீ |
| நிச்க்கா | ப்ம்ரீ | சநிதா | தநிசா |
| ச்க்கா | ப்ம்ரீ | | |
| ச்க்ப்பா | ப்ம்ரீ | | |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

இணைச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| சகபா | மரீ | ப்ம்ரிச்ா | ச்க்ப்ா |
| கபதநீ | ச்ா | ச்நிதமா | ரிசகபா |
| ச்க்ப்ா | ம்ரிச் | தமரீ | சா |
| | | பமரிசா | சா |

கிளைச்சுரத்தொடர்கள்:

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதநிசா | சா | ம்ரிச்ா | க்ப்ம்ா |
| நிசகா | பா | ரிச்நிதா | நிதா |
| பதநிச்ா | நிச்ா | மரிசா | கபமா |
| நிச்க்ா | ப்ம்ரிச்ா | ரிசநிதா | நிசா |

நட்புச்சுரத்தொடர்கள் :

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதநீ | சநீ | ம்ரீ | ச்ா |
| தநிசா | சா | ச்நிதா | நிதா |
| சகா | பமரிசா | மரீ | சா |
| கபதா | மரிசகா | சநிதா | நிசா |
| பதநீ | தா | | |
| தநிச்ா | ச்ா | | |
| ச்க்ா | ப்ம்ரிச் | | |

சா — 8
ரீ — 3
கா — 4
மா — 1
பா — 2 சீவசுரம் — சா.
தா — 4 அடுத்தபடியான முக்கிய சுரங்கள் கா, தா
நீ — 3

இராகம்: மாளவக்குறிஞ்சி

ஆ. ச க$^{6}$ ப த$^{2}$ நி$^{6}$ ச்

அ. ச் நி$^{6}$ த$^{2}$ ம$^{2}$ ரி$^{2}$ ச

**இராக இலக்கணம் :**

மாளவக்குறிஞ்சி இராகம் 15வது மேளமான மாயா மாளவகௌளையில் பிறந்தது. இதில் குறை துத்தம் (சுத்த ரிஷபம்), நிறை கைக்களை (அந்தர காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), இளி (பஞ்சமம்), குறை விளரி (சுத்த தைவதம்), நிறைதாரம் (காகலி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன ஆரோசையில் துத்தம் (ரி) உழை (ம) ஆகிய சுரங்கள் வரா (வர்ஜம்) அமரோசையில் இளி (ப), கைக்கிளை (க) ஆகிய சுரங்கள் வரா. இது ஒரு திறம்—திறம் இராகமாகும் (ஔடவ—ஔடவ இராகம்). இந்த இராகத்தின் சீவசுரங்கள் — குரல் (சட்ஜம்), துத்தம் (ரிஷபம்). அமுதவைப்பு — விளரி (தைவதம்)

இராகத்தின் போக்கு (சஞ்சாரம்) :

சகபா .. மரீ .. சா .. கபதா .. தமரீ ... சா ..
கபதநீ .. நிதமா .. பதநீ .. தமா .. பதநிஸ்நிதமா
கபதநிச்ா .. நிதா .. தநிச்ா .. நிதா .. தநிச்ா
நிச்க்ா .. ப்ம்ரீச்ா .. ச்க்ா .. ப்ம்ரிச்ா
க்ப்ா .. ம்ரீச்ா .. ரிச்நிதா ... பதநீ
ச்நிதா ... பதநீ .. ச்நிதமா .. ரிசா .. கபா
தமரீ .. சகபா .. தமரீ ... ரிசா
கபா .. மரீ .. சநிதா ... தநீ .. சநிதா .. தநீ .. சா

இராகம் : மாளவக்குறிஞ்சி தாளம் : ரூபகம்

முதல் நிலை

மாதவமே புரிவாயே மனமே இறைஅருளுற நிறை

இடை நிலை

விதிவழியே மாயாதினி ஓயாமே தினமே
தீமையாவும் விலகிடவே தேவதானமேவி யினிது

இறுதி நிலை

மாயமான அவா யாவும் சேராமே தனியே
ஞானயோக மேவிநாளும் மோனமொடு நெடிதே.
கதிபெறவே தாழாதுயிர் தேயாமே மனமே
நாளும் நாளும் மகிழுறவே தேவதேவன் பாதமணுகி

அருஞ்சொல் :

| | | |
|---|---|---|
| தேவதானம் | — | தேவாலயம் |
| மாயம் | — | பொய், வஞ்சனை |
| அவா | — | பேராசை |
| மோனம் | — | யோகநிலை |
| கதி | — | இறையுலகம் |
| தாழாது | — | காலங்கடவாது |
| தேயாமே | — | வருந்தாமல் |

இராகம் : மாளவக்குறிஞ்சி — 15வது தாய் இராகமான மாயாமாளவகௌளையில் பிறந்தது.

தாளம் : ரூபகம்

ஆ. ச க$^6$ ப த$^2$ நி$^6$ ச்

அ. ச் நி$^6$ த$^2$ ம$^2$ ரி$^2$ ச

## முதல் நிலை (பல்லவி)

| | | | |
|---|---|---|---|
| ச்ாநிதமா | தமரீசா | சகபா பத | நிதமபதநி |
| மா . தவமே | புரிவாயே | மனமே . இறை | அருளுறநிறை |

## இடை நிலை (அனுபல்லவி)

| | | | |
|---|---|---|---|
| தநி சநிச்ா | க்ா க்ாச்க் | ரீ்ரீ்ச்ா | நிநிச்ா ; |
| விதிவழியே | மா . யாதினி | ஓயாமே | தினமே . |
| ச்ாச்நீத | பதநிதமா | தாம ரீரி | சா கபதநி |
| தீமையாவும் | விலகிடவே | தேவ தானம் | மே வியினிது |

## இறுதி நிலை (சரணம்)

| | | | |
|---|---|---|---|
| தாத தாத | நிச்ா நீத | மாரீசா | சகபா ; |
| மாய மான | அவா யாவும் | சேராமே | தனியே . |
| காக பாப | தாத மாம | ரீச கபா | தநி ச்ா ; |
| ஞான யோக | யேவி நாளும் | மோனமொடு | நெடிதே . |
| தநிச்நிச்ா | க்ா க்ா ச்க் | ரீ்ரீ் ச்ா | நிநி ச்ா ; |
| கதிபெறவே | தா ழா துயிர் | தேயாமே | மனமே . |
| ச்ாச் நீத | பதநிதமா | தாம ரீரி | சா கபதநி |
| நாளும் நாளும் | மகிழுறவே | தேவதேவன் | பா தமணுகி |

**இராகம் : லலிதபைரவி — 19வது மேளமாகிய ஜங்காரத்வனியில் பிறந்தது.**

ஆ. ச க$^{4}$ ம$^{2}$ ப த$^{2}$ ச்

அ. ச் நி$^{2}$ த$^{2}$ ப ம$^{2}$ க$^{4}$ ரி$^{4}$ ச

* * * * * * * * * *
2 2 4 6 2 4 4 6 2 4 2 2 4 6 2 4 4 6 2 4
ப த நி நி நி ச ரி ரி க க ம ம ப த நி நி நி ச் ரி ரி க் க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | சநிதபா | ப்ம்க்ா | ம்ா |
| தசா | நிதா | ப்ம்க்ரீ | ச்க்ம்ா |
| தசகா | ரிசா | ப்ம்க்ரிச்ா | ச்க்ம்ா |
| சகமா | கரீ | ம்க்ரிச்ா | க்ம்ா |
| சகமபா | மகரீ | க்ரிச்நிதா | ச்க்ா |
| கமபா | மகரீ | ரிச்நீ | தச்க்ா |
| கமபதா | பமகரீ | ரிச்நிதபா | தச்ா |
| மபதச்ா | நிதபா | ச்நிதா | பதா |
| பதச்ா | நிதபா | ச்நிதபா | தா |
| த்ச்ா | நிதபா | ச்நிதபமா | பதச்ா |
| தசக்ா | ரீச்ா | நிதபமா | பதச்ா |
| ச்க்ம்ா | க்ரிச்ா | நிதபமகரீ | சகமபா |
| ச்க்ம்ப்ா | ம்க்ரிச்ா | தபமகா | மா |
| க்ம்ப்ா | ம்க்ரிச்ா | பமகா | கமா |
| | | பமகரீ | சகமா |
| | | பமகரிசா | சகமா |
| | | மகரிசா | சகமா |
| | | கரிசநிதா | சா |
| | | ரிசநீ | தசா |
| | | ரிசநிதபா | தசா |
| | | சநிதா | பதா |
| | | சநிதபா | தசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**இணைச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசகா | ரிசா | ப்ம்க்ரிச்ா | க்ா |
| சகமபா | மா | க்ரிச்நிதா | ச்க்ா |
| மபதச்ா | நிதா | ரிச்நிதபா | தச்ா |
| தச்க்ா | ரிச்ா | ச்நிதபமா | பதச்ா |
| | | நிதபமகரீ | சகம |
| | | பமகரிசா | சா |
| | | கரிசநிதா | சா |
| | | ரிசநிதபா | தசா |

**இளைச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதசா | சா | ப்ம்க்ரீ | ச்க்ம்ப்ா |
| சகமா | கரிசா | ம்க்ரிச்ா | சக்ா |
| கமபதா | பமா | ரிச்நீ | தச்ா |
| பதச்ா | ச்ா | ச்நிதபா | தா |
| ச்க்ம்ா | க்ரிச்ா | தபமகா | மா |
| | | பமகரீ | சகா |
| | | மகரிசா | கா |
| | | ரிசநீ | தசா |
| | | சநிதபா | தசா |

**நட்புச்சுரத் தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தசா | கா | ப்ம்க்ா | ரிச் |
| கமபா | பா | ச்நிதா | ச்ா |
| தச்ா | ச்ா | நிதபமா | பா |
| க்ம்ப்ா | ம்க்ரிச்ா | பமகா | ரிசா |
| | | சநிதா | பதசா |

சா — 9
ரீ — 3
கா — 5
மா — 4
பா — 8
தா — 5
நீ — 2

சா, பா — ஜீவசுரங்கள்
பாவிற்கு ரீ இணைச்சுரம்
ரீ — அமுத வைப்பு.
கா-வும், தா-வும் முக்கிய சுரங்கள்.

இராகம் : **லலிதபைரவி**

ஆ. ச க$^4$ ம$^2$ ப த$^2$ ச்

அ. ச் நி$^2$ த$^2$ ப ம$^2$ க$^4$ ரி$^4$ ச

**இராகத்தின் இலக்கணம் :**

லலிதபைரவி 19-வது தாய் இராகமாகிய ஜங்காரத்வனியில் பிறந்தது. இதில் நிறை துத்தம் (சதுச்ருதி ரிஷபம்), குறை கைக்கிளை (சாதாரண காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), இளி (பஞ்சமம்), குறை விளரி (சுத்த தைவதம்), நிறை விளரி (சுத்த நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் நிறை துத்தம் (சதுச்ருதி ரிஷபம்), நிறை விளரி (சுத்த நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருவதில்லை. (வர்ஜம்). அமரோசையில் எல்லா சுரங்களும் வருகின்றன. (சம்பூரணம்).

குரல் (சா), இளி (பா), ஆகியவை இந்த இராகத்தின் சீவசுரங்கள். துத்தம் (ரீ), இணைச்சுரம் — அமுதவைப்பு.

குறை கைக்கிளையும், குறை விளரியும் (சாதாரண காந்தாரமும் — சுத்த தைவதமும்) முக்கிய சுரங்கள்.

**இராகத்தின் போக்கு :**

ச கா மா .. கா .. ரீ .. சா .. சகமபா .. மா .. கா .. ரீ .. சா
கமபா .. மா .. காரீ .. சா .. கமபதா .. பமகரீ ..
கமபத ச்ா .. நீ தா .. பா .. மபதச்ா .. நீ .. தா .. பா ..
பாதாச்ா .. க்ா .. ரீ் .. ச்ா .. ச்ா .. க்ா .. ம்ா .. க்ா .. ரீ் .. ச்ா
ச்ா .. க்ா .. ம்ா .. ப்ா ம்ா க்ா .. ரீ் .. ச்ா .. க்ா ரீ் ச்ா .. நீ .. தா
பாதாச்ா .. க்ா .. ரீ் .. ச்ா நீ .. தா .. பா .. பதச்ா .. நீ .. தா .. பா ..
தா .. பா .. மா .. கா .. ரீ .. சகமபா .. தபமகரீ
சகமா .. பாமாகாரீ .. ச .. கர் மா கா .. ரீ .. சா ..
கா .. ரீ சா நீ தா பா .. பதசா .. நீ தா .. பா .. தா .. சா.

இராகம் : லலிதபைரவி தாளம் : திரிபுட

## முதல் நிலை

தேவ தேவா மா தே வா உனதடி
சேரவே தேவா அருள்புரிந் திடுவாய்.

## இடை நிலை

பாவமே யான் புரிவனேனும் பாவிஎன இகழேல்
பாசமோவா நேசமேதா பரமனே அரிதாவதோ

## இறுதி நிலை

பாவமாய வாதையான ஏதுமேவாமே சதா
தேவ தேவா தினமுமே சீர் பாதமே நினைவாய்
சீலமாறா தவமதாலே ஈச நினை உறவே
தேசுமாறாக் கோலமே நீ சிறியனேற் கருள் மேவியே

அருஞ்சொற்பொருள் :

இகழேல் — பழித்து நீக்கிவிடாதே
பாசமோவா — பக்தி குறையாத
அரிதாவதோ — உனக்கு இது ஒரு பெரிய செயலாகுமா (ஆகாது)
பாவமாய — பாவங்கள் அழிய
வாதையான — துன்பங்களான
மேவாமே — எனை அடையாமல்
சதா — எப்பொழுதும்
சீலம் — ஒழுக்கம், நோன்பு
தேசு — ஒளி
கோலம் — அழகு
சிறியேற்கு — அடியவனாகிய எனக்கு

**இராகம் : லலிதபைரவி — 19வது மேளமாகிய ஜங்காரத்வனியில் பிறந்தது.**

தாளம் : திரிபுடை

ஆ. ச க⁴ ம² ப த². ச்

அ. ச் நி² த² ப ம² க⁴ ரி⁴ ச

## முதல் நிலை

| சா , காமா | பா , ; பத | ச்சா , நீநீ | ததப பா ; |
|---|---|---|---|
| தே . வதே | வா . மா | தே . வா . | உனத டி . |
| தாப மா ; | பாம கா ; | மமக ரீகரி | சா , ; ; |
| சேர வே | தே. வா . | அருள்புரிந்திடு | வாய் . . |

## இடை நிலை

| பாத ச்சா ச்சா | க்க்க் ர்ரீ ர்ரீ | ம்மாம் க்ரிக்ரி | ச்சா , ; ; |
|---|---|---|---|
| பாவ மேயான் | புரிவ னேனும் | பாவி எனஇக | மேல் . . |
| ச்சாச் நீநீ | தாத பாபா | பபம காரிச | காரி சா ; |
| பாச மோவா | நேச மேதா | பரம னேஅரி | தாவ தோ |

## இறுதி நிலை

| பாப பாபா | மாம காரீ | மாக ரீ சா | காரி சா ; |
|---|---|---|---|
| பாவ மாய | வாதை யான | ஏதுமேவா | மே சதர் . |
| பாத சாசா | கக்க ரீரீ | காம பாமமம | காரி சா ; |
| தேவ தேவா | தினமு மேசீர் | பாதமேநினை | வா . ய் . |
| பாத ச்சாச்சா | க்க்க் ர்ரீர் | ம்மாம் க்ரிக்ரி | ச்சா , ; ; |
| சில மாறா | தவமே தாலே | ஈச நினைஉற | வே . . |
| ச்சாச் நீநீ | தாத பாபா | பபம காரிரி | காரி சா ; |
| தேக மாறா | கோல மேநீ | சிறியனேற்கருள் | மேவி யே . |

இராகம்: அமுதகாந்தாரி — 32வது மேளமாகிய இராகவர்த்தினியில் பிறந்தது.

ஆ. ச க$^{6}$ ம$^{2}$ ப த$^{2}$ நி$^{4}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ப$^{2}$ ம$^{2}$ க$^{6}$ ரி$^{6}$ ச

* * * * * * * * *

2 4 4 6 2 4 6 6 2 4 2 4 4 6 2 4 6 6 2 4

ப த த நி நி ச ரி ரி ரி க ம ம ப த த நி நி ச் ரி ரி ரி க் ம் ம் ப்

**இணை, கிளை, நட்புச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதநிசா | நீ | ப்ம்க்ரீ | ச்க்மா |
| தநிசா | நீ | ப்ம்க்ரிச்ா | ச்க்ா |
| நிசகமா | மகரீ | ம்க்ரிச்ா | க்ா |
| சகா | மகரீ | ம்க்ரிச்நீ | ச்க்ா |
| சகமா | மகரீ | க்ரிச்ா | ச்கா |
| சகமபா | மா | ரிச்நீ | ச்கா |
| கமபதா | மா | ரிச்நிதா | தநீ |
| மபதநீ | தமா | ச்நிதா | தநீ |
| மபதநிச்ா | நிதா | ச்நிதமா | பதநீ |
| பதநிச்ா | நிதா | நிதமா | பதா |
| தநிச்ா | ச்நீ | நிதமகரீ | சகமபதா |
| நிச்க்ம்ா | க்ரீ | தமகா | மபா |
| ச்க்ா | ரீ | தமகரீ | சகமா |
| ச்க்ம்ா | க்ரீ | பமகரீ | சகமா |
| ச்க்ம்ப்ா | ம்க்ரிச்ா | பமகரிசா | சகா |
| | | மகரிசா | சகா |
| | | மகரிசநீ | சகா |
| | | கரிசா | சகா |
| | | ரிசநீ | சகா |
| | | ரிசநிதா | மபதநீ |
| | | சநிதா | தநிசா |

* இந்த இராகத்தில் வராத சுரங்கள்.

**இணைச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| நிசகமா | கரீ | ப்ம்க்ரிச்ா | க்ா |
| சகமபா | மா | ம்க்ரிச்நீ | ச்கா |
| மபதநிச்ா | நி | ரிச்நிதா | நீ |
| நிச்க்ம்ா | க்ரீ | ச்நிதமா | பதா |
| ச்க்ம்ப்ா | ம்க்ரிச்ா | நிதமகா | ரிசகா |
|  |  | பமகரிசா | சகா |
|  |  | மகரிசநீ | சா |
|  |  | ரிசநிதா | நிசா |

**கிளைச்சுரத்தொடர்கள்:**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| பதநிசா | சா | ம்க்ரிச்ா | நிச்க்ா |
| சகமா | பா | ரிச்நீ | ச்ா |
| மபதநீ | தமா | நிதமா | கமபா |
| பதநிச்ா | நீ | தமகரீ | சகா |
| ச்க்ம்ா | க்ரிச்ா | மகரிசா | ச்கா |
|  |  | ரிசநீ | சா |

**தட்புச்சுரத்தொடர்கள் :**

| ஆ. | இணைக்கும் சுரம் | அ. | இணைக்கும் சுரம் |
|---|---|---|---|
| தநிசா | நீ | ப்ம்க்ரீ | ச்ா |
| சகா | ரீசா | க்ரிச்ா | நீ |
| கமபதா | மபா | ச்நிதா | மபா |
| தநிச்ா | ச்ா | தமகா | ரிசா |
| ச்க்ா | ரிச்ா | பமகரீ | சகமா |
|  |  | கரிசா | சா |
|  |  | சநிதா | நிசா |

ச — 11
ரி — 4
க — 3
ம — 6
ப — 2 சா — சீவசுரம்
த — 5 சா-விற்கு கிளைச்சுரம் — மா
நி — 5 மா — அமுதவைப்பு

## இராகம்: அமுதகாந்தாரி

ஆ. ச க$^{6}$ ம$^{2}$ ப த$^{2}$ நி$^{4}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ம$^{2}$ க$^{6}$ ரி$^{6}$ ச

இராக இலக்கணம் :

அமுதகாந்தாரி 32வது தாய் இராகமாகிய இராகவர்த்தினியில் பிறந்தது.

இதில் குறை கைக்கிளை (சட்சுருதி ரிஷபம்), நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), குறை உழை (சுத்த மத்யமம்), இளி (பஞ்சமம்), குறைவிளரி (சுத்த தைவதம்), குறை தாரம் (கைசிகிநிஷாதம்) ஆகிய சுரங்கள் வரும்.

இது பண்ணியல் — பண்ணியல் இராகமாகும்.

(ஷாடவ — ஷாடவ இராகம்)

ஆரோசையில் குறை கைக்கிளை (சட்சுருதி ரிஷபம்) வராது. அமரோசையில் இளி (பஞ்சமம்) வராது. இந்த இராகத்தின் சீவசுரம் — குரல் (சா). அமுத வைப்பு — உழை (மா).

இராகத்தின் போக்கு (சஞ்சாரம்) :

சாகா .. ரீ .. சா .. சாகமா .. கா .. ரீ .. சா.
சா கா ம பா ம கா .. ரீ .. சா கமபதா .. மா ..
ம ப த நீ .. தமா .. மபதநி ச்ா .. நிதமா ..
பதநிச்ா .. நிதநிச்ா .. ச்ாக்ாம்ாக்ா .. ரீ் .. ச்ா
ச்ாநீதாமா .. பதநிச்ா ..நிதமா .. மபதநீதமா ..
கா .. ரீ .. சா .. சாநீதா மா .. பாதாநீசா ..

இராகம் : அமுதகாந்தாரி தாளம் : ஆதி

முதல் நிலை

பண்ணுருவாய் மொழிமேல் வருவாய்
பதமெலாம் மேவிநீ சேர்வாய் — ஏழ்

இடை நிலை

திறமெலாம் நீயாவாய் கவியெலாம் நீயே
சேவையுன் மலரடிக் கென அருள்வாய்

இறுதி நிலை

யாழிலே உறைவாய் குழலுறுவாய் சீர்
முழவிலாவாய் சேயாவேன்
நினைவெலாம் தேனாவாய் கலையெலாம் நீயேஉன்
நேயமென் உயிர் எனக் கருள்புரிவாய்.

அருஞ்சொற்பொருள் :

பதம் — சொற்கள்
மேவி — பொருந்தி
திறம் — செம்மை, பண்ணின் திறம்
உலாம் — உலாவும்
முழவு — மிருதங்கம் முதலிய தோல் கருவிகள்
நேயம் — பக்தி

இராகம்: அமுதகாந்தாரி — 32வது மேளமாகிய இராகவர்த்தினியில் பிறந்தது.

தாளம்: ஆதி

ஆ. ச க$^{6}$ ம$^{2}$ ப த$^{2}$ நி$^{4}$ ச்

அ. ச் நி$^{4}$ த$^{2}$ ம$^{2}$ க$^{6}$ ரி$^{6}$ ச

## முதல் நிலை (பல்லவி)

; சா , கமா பா ; தா நீ | மா ; காமா | பா ; ; ;
. பண் ணுரு வாய் . மொழி மேல் . வரு வாய் . . .

